வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu வீரமலர் ஈழநாடு

Email : news@eelanadu.lk | மலர் : 06 | 15.06.2025 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 166 | பக்கங்கள் : 16




மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை


# யாழ். பொருளாதார நிலையம் ஓகஸ்ட் மாதம் முதல் இயங்கும்!

## அமைச்சர் சந்திரசேகர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 15

**யாழ்ப்பாணம் பொருளாதார மத்திய நிலையம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதல் மீண்டும் இயங்க ஆரம்பிக்கும் என்று கடற்றொழில், நீரியல் வளங்கள் அமைச்சர் இ.சந்திரசேகர் அறிவித்துள்ளார்.**

20 கோடி ரூபாய் செலவில் மட்டுவிலில் நிர்மாணிக்கப்பட்ட யாழ். பொருளாதார மத்திய நிலையம் கடந்த 2022 மார்ச்சில் திறந்து வைக்கப்பட்டது. இதனை அமைச்சர் சந்திரசேகர் தலைமையிலான குழு நேற்று சென்று பார்வையிட்டது. இதன் பின்னர், மட்டுவில் பன்றித் தலைச்சி அம்மன் கோயில் அருகேயுள்ள மண்டபத்தில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

இதன்போதே, பொருளாதார மத்திய நிலையத்தின் செயல்பாடுகளை மீள இயக்குவதற்குரிய அனைத்து நடவடிக்கைகளும் எமது ஆட்சியின் கீழ் முன்னெடுக்கப்படும் - என்று அமைச்சர் கூறினார். அத்துடன், வடக்கில் இயங்காத நிலையிலுள்ள அனைத்து தொழில் துறைகளும் மீள ஆரம்பிக்கப்படும் - என்றும் உறுதியளித்தார். (ஐ)

(தொடர்புடைய செய்தி பக்கம் 2இல்)

## ஈழத்தின் புரட்சி பாடலாசிரியர் பண்டிதர் பரந்தாமன் மறைவு!




யாழ்ப்பாணம், ஜூன் 15

ஈழத்தின் புரட்சி பாடல்கள் பலவற்றை எழுதிய பண்டிதர் வீரகத்திப்பிள்ளை பரந்தாமன் நேற்று சனிக்கிழமை புலோலியில் காலமானார்.

'மானம் ஒன்றே வாழ்வெனக் கூறி வழியில் நடந்தான் மாவீரன்...', 'நெஞ்சினில் நெருப்பேந்தி வாருங் கள்...', 'கோண மலை எங்கள் ஏணை மலை...', 'போடு போடு வீரநடை போடு...' உட்பட பல பாடல்களை எழுதியுள்ளார்.

1968ஆம் ஆண்டு முதல் மனிதரும் கடவுளும், கெரில்லா போர் விரகுகள், வேரடி வழித் தமிழ் சொற்பிறப்பியல் சிற்றகர முதலி, தமிழ்ப் பெயர் கையேடு மக்கட் பெயர் 46,000, அருகி வரும் பழந்தமிழ் பேச்சு வழக்கு சொற்பிறப்பியல் அகராதி என பல நூல்களை அவர் எழுதியும் தொகுத்தும்

15



பிரசித்தி பெற்ற பாசையூர் அந்தோனியார் ஆலய கூடு சுற்றும் திருவிழா நேற்று முன்தினம் இரவு நடைபெற்றவேளை...! (படங்கள் - ஐ. சிவசாந்தன்)

## வடக்கு பொலிஸ் நிலையங்கள் தாக்கப்படுமென எச்சரிக்கை!

### அநாமதேய அழைப்பு குறித்து விசாரணை

யாழ்ப்பாணம், ஜூன் 15

வடக்கிலுள்ள 10 பொலிஸ் நிலையங்கள்மீது தாக்குதல் நடத்தப்படும் என்று காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்துக்கு ஓர் அநாமதேய தொலைபேசி அழைப்பு வந்ததாகக் கூறப்படுகிறது.

கடந்த 11ஆம் திகதி மதியம் 1.15 மணி முதல் 1.20 மணிக்குள் இந்த அழைப்பு வந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த அநாமதேய தொலைபேசி அழைப்பு தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இதனிடையே, வடக்கில் உள்ள பொலிஸ் நிலையங்களில் பாதுகாப்பும் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ)

## நாங்கள் வாக்களித்திருந்தால் தமிழ் கட்சிகளின் கனவு சிதைந்திருக்கும்!

### தேசிய மக்கள் சக்தி கட்சி சொல்கிறது

தென்மராட்சி, ஜூன் 15

"உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைப்பது தொடர்பில் தெற்கில் கடைப்பிடித்த அணுகுமுறையை இதுவிடயத்தில் நாம் வட, கிழக்கில் கடைப்பிடிக்கவில்லை. இங்கு நடுநிலை வகித்தோம். நாம் வாக்கெடுப்பில் பங்கேற்றிருந்தால் இங்குள்ள தமிழ் கட்சிகளின் கனவு சிதைக்கப்படும். மனக்கோட்டை மண்கோட்டையாக மாறிவிடும்", - என்று கடற்றொழில் அமைச்சர் இ. சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், தமிழ்த் தேசியப்

15

உள்ளூராட்சி சபைக்கு தெரிவான

## 223 உறுப்பினர்களின் பெயர்கள் இன்னமும் கிடைக்கவில்லை

கொழும்பு, ஜூன் 15

உள்ளூராட்சி மன்றங்களுக்கு தெரிவான 223 உறுப்பினர்களின் பெயர்கள் இன்னுமும் கிடைக்கப் பெறவில்லை என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர். எம். ஏ. எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இவ்வாறு அறிவிக்கப்படாத உறுப்பினர்களின் பெயர்களை உடனடியாக தேர்தல்கள் திணைக்களத்துக்கு வழங்குமாறு அரசியல் கட்சிகளுக்கு மீண்டும் அறிவித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இதுவரை கிடைக்கப்பெற்ற மேலும் 107 உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் பெயர்கள் நேற்றைய தினம் (நேற்று முன்தினம்) அரச அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் நேற்று

15

## யாழ். - கொழும்பு அதிவேக தினசரி ரயில் சேவை

கொழும்பு, ஜூன் 15

கொழும்பு - காங்கேசன்துறை அதிவேக ரயில் சேவை மீண்டும் தினசரி இயங்கும் என்று புகையிரத திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொழும்பு - காங்கேசன்துறை அதிவேக ரயில் சேவை தற்போது வார இறுதி நாட்களில் மட்டுமே இயக்கப்படுகிறது. இந்த நிலையில், இந்த

15

## கடற்படைக்கு காணி சுவீகரிப்பு; நாங்கள் அனுமதிக்க மாட்டோம்!

### செல்வம் அடைக்கலநாதன் எம். பி.

மன்னார், ஜூன் 15

"மன்னார் - பள்ளிமுனையில் கடற்படைக்கு காணி சுவீகரிக்கும் முயற்சி உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். மக்களுக்கு சொந்தமான அந்தக் காணிகளை கடற்படை அபகரிப்பதை நாம் அனுமதிக்க மாட்டோம். அந்தக் காணிகள் உரிமையாளர்களிடம் வழங்கப்பட வேண்டும்", என்று ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

15

## பொன்னாலை காட்டுக்குள் சிக்கியது 240 கிலோ கஞ்சா!

- த.பிரதீபன் -

யாழ்ப்பாணம், ஜூன் 15

பொன்னாலை காட்டு பகுதியூடாக கஞ்சா கடத்த மேற்கொள்ளப்பட்ட முயற்சி முறியடிக்கப்பட்டு, 240 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற இந்த சம்பவம் தொடர்பில் மாதகலை சேர்ந்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

போதைப்பொருள் தடுப்பு பிரிவினருக்கு

15

## என்னை கைது செய்வதற்கு முயற்சிகள் நடக்கின்றன!

### உதய கம்மன்பில தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 15

ஜனாதிபதி தனது ஜேர்மன் பயணத்தில் விடுதலை புலிகள் அமைப்பின் நெடியவன் என்பவரை சந்திக்கவுள்ளாரென சமூக வலைத்தளங்களில் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன என்று நான் தெரிவித்திருந்தேன். இதனை அடிப்படையாக்க கொண்டு நான் இனவாதத்தை தூண்டுவதாகக் குறிப்பிட்டு என்னை கைது செய்வதற்கான முயற்சிகள் நடக்கின்றன - இவ்வாறு முன்னாள் அமைச்சரும் பிவிதுரு ஹெல உறுமயவின்

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவியில் உயிர்வாழ்வதே தமிழ் அரசியல்வாதிகளின் குறிக்கோள்

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் விசனம்




வவுனியா, ஜூன் 15

தமிழ் அரசியல்வாதிகளின் ஒரே குறிக்கோள் பதவியில் உயிர்வாழ்வதே. அவர்கள் எந்த தொலைநோக்கு பார்வையும் இல்லாதவர்கள். இதனால் நாங்கள் அவர்கள் மீது நம்பிக்கை வைக்கவில்லை என தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கம் தெரிவித்துள்ளது.

வவுனியாவில் நேற்று அவர்களால் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு கூறினர்.

போரின் இறுதிக் கட்டத்தின் போதும் அதற்குப் பின்னரும் வலுக்கட்டாயமாக காணாமல் ஆக்கப்பட்ட குழந்தைகளின் தாய்மார்களான எங்கள் போராட்ட பயணம் 3036ஆவது நாளாக தொடர்கிறது.

எங்கள் குழந்தைகளை கண்டுபிடிக்க வேண்டுமென்றதவிப்போடு மட்டுமன்றி, இனப்படுகொலையிலிருந்து எதிர்காலத் தலைமுறையினரைப் பாதுகாக்கவும் தமிழர் இறையாண்மைக்கு சர்வதேச ஆதரவைக் கோரவும் அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் எங்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறும் அழைப்பு விடுக்கிறோம்.

அரசியல் தீர்வு ஒன்று தேவை என யுத்தத்தின் போது

இலங்கை அரசுக்கும் அதன் பின்னணியில் இருந்த பங்களிப்பாளர்களுக்கும் ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தியது. ஆனால், இன்று வரை எந்தத் தீர்வும் இல்லை. எங்கள் கண்ணீர் மட்டும் தொடர்கிறது.

இன்று அமைதிக்குப் பதிலாக, இலங்கையின் வடக்கு - கிழக்கு இராணுவ ஆக்கிரமிப்பின் கீழ் உள்ளது. புலனாய்வு அமைப்புகள், பொதுமக்களின் வாழ்க்கையை ஆதிக்கம் செலுத்துகின்றன. அதே நேரத்தில் அரசுடன் தொடர்புடைய போதைப்பொருள் வலையமைப்புகள் மற்றும் பாலியல் சுரண்டல் தமிழ் இளைஞர்களையும் பெண்களையும் அச்சுறுத்துகின்றன.

நாங்கள் தமிழ் அரசியல்வாதிகள் மீது நம்பிக்கை வைக்கவில்லை. அவர்களின் ஒரே குறிக்கோள் பதவியில் உயிர்வாழ்வது என்று தெரிகிறது. அவர்கள் எந்த தொலைநோக்கு பார்வையையும், தைரியத்தையும், சர்வதேச ஈடுபாட்டின் மூலம் இறையாண்மையைப் பெற்ற பிற ஒடுக்கப்பட்ட நாடுகளிடமிருந்து கற்றுக்கொள்ள எந்த முயற்சியையும் காட்டவில்லை.

அவர்கள் ஐரோப்பிய ஒன்றியத்தை பொறுப்பேற்க வைக்கவோ அல்லது போருக்குப் பிறகு தமிழ் மக்கள் அனுபவித்த துரோகத்தை சர்வதேச சமூகத்துக்கு நினைவூட்டவோ தவறிவிட்டனர்.

எனவே, தாயகத்திலும் புலம்பெயர் நாடுகளிலும் உள்ள ஒவ்வொரு தமிழரும் எழுந்து சர்வதேச ஈடுபாட்டைக் கோர வேண்டும் என்றும் நாங்கள் அழைப்பு விடுக்கிறோம்.

தமிழர் இறையாண்மை மட்டுமே தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும், முழுக் குடிமக்களுக்கும் நிலையான அமைதியை கொண்டு வரும்- என்றனர்.


(எ-10)

## கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு

# பாலை மரத் தீராந்திகளை கடத்திய இளைஞன் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 15

கிளிநொச்சி- முட்கொம்பன் பகுதியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு பாலை மரத் தீராந்திகளை கடத்தி வந்த ஒருவர் பொலிஸாரால் நேற்றையதினம் கைது செய்யப்பட்டுள்ளார்.



சூட்சுமமான முறையில் கப் ரக வாகனத்தின் கீழ் தீராந்திகளை மறைத்து கொண்டு வந்தவேளை, சாவகச்சேரி பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் சங்குப்பிட்டியில் கடமையிலிருந்த பொலிஸாரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இதன்போது, விசுவமடுவைச் சேர்ந்த 28 வயதுடைய இளைஞன் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(எ-05)

# வவுனியாவில் ஓட்டோக்களுக்கு மீற்றர் பூட்டும் செயல்பாடு ஆரம்பம்




வவுனியா, ஜூன் 15

வவுனியாவில் சேவையில் ஈடுபடும் ஓட்டோக்களுக்கு மீற்றர் பூட்டும் செயல்பாடு நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஓட்டோ உரிமையாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் எஸ். ரவீந்திரன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. இதுவரை காலமும் வவுனியா மாவட்டத்தில் ஓட்டோக்களுக்கு மீற்றர் பொருத்தாமையால் பயணிகள் அசௌகரியங்களை எதிர்கொண்டிருந்தனர்.

இதனைக் கருத்தில் கொண்டு நேற்று முதல் வவுனியாவில் சேவையில் ஈடுபடும் ஓட்டோக்களுக்கு மீற்றர் பூட்டும் செயல்பாடு முன்னெடுக்கப்பட்டது.

முதலாவது கிலோ மீற்றருக்கு 130 ரூபாயும் இரண்டாவது கிலோ மீற்றரிலிருந்து கிலோ மீற்றருக்கு 100 ரூபாயும் அறவிடுவதற்கான திட்டமும் இதன் மூலம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

(எ-10)

## மட்டுவிலில் அமைந்துள்ள

# யாழ். பொருளாதார மத்திய நிலையத்தை மீள இயக்குவதற்கு நேற்று தீர்மானம்

யாழ்ப்பாணம், ஜூன் 15

மட்டுவிலில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் பொருளாதார மத்திய நிலையத்தை மீள இயக்குவதென்று யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும் அமைச்சருமான இராமலிங்கம் சந்திரசேகர் மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் ஆகியோரின் பங்கேற்புடன் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மட்டுவிலில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் பொருளாதார மத்திய நிலையத்தை, ஆளுநர், அமைச்சர், பாராளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரன், யாழ். மாவட்ட பதில் அரசாங்க அதிபர் ம. பிரதீபன், சாவகச்சேரி பிரதேச செயலாளர், சாவகச்சேரி பிரதேச சபையின் செயலாளர், மாகாண மற்றும் மாவட்ட விவசாயத் திணைக்களப் பணிப்பாளர்கள், பொருளாதார மத்திய நிலையத்தில் கடைகளைப் பெற்றுக் கொண்டவர்கள் ஆகியோர் நேற்றுச் சனிக் கிழமை நேரில் சென்று பார்வையிட்டனர். இதன் பின்னர் மட்டுவிலில் பன்றித்தலைச்சி அம்மன் கோவில் அருகில் உள்ள மண்டபத்தில் கலந்துரையாடல் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலின் ஆரம்பத்தில் கருத்துத் தெரிவித்த அமைச்சர் இ. சந்திரசேகர், இந்தப் பொருளாதார மத்திய நிலையத்தை மீள இயக்க வேண்டும் என்று மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது. இதற்கமைவாக வியாபாரிகளுடன் கலந் துரையாடலை நடத்துகின்றோம்.

இலங்கையின் ஏனைய இடங்களில் உள்ள பொருளாதார மத்திய நிலையங்கள் அமைந்துள்ள இடங்களைவிட இந்தப் பொருளாதார மத்திய நிலையம் அமைந்துள்ள இடம் சிறப்பானது. வீதியோரத்தில் அமையப்பெற்றிருக்கின்றது. ஏனைய இடங்களிலும் பொருளாதார மத்திய நிலையங்கள் அமைக்கப்படும்போது அந்தப் பிரதேசங்கள் பிரபல்யமானவையாக இருக்கவில்லை. காலப் போக்கில்தான் அவை பிரபல்யமடைந்தன. அதேபோன்று எதிர்காலத்தில் இந்தப் பொருளாதார மத்திய நிலையமும் மாற்றமடையும் எனக் குறிப்பிட்டார்.

(எ-05)



# யாழ். ஒருங்கிணைப்புக்குழு அலுவலகம் நேற்று திறப்பு



யாழ்ப்பாணம், ஜூன் 15

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு அலுவலகம் நேற்றைய தினம் மாவட்ட செயலகத்தில் கடற்றொழில் அமைச்சரும் ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான இராமலிங்கம் சந்திரசேகரால் திறந்து வைக்கப்பட்டது.

இதன்போது, மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு அலுவலகத்தின் இணைப்பாளராக சுந்தரமூர்த்தி கபிலனுக்கு அமைச்சரால் நியமனக் கடிதம் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில், பாராளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரன், பதில் அரசாங்க அதிபர் ம. பிரதீபன், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) க. சிறீமோகனன், திட்டமிடல் பணிப்பாளர் இ சுரேந்திரநாதன், பிரதம கணக்காளர் எஸ். கிருபாகரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

(எ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பதில் பாதுகாப்பு அமைச்சர் துருக்கி தூதுவர் சந்திப்பு

கொழும்பு, ஜூன் 15

துருக்கி குடியரசின் தூதுவர் செமிஹ் லுட்பு துர்குட், பதில் பாதுகாப்பு அமைச்சர் அருண ஜயசேகரவை நேற்று முன்தினம் கொழும்பில் உள்ள அவரது அலுவலகத்தில் சந்தித்தார்.

இலங்கைக்கும் துருக்கிக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதில் கவனம் செலுத்தி இருவரும் கலந்துரையாடினர்.

பாதுகாப்பு ஒத்துழைப்பு, பயிற்சி வாய்ப்புகள் மற்றும் கடல்சார் பாதுகாப்பு போன்ற முக்கிய துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதில் பரஸ்பர ஆர்வத்தை இரு தரப்பினரும் வலியுறுத்தினர். இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால மற்றும் நட்பு உறவுகளை மேலும் வளர்ப்பதற்கான துருக்கியின் உறுதிப்பாட்டை தூதுவர் மீண்டும் வலியுறுத்தினார். (எ)

# வாக்குறுதியளித்த முறைமையில் மாற்றத்தை கொண்டு வாருங்கள்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 15

**தற்போதைய அரசாங்கம் முறைமையில் மாற்றத்தைக் கொண்டு வருவதாக உறுதியளித்திருந்தாலும் இன்றுவரை ஜனாதிபதி பொது மன்னிப்பு மூலம் கைதிகளை விடுவிப்பதற்கான முறைமையில்கூட எந்த மாற்றத்தையும் கொண்டு வரவில்லை என்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சாடியுள்ளார்.**



ஜனாதிபதிக்கோ அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கோ தெரியாமல் கைதிகள் விடுவிக்கப்படுகிறார்கள். துறைமுகத்திலிருந்து 323 சிவப்பு முத்திரை பதிக்கப்பட்ட கொள்கலன்கள் கூட விடுவிக்கப்பட்டுள்ளன. ஊழல் ஆட்சி முறைமையில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் கைதிகள் விடுவிக்கப்படுவது குறித்துக் கூட ஜனாதிபதியும் சம்பந்தப்பட்ட ஏனைய அதிகாரிகளும் அறியாதிருக்கும் சந்தர்ப்பத்தில், கொள்கலன் விடுவிப்புக்கு எவ்வாறு பொறுப்புக்கூற முடியும்? 323 சிவப்பு முத்திரை பதிக்கப்பட்ட கொள்கலன்கள் என்பதை தெரியாமலா விடுவிக்கப்பட்டுள்ளன என்பது குறித்து பிரச்னை எழுந்துள்ளது. இந்தக் கொள்கலன்களில் உள்ள பொருட்களுக்கு யார் பொறுப்பு என்பதை வெளிக்கொணர வேண்டியுள்ளது.

வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக சிரேஷ்ட பிரஜைகளின் சேமிப்புகளுக்கான வட்டி விகிதத்தையும் இந்த அரசாங்கம் அதிகரிக்கவில்லை. சகல அரசாங்கங்களும் இவர்களின் சேமிப்புகளுக்கான 15 சதவீத வட்டியை வழங்கியுள்ளன. ஆனால், இந்த அரசாங்கத்தின் கீழ் அது கிடைக்காது போயுள்ளது. இங்கும் முறைமையில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. பொய்யும் மோசடியும் ஏமாற்றுமே நடந்து வருகின்றன. முறைமையில் எந்தவித மாற்றமும் செய்யப்படவில்லை. மக்கள் எதிர்பார்த்த முறைமையில் மாற்றம் இது வல்ல. எனவே, இப்போதாவது நாட்டு மக்களை ஏமாற்றுவதை விடுத்து, யதார்த்தமாக நடந்து கொள்ளுமாறு அரசாங்கத்தை கேட்டுக் கொள்கிறோம் என சஜித் மேலும் தெரிவித்தார்.

கொழும்பில் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

(எ)

# "ஈரானின் தாக்குதலால் இஸ்ரேலிலுள்ள இலங்கையர்களுக்கு பாதிப்பு இல்லை"

டெல் அவிவ், ஜூன் 15

ஈரான் நடத்திய தாக்குதல்களால் இஸ்ரேலிலுள்ள இலங்கையர்களுக்கு பாதிப்பு ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலின் டெல் அவிவ் மற்றும் ஜெருசலேம் அருகே உள்ள பகுதிகளில் ஈரான் பல பாலிஸ்டிக் ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தி வருவதாக இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் நிமல் பண்டாரா தெரிவித்துள்ளார்.

ஈரான் மற்றும் இஸ்ரேல் இடையே அதிகரித்து வரும் போர் காரணமாக இஸ்ரேலில் ஏற்பட்டுள்ள சமீபத்திய நிலைமையை விளக்கும்போது அவர் இவ்வாறு கூறினார்.

இலங்கை தூதுவர் மேலும் கூறுகையில்,

நாங்கள் வசிக்கும் டெல் அவிவின் வடக்கே உள்ள ஹெர்ஸ்லியா பகுதியில் ஏவப்பட்ட ஏவுகணைகளை இஸ்ரேலிய விமானப்படை மற்றும் இரும்பு டோம் வான் பாதுகாப்பு அமைப்பு அழிக்கும் போது சுவர்கள் அதிர்ந்தன. வீடுகளின் கண்ணாடிகள் குலுங்கின. பல பகுதிகளில் கட்டடங்கள் மற்றும் வாகனங்கள் தீப்பிடித்து எரிந்ததாக கூறப்படுகிறது. 50இற்கும் மேற்பட்டோர் காயமடைந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

காயமடைந்தவர்களில் இலங்கையர்கள் யாரும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இஸ்ரேலிய பாதுகாப்புப் படைகளால் பிரகடனப்படுத்தப்பட்ட அவசரகால நிலை தொடர்ந்து அமுலில் உள்ளது.

டெல் அவிவ் சர்வதேச விமான நிலையமும் இஸ்ரேலிய வான்வெளியும் மூடப்பட்டுள்ளன.

இலங்கையில் இருந்து இஸ்ரேலுக்கு பயணித்த மூன்று இலங்கையர்கள் டுபாய் விமான நிலையத்தில் சிக்கியுள்ளனர். அவர்கள் தொடர்பில் டுபாயில் உள்ள துணைத் தூதரகமும் அபுதாபி விமான நிலையத்தில் சிக்கித் தவிக்கும் ஐந்து இலங்கையர்கள் தொடர்பில் இலங்கைத் தூதரகமும் ஒருங்கிணைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

அவர்களுக்கு தற்காலிக தங்குமிட விசாக்கள் மற்றும் தங்குமிட வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. இலங்கையில் தற்போது விடுமுறையில் உள்ள அனைவரும் தங்கள் கடவுச்சீட்டின் நகலையும் இஸ்ரேலுக்குள் மீண்டும் நுழைவதற்காக வழங்கப்பட்ட விசாவின் நகலையும் தூதரகத்துக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இது அவர்களின் மீள் நுழைவு விசாவை நீடிக்க உதவும்.

தூதரக அதிகாரிகள் நிலைமையைக் கண்காணித்து வருகின்றனர். உதவி தேவைப்படுபவர்கள் தூதரக அதிகாரிகளைத் தொடர்பு கொள்ளலாம் என்றும் அவர் கூறினார். (எ)

# கை, கால் கட்டப்பட்ட நிலையில் வீட்டு பராமரிப்பாளர் கொலை!

புத்தளம், ஜூன் 15

புத்தளம் - வென்னப்புவை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட உல்ஹிட்டியாவ பிரதேசத்தில் உள்ள வீடொன்றின் பராமரிப்பாளர் கை, கால்கள் கட்டப்பட்டு கொலை செய்யப்பட்டதாக வென்னப்புவை பொலிஸார் தெரிவித்தனர்.

கொலை செய்யப்பட்டவர் மாரவில பிரதேசத்தைச் சேர்ந்த 64 வயதுடையவர் என பொலிஸார் கூறினர்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

இந்த வீட்டின் உரிமையாளர் குடும்பத்துடன் இத்தாலியில் வசிப்பதால் கொலைசெய்யப்பட்ட நபரே வீட்டை பராமரித்து வந்தார்.

இத்தாலியில் வசிக்கும் வீட்டு உரிமையாளரின் உறவினர் ஒருவர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இந்த வீட்டுக்குச் சென்று பார்த்த போது பராமரிப்பாளர் சடலமாக கிடப்பதை கண்ட நிலையில் உடனடியாக பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார்.

இதனையடுத்து பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் வீட்டில் இருந்த வான் திருடப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

மேலும் இந்தச் சம்பவம் தொடர்பில் இதுவரை சந்தேக நபர்கள் எவரும் கைதுசெய்யப்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# சீன கம்யூனிஸ்ட் கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையே சந்திப்பு

பீஜிங், ஜூன் 15

மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா மற்றும் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் குய்சோ குழுவின் செயலாளர் க்ஷியு லின் ஆகியோருக்கிடையில் விசேட சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

சீனாவின் குய்சோ பகுதியில் உள்ள மாநாட்டு மண்டபத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பின் போது ரில்வின் சில்வா மற்றும் க்ஷியு லின் ஆகியோருக்கிடையில் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர்களும் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

இதன்போது சீன கம்யூனிஸ்ட் கட்சியின் குய்சோ குழுவின் செயலாளர் க்ஷியு லின், மக்கள் விடுதலை முன்னணி தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் வெற்றிக்கு தனது



வாழ்த்துகளை தெரிவித்தார்.

இரு கட்சிகளுக்கும் இடையிலான நட்புறவை வலுப்படுத்துவதற்கான செயல்பாடுகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டன.

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் ஊடாக சீனாவுக்கும் இலங்கைக்கும் பல நன்மைகள் கிடைத்துள்ளதாகவும் இருதரப்பு உறவுகள் மேலும் வலுவூட்டப்பட்டுள்ளதாகவும் ரில்வின் சில்வா தெரிவித்தார். (எ)

# துப்பாக்கி திடீரென செயலிழந்ததால் தோல்வியில் முடிந்த கொலை திட்டம்

கொழும்பு, ஜூன் 15

கொழும்பு - மருதானை, பஞ்சிகாவத்தை அம்மன் கோவிலுக்கு அருகில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு இனந்தெரியாத இருவர் நபரொருவரை இலக்கு வைத்து துப்பாக்கிச் சூடு மேற்கொள்ள முயன்ற நிலையில் துப்பாக்கி திடீரென செயலிழந்ததால் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளதாக மருதானை பொலிஸார் தெரிவித்தனர்.

மருதானை, பஞ்சிகாவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த நபரொருவரை இலக்கு வைத்தே கொலை முயற்சி இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

மருதானை, பஞ்சிகாவத்தை அம்மன் கோவிலுக்கு அருகில் மோட்டார் சைக்கிளில் சென்ற இனந்தெரியாத இருவர் ஓட்டோ ஒன்றை பழுது பார்த்துக்கொண்டிருந்த நபரொருவரை இலக்கு வைத்து துப்பாக்கிச் சூடு மேற்கொள்ள முயன்றுள்ளனர்.

இதன்போது துப்பாக்கிதாரிகளிடமிருந்த துப்பாக்கி செயலிழந்ததால் அவர்கள் இருவரும் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிதாரிகள் இருவரும் தப்பிச் செல்லும்போது அவர்களிடம் இருந்த தோட்டா ஒன்று தரையில் விழுந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மருதானை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளையான் தரப்புக்கு ஆதரவு ஜனாவுக்கு எதிராக நடவடிக்கை

### ஜனநாயக தமிழ்த்தேசியக் கூட்டணி அறிவிப்பு

மட்டக்களப்பு, ஜூன் 15

அநுர, பிள்ளையான் தரப்புக்கு ஆதரவாக செயல்பட்ட ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ரெலோவின் செயலாளர் நாயகம் கோவிந்தன் கருணாகரத்துக்கு (ஜனா) எதிராக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அந்தக் கூட்டணி அறிவித்துள்ளது.



மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை தெற்கு எருவில் பற்று பிரதேச சபைக்கான தவிசாளர் தெரிவின்போது தேசிய மக்கள் சக்தி மற்றும் தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சி என்பன இணைந்து களமிறக்கிய வேட்பாளருக்கு ஆதரவாக வாக்களிப்பதற்கு மாவட்டக் கிளைத் தலைவர் என்ற அடிப்படையில் உறுப்பினர்களுக்கு வழிகாட்டலை வழங்கியமை தொடர்பிலேயே அவருக்கு எதிராக மேற்குறிப்பிட்டவாறு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

அண்மையில் நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை தெற்கு எருவில் பற்று பிரதேச சபையில் இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி 11, 981 வாக்குகளைப் பெற்று 8 ஆசனங்களையும் தேசிய மக்கள் சக்தி 3, 894 வாக்குகளைப்பெற்று 6 ஆசனங்களையும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி 3,894 வாக்குகளைப்பெற்று 2 ஆசனங்களையும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி, ஐக்கிய மக்கள் சக்தி, சுயேச்சைக்குழு 1 மற்றும் சுயேச்சைக்குழு 2 என்பன முறையே 1967, 1286, 809, 1174 வாக்குகளைப்பெற்று தலா ஓர் ஆசனத்தையும் கைப் பற்றின.

இந்த நிலையில், அப்பிரதேச சபைக்கான தவிசாளர் மற்றும் உப தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான வாக் கெடுப்பு கடந்த வியாழக்கிழமை நடத்தப்பட்டது.

இதன்போது, 6 ஆசனங்களைக்கொண்ட தேசிய மக்கள் சக்தி மற்றும் 2 ஆசனங்களைக் கொண்ட தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி என்பன இணைந்து களமிறக்கிய தவிசாளர் வேட்பாளருக்கு ஆதரவாக ஒரு ஆசனத்தைப்பெற்ற ஜனநாயக தமிழ்த்தேசியக் கூட்டணியின் உறுப்பினர் வாக்களித்தார். இதன்விளைவாக அப்பிரதேச சபை தேசிய மக்கள் சக்தி வசமானது.

இந்த நிலையில், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் மட்டக்களப்பு மாவட்டக் கிளைத் தலைவர் என்ற ரீதியில் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்ற வழிகாட்டலை வழங்கினார் எனும் அடிப்படையிலேயே கோவிந்தன் கருணாகரத்துக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாக அந்தக் கூட்டணி அறிவித்துள்ளது.(எ)



# வீட்டின் மீது மோதிய இ. போ. ச. பேருந்து

### நுவரெலியாவில் சம்பவம்

நுவரெலியா, ஜூன் 15

நுவரெலியா, மல்உல்ல பிரதேசத்தில் ஹங்குரன்கெத்த - அதிகாரிகம வீதியில் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பேருந்து ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்து நேற்றுச் சனிக்கிழமை காலை 06. 30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பேருந்து ஒன்று வீதியை விட்டு விலகி அருகிலிருந்த வீடொன்றின் மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

நுவரெலியாவில் நிலவும் கடும் மழையுடனான வானிலை காரணமாக இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நாட்டில் பஸ் விபத்துக்கள் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ)

விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கை:

# போதைப்பொருட்களுடன் மேலும் 372 பேர் சிக்கினர்

கொழும்பு, ஜூன் 15

நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது போதைப்பொருட்களுடன் மேலும் 372 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி, ஹெரோயின் போதைப்பொருளுடன் 110 பேரும் ஐஸ் போதைப்பொருளுடன் 138 பேரும் கஞ்சாவுடன் 124 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது 132 கிராம் 376 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருளும் 236 கிராம் 404 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருளும் 92 கிலோ 200 கிராம் 783 மில்லி கிராம் கஞ்சாவும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (எ)

# மதுபோதையிலிருந்ததால் ஆள்மாறி நடந்த கொலை!

### மின்சார சபை ஊழியர் கொலை பிரதான சந்தேகநபர் வாக்குமூலம்

கொழும்பு, ஜூன் 15

மின்சார சபை ஊழியர் ஒருவர் வெட்டிக் கொல்லப்பட்ட சம்பவம் ஆள்மாறி இடம் பெற்றதாக, அந்தக் கொலை தொடர்பில் கைது செய்யப்பட்ட பிரதான சந்தேகநபர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த 7ஆம் திகதி களுத்துறை - பனாப்பிட்டி பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

அன்றைய தினம் மின்சார சபை ஊழியரின் வீட்டுக்குள் நுழைந்த சிலர் அவரை வெட்டிக் கொன்றுவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இது தொடர்பில், விசாரணை நடத்திய பொலிஸார் களுத்துறை - மின்னேரிதென்ன பிரதேசத்தில் வைத்து பிரதான சந்தேகநபரை கைது செய்தனர்.

இந்தக் கொலைக்கு பயன்படுத்தப்பட்ட கூரிய ஆயுதமும் முச்சக்கரவண்டியும் சந்தேக நபரிடமிருந்து கைப்பற்றப்பட்டன. கைதான சந்தேகநபர் ஆள் மாறி தவறுதலாக இந்தக் கொலை இடம்பெற்றதாக பொலிஸாருக்கு அளித்த வாக்கு மூலத்தில் தெரிவித்துள்ளார்.

சம்பவ தினத்தன்று தானும் தனது சகாக்களும் மதுபோதையில் இருந்ததால் இந்த தவறு இடம்பெற்றதாகவும், வெளிநாட்டில் உள்ள போதைப் பொருள் கடத்தல்காரர் ஒருவரின் ஒழுங்கமைப்பிலேயே கொலை திட்டம் தீட்டப்பட்டதாகவும் அந்த வாக்கு மூலத்தில் சந்தேகநபர் குறிப்பிட்டுள்ளார். (இ)

# 180 வகை அத்தியாவசிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

கொழும்பு, ஜூன் 15

மத்திய மருந்து சேமிப்பு கட்டமைப்பில் சுமார் 180 அத்தியாவசிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. அத்துடன், மருத்துவமனைக் கட்டமைப்புக்கு உள்ளும் சுமார் 50 வகையான அத்தியாவசிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மருத்துவர் சமில் விஜயசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் வெள்ளிக்கிழமை நடத்திய செய்தியாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

மத்திய மருந்து சேமிப்பு கட்டமைப்பில் சுமார் 180 அத்தியாவசிய மருந்துகள் பற்றாக்குறையாக உள்ளன. மருத்துவமனை கட்டமைப்புக்கு உள்ளும் சுமார் 50 வகையான அத்தியாவசிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது.

குறிப்பாக, வலி நிவாரணிகள், நுண்ணுயிர் எதிர்ப்பிகள், இரத்த அழுத்தம், நீரிழிவு மற்றும் சிறுநீரகம் தொடர்பான நோய்களுக்கான மருந்துகளுக்கும் பற்றாக்குறை நிலவுகிறது. புற்றுநோய் சிகிச்சை மருந்துகளின் பற்றாக்குறை அதிகரித்து வருவதையும் அவதானிக்க முடிகிறது. இது, பல நோயாளிகளுக்கு சிகிச்சையளிப்பதற்கான அணுகலையும் கட்டுப்படுத்தியுள்ளது.

அத்தகைய மருந்துகளை தனிப்பட்ட முறையில் வாங்குவது பெரும்பாலும் கட்டுப்படியாகாது. இந்த நெருக்கடி, பாதிக்கப்பட்டவர்களின் சுமையை மேலும் அதிகரிக்கிறது. கடந்த காலங்க ளில் ஏற்பட்ட மருந்து பற்றாக்குறையிலிருந்து பாடம் கற்றுக் கொள்ளத் தவறியமையாலேயே இந்தப் பிரச்னை தொடர்ந்தும் தீர்க்கப்படாமலுள்ளது.

2024ஆம் ஆண்டு கொள்முதல் தாமதங்கள்தான் இதற்கு காரணம் என்று சுகாதார அமைச்சர் ஒப்புக்கொண்டுள்ளார். எனவே, இந்த பிரச்னை தொடர்பில் சுகாதார அமைச்சரும் ஜனாதிபதியும் பொறுப்பை ஏற்கவேண்டும் என வலியுறுத்துகிறோம். இந்தப் பிரச்னை ஏன் முன்னரே கண்டறியப்பட வில்லை?

தற்போதைய மருந்து பற்றாக்குறைகள் அவசரகால கொள்முதல் நடைமுறைகளை நம்பியிருப்பதற்கு வழிவகுக்கும். இது, பொது நிதியை தவறாகப் பயன்படுத்துவது குறித்த கவலைகளை எழுப்புகிறது.

அந்த வகையில் இது அவசரகால கொள்முதல் நாடகத்துக்கு தெளிவாக வழிவகுக்கிறது. மருந்துகள் கிடைக்கவில்லை, முற்பதிவுகள் தாமதமானால் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், சுகாதார அமைச்சு அவசரகால கொள்முதல்களுக்கு செல்ல வேண்டியிருக்கும் - என்றார். (ஐ)

# மின்சார சபையை தனியாருக்கு விற்பனை செய்ய அரசு திட்டம்

கொழும்பு, ஜூன் 15

அரசாங்கம் சமர்ப்பித்திருக்கும் மின்சார சபை திருத்தச் சட்டமூலம் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் கொண்டு வந்திருந்த சட்ட மூலத்தின் பிரதியாகும். மின்சார சபையை தனியாருக்கு விற்பனை செய்வதே அரசாங்கத்தின் திட்டமாகும் என முன்னிலை சோசலிச கட்சியின் அரசியல் சபை உறுப்பினர் துமிந்த நாகமுவ தெரிவித்தார்.

உத்தேச மின்சார சபை சட்டமூலத்தில் திருத்தம் மேற்கொள்ள அரசாங்கம் எடுத்து வரும் நடவடிக்கை தொடர்பில் கொழும்பில் வெள்ளிக்கிழமை ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை மின்சார சபை சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறது.

புதிய சட்டமூலத்தில் மின்சாரசபை நிறுவனங்களை 6 துண்டுகளாக பிரித்திருக்கிறது.

இரண்டு வருடங்களுக்கு பிறகே இந்த நிறுவனங்களை எத்தனை துண்டுகளாக பிரிப்பது எனத் தீர்மானிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேநேரம் துண்டுகளாக பிரிக்கப்படும் பகுதிகள் நிறுவனங்களாக மாற்றப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது நிறுவனங்களாக மாற்றப்பட்டால், அதனை விற்பனை செய்வது என்பது உறுதியாகும். இதனை யாராலும் தடுக்க முடியாது. கூட்டாக செயல்படும் நிறுவனத்தை துண்டுகளாக பிரிப்பதற்கே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
15.06.2025 ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம், ஆனி 01

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## எத்தனை ஆணையாளர்கள் வரினும்...!

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வோல்கர் டர்க் இலங்கைக்கு வருகை தரவுள்ளார். அவர் வடக்குக்கும் வரவுள்ளார். உள்நாட்டு யுத்தம் முடிவுற்றதன் பின்னர் முதன்முதலாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கைக்கு வருகை தந்திருந்தார். சிவில் சமூக குழுக்கள் மற்றும் பாதிக்கப்பட்ட மக்களை அவர் சந்தித்து கலந்துரையாடியிருந்தார். அதன் பின்னர், மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் ஹுசைன் இலங்கைக்கு வருகை தந்திருந்தார். அவருடனும் பலரும் புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.

இப்போது மூன்றாவது தடவையாக இன்னோர் ஆணையாளர் நிலைமைகளை ஆராயவுள்ளார். இறுதி யுத்தத்தின்போது, யுத்த வலயத்துக்குள் அகப்பட்டிருந்த மக்களை பாதுகாக்கும் விடயத்தில் ஐக்கிய நாடுகள் சபை சரியாக செயல்படவில்லை என்னும் குற்றச்சாட்டு உண்டு. பின்னர் இது தொடர்பில் இடம்பெற்ற ஐ. நா.வின் உள்ளக விசாரணை ஒன்றின் மூலம் இந்த விடயம் உறுதிப்படுத்தப்பட்டது.

ஆனால், ஐக்கிய நாடுகள் சபை ஏற்கனவே அதன் தோல்வியை பதிவு செய்திருக்கிறது. ருவாண்டா இனப் படுகொலையின்போதும் ஐக்கிய நாடுகள் சபை படுமோசமான தோல்வியை பதிவு செய்திருந்தது. குவாட்டமாலாவில் மாயன் பழங்குடி மக்கள் கொலை செய்யப்பட்டபோதும் ஐ. நா. வேடிக்கை பார்த்துக் கொண்டுதான் இருந்தது. இந்தப் பின்புலத்தில் நோக்கினால் ஐக்கிய நாடுகள் சபை தோல்வியடைந்த இறுதி இடம் முள்ளிவாய்க்கால் அல்ல. இன்றைய உலக நிலைமைகளை உற்று நோக்கினால் இப்போதும் உக்ரைனில், காசாவில் ஐக்கிய நாடுகள் சபை பார்த்துக் கொண்டிருக்கும்போதுதான் அனைத்தும் நடந்து கொண்டிருக்கின்றன. அங்கெல்லாம் ஐ.நா. தோற்றுக் கொண்டிருக்கிறது.

நவிப்பிள்ளையின் வருகையின்போது, வடக்கு, கிழக்கை சேர்ந்த சிவில் சமூக பிரதிநிதிகளை சந்தித்து நிலைமைகளை அவர் கேட்டறிந்திருந்தார். இதன்போது ஒருவர் கேட்ட கேள்விக்கு அவர் இவ்வாறு பதில் அளித்திருந்தார், "ஐ.நா. மனித உரிமைகள் பேரவை என்பது ஐக்கிய நாடுகள் சபையல்ல. அங்கே பொதுச் சபை இருக்கிறது, பாதுகாப்பு பேரவை இருக்கிறது."

இதன் மூலம் அவர் கூறியது என்ன? மனித உரிமைகள் பேரவை எதனை பரிந்துரைத்தாலும் அதற்கு மட்டுப்பாடுகள் உண்டு. நவிப்பிள்ளை ஓய்வு பெற்ற பின்னர், கனடாவில் நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய போது ஓர் உண்மையை கூறியிருந்தார். அதாவது, "ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை என்பது குறுகிய தேசியவாதத்தாலும் புவிசார் அரசியல் நலன்களாலும் கட்டுப்படுத்தப்படுகிறது. இதற்கு எனது சொந்த நாடான தென்னாபிரிக்காவும் விதிவிலக்கல்ல", என்று குறிப்பிட்டிருந்தார்.

ஐக்கிய நாடுகள் சபை உருவாக்கப்பட்ட காலத்திலிருந்து, சர்வதேச ரீதியிலான அரசியல் நெருக்கடிகளை சமசரம் செய்வதில் ஐக்கிய நாடுகள் சபையால் காத்திரமான தலையீடுகளை மேற்கொள்ள முடியவில்லை. இந்த யதார்த்தத்தைப் புரிந்து கொண்டுதான் அதன்மீதான நம்பிக்கையை வளர்க்க வேண்டும். அவ்வாறில்லாது போனால் ஏமாற்றங்களே மிஞ்சும். என்னதான் விடயங்களை வெளியில் பேசினாலும்கூட - அழுத்தங்கள் என்னும் பெயரில் அறிக்கைகள் வெளியானாலும்கூட - பாதிக்கப்பட்ட தரப்பு ஒவ்வொரு வாய்ப்புகளையும் புத்திசாதுர்யமாக எந்தளவுக்கு பயன்படுத்திக் கொள்கிறதோ அதுதான் அரசியல் முன்னேற்றங்களை கனியச் செய்யும்.

## போதை மாத்திரைகளுடன் யாழில் இளைஞன் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 15

யாழ்ப்பாணத்தில் 10 போதை மாத்திரைகளுடன் இளைஞன் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாசையூர் புனித அந்தோனியார் ஆலய திருவிழாவின் போது போதை மாத்திரைகளை விற்பனை செய்ய வந்த வேளை இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்புத்துறையை சேர்ந்த 25 வயது இளைஞனே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

விசாரணைகளின் பின்னர் அவரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் எடுத்துள்ளனர். (எ-05)

## கோழிப் பண்ணையை துப்புரவு செய்த இளைஞர் மின்சாரம் தாக்கி உயிரிழப்பு!

சிலாபம், ஜூன் 15

கோழி பண்ணையை துப்புரவு செய்த இளைஞர் ஒருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் புத்தளம் - முந்தல் பகுதியில் இடம்பெற்ற இந்த விபத்தில், அதே இடத்தைச் சேர்ந்த 21 வயது இளைஞரே உயிரிழந்தார்.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

உயிரிழந்த இளைஞர் மற்றொருவருடன் இணைந்து கோழி பண்ணையை துப்புரவு செய்துள்ளார். அப்போது, அங்கிருந்த இயந்திரம் ஒன்றில் கால் தவறுதலாக பட்டுள்ளது. இதன்போது, இளைஞர் மின்சாரத்தால் தாக்குண்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட இளைஞர் புத்தளம் பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். எனினும், சிறிது நேரத்திலேயே உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் புத்தளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## காங்கேசன் - நாகபட்டினம் கப்பல் சேவை இடைநிறுத்தம்

கொழும்பு, ஜூன் 15

காங்கேசன்துறை - நாகபட்டினம் இடையே பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடும் கப்பல் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக சிவகங்கை கப்பல் சேவையின் இலங்கைக்கான பணிப்பாளர் சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.

அசாதாரண காலநிலை காரணமாக கப்பல் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளது. எதிர்வரும் புதன்கிழமை தொடக்கம் மீண்டும் கப்பல் சேவையில் ஈடுபடும் என்றும் அவர் கூறியுள்ளார். (ஐ)

### 7 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 15

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் 7 மாவட்டங்களுக்கு முதலாம் கட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இன்று ஞாயிற்றுக்கிழமை 4 மணி வரை இந்த மண்சரிவு அபாய எச்சரிக்கை நடைமுறையில் உள்ளது.

காலி, கொழும்பு, களுத்துறை, இரத்தினபுரி, கண்டி, கேகாலை, நுவரெலியா ஆகிய மாவட்டங்களுக்கே இவ்வாறு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

## சிவனொளிபாதமலைக்கான வீதிகள் மூடப்படுகின்றன!

நுவரெலியா, ஜூன் 15

நுவரெலியாவின் நோர்டன் பிரிட்ஜிலிருந்து கினிகத்தேனை, தியகல ஊடாக சிவனொளிபாதமலை வரையிலான வீதிகள் அவசர திருத்தப் பணிகளுக்காக 10 நாட்கள் மூடப்படும் என்று வீதி அபிவிருத்தி அதிகார சபை அறிவித்துள்ளது.

நேற்று சனிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 24ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை இந்த வீதிகள் மூடப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், நோர்டன் பிரிட்ஜ் வீதி மற்றும் கலுகல, பொல்பிட்டிய, லக்சபான வழியாக ஹற்றன் - நோர்டன் பிரிட்ஜ் சாலை உள்ளிட்ட மாற்று வழிகளை பயன்படுத்துமாறு நோர்வூட் வீதி அபிவிருத்தி அதிகார சபை சாரதிகளுக்கு அறிவுறுத்தியுள்ளது. (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# சுற்றுச்சூழல் சிதைந்தால் சுற்றுலா இல்லை!



சுற்றுலாப் பயணிகளைப் பொருத்தவரை பெரும்பாலானோருக்கு விழிப்புணர்வு இல்லை. தீவிர கண்காணிப்பும் கடும் அபராதமும் மட்டுமே சுற்றுலாப் பயணிகளைப் பொறுப்புடன் செயல்பட வைக்கும். ஆனால், சுற்றுலாவால் ஏற்படும் சுற்றுச்சூழல் சேதங்கள் அனைத்தையும் தாமாக முன்வந்து நீதிமன்றம் விசாரிப்பது என்பது முடியாத காரியம்.

மலைப்பிரதேச சுற்றுலா, கோடைக்கால சுற்றுலா, குளிர்கால சுற்றுலா, மழைக்கால சுற்றுலா, ஆன்மிக சுற்றுலா, மருத்துவ சுற்றுலா, கல்வி சுற்றுலா, கலாசார சுற்றுலா, சூழல் சுற்றுலா -என சுற்றுலா ஒரு பெரும் வணிகமாக மாறிவிட்டது.

இச்சுற்றுலா வணிகத்தினால் சுற்றுச்சூழல் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறது.ஆனால், அரசுகளோ, அதிகாரிகளோ, பொதுமக்களோ இதைப் பற்றிச் சற்றும் கவலைகொள்ளவில்லை என்பது மிகப் பெரிய சோகம்! ஒரு பக்கம் 'கால நிலை மாற்றம்', 'சுற்றுச்சூழல் பாதுகாப்பு' என்றெல்லாம் பல்வேறு நாடுகள் கூட்டம் போட்டு, கருத்தரங்குகள் நடத்தி, விவாதம் செய்கின்றன.

மறுபக்கம் 'சுற்றுலா' என்ற பெயரில் எல்லா நாடுகளுமே சுற்றுச்சூழலைச் சிதைத்துக் கொண்டிருக்கின்றன. மேலை நாடுகளில் மக்கள்தொகை குறைவு. சீனா, ஜப்பான் போன்ற அதிக மக்கள்தொகை உள்ள நாடுகளில் சுற்றுலாப் பயணிகளுக்குக் கடும் கட்டுப்பாடுகள். சுற்றுலாவுக்கான கட்டணம் மிக அதிகம் மேலும் அங்கு வரும் சுற்றுலாப் பயணிகள் அந்தந்த நாட்டுச் சட்டங்களை மதித்து நடக்கும் பொறுப்பான சுற்றுலாப் பயணிகள். இதனால் எல்லாம் அங்கு சுற்றுலாப் பயணிகளால் சுற்றுச்சூழலுக்கு எவ்விதக் கேடும் ஏற்படுவதில்லை.

நம் நாட்டுக்கு வருவோம். சுற்றுலாத் தலங்கள் எங்கிலும் கூட்டம்,சப்தம், குப்பை, நெகிழிப் புட்டிகள், பைகள் ஒழுங்கின்மை..... மேலை நாட்டவரிடமிருந்து மதுவையும், ஆடைக் குறைப்பையும் கற்றுக்கொண்ட நாம், அவர்களிடமிருந்து பொறுப்புணர்வைக் கற்றுக்கொள்ளவில்லையே! 'ஒரே ஒரு நபராக இருந்தாலும் ஆங்கிலேயர் வரிசையில்தான் நிற்பார்' என்று ஆங்கிலேயரின் ஒழுங்கைப் பற்றிச் சொல்வதுண்டு.

வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் அதிர்ந்து பேச மாட்டார்கள் பயணச் சீட்டாகட்டும், உணவாகட்டும், வரிசையில் பொறுமையாக நின்று பெறுவார்கள். நம் மக்களைப் போல் முண்டியடித்துச் சண்டையிட்டு அசிங்கப்படுத்த மாட்டார்கள். எப்போது மக்களிடம் பொறுப்புணர்வும் நாகரிகமும் இல்லையோ, அதை மக்களிடம் கண்டிப்புடன் கொண்டு வருவது அரசுகளின் கடமை.

ஆனால், அரசுகளோ சுற்றுலாவினால் கிடைக்கும் வருமானத்தைத்தான் கருத்தில்கொள்கின்றனவே தவிர, இப்படிப்பட்ட பொறுப்பற்ற சுற்றுலாவினால் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் சீர்குலைவைப் பற்றிச் சிறிதேனும் அக்கறைகொள்ளவில்லை. அரசுகளுக்கும் பொதுமக்களுக்கும்தான் அக்கறையில்லையே தவிர, சுற்றுச்சூழல் ஆர்வலர்களுக்கு இந்தப்போக்கு மிகுந்த கவலையளிக்கிறது.

கோயில்களையும், கடற்கரைகளையும், புராதன சின்னங்களையும், மலைப் பிரதேசங்களையும் சிதைத்துச் சின்னாபின்னமாக்கி முடித்தாயிற்று. இப்போது 'சூழல் சுற்றுலா' என்ற பெயரில் காடுகளை அழித்துக் கொண்டிருக்கிறோம்.

உள்ளூர் சுற்றுலாப் பயணிகளைப் பொருத்தவரை பெரும்பாலானோருக்கு விழிப்புணர்வு இல்லை. தீவிர கண்காணிப்பும், கடும் அபராதமும் மட்டுமே பயணிகளைப் பொறுப்புடன் செயல்பட வைக்கும். ஆனால், சுற்றுலாவால் ஏற்படும் சுற்றுச்சூழல் சேதங்கள் அனைத்தையும் தாமாக முன்வந்து நீதிமன்றம் விசாரிப்பது என்பது முடியாத காரியம். சுற்றுச்சூழல் போராளிகள் தொடுக்கும் பொதுநல வழக்குகளை விசாரித்துத்தான் தீர்ப்பு கூறமுடியும்.

வனங்களுக்குள் மற்றும் விலங்குகள் சரணாலயங்களுக்குள் உள்ள சிறு கோயில்களுக்கு, வழிபாடு என்ற பெயரில் கூட்டங்கூட்டமாக மக்கள் சென்று அட்டகாசம் செய்கிறார்கள். ஆறுகளில் குளித்து, களைந்த துணிகளை ஆங்காங்கு வீசியெறிந்துவிட்டு, திறந்தவெளியில் மலம்கழித்து, ஆடுகளைப் பலிகொடுத்து, இரவு முழுவதும் அதிக ஒளிதரக்கூடிய விளக்குகளை எரியவிட்டு, ஒலிபெருக்கிகள் மூலம் பாடல்களை அலறவிட்டு, லாரி, வேன், மகிழுந்து போன்ற பெரிய வாகனங்களில் சமையலுக்குண்டான பொருள்களை (கூடவே மதுப்புட்டிகள்) எடுத்துக் கொண்டு காடுகளில் தங்கி காடுகளின் சூழலைச் சிதைத்துவிட்டு வருகிறார்கள், இதற்குப் பெயர் 'ஆன்மிகச் சுற்றுலாவாம்'!

## இந்தவார ராசிபலன் 15.06.2025 - 21.06.2025

ஞாயிற்றுக்கிழமை
விசுவாவசு வருடம் - ஆனி 01
நல்ல நேரம்: 7.31 - 09.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : சதுர்த்தி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த வாரம் உங்களுக்கு தெய்வீக சிந்தனைகள் மூலம் மனதில் அமைதி நிலவும். விரும்பிய ஆடை, ஆபரணங்கள், பிடித்தமான நல்ல உணவு, ஆகியவை கிடைக்கும். அறிஞர்கள் நிறைந்த மேடை களில், கௌரவப் பட்டங்கள் உங்களை அலங்கரிக்கும். உயர் அதிகா ரிகள் ஆதரவால் பதவி உயர்வுகளை எதிர்பார்க்கலாம்.புதிய நண்பர்களால் நன்மை ஏற்படும். ஆண் லைனில் ஆழ்ந்து படித்தால் அதிக மதிப்பெண்கள் பெறலாம்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் வெளியூர் பயணங்களில் எதிர்பாராத பிரச்சினைகள் ஏற்படலாம். தாய்வழி உறவுகளால் எவ்வித உதவியும் இருக்காது. உறவினர் வருகையால் மனம் மகிழ்ச்சி ஏற்படும். சிலருக்குக் காரியத் தடைகள், கால தாமதங்கள் காரணமாக பின்னடைவுகள் ஏற்படும். மேலதிகாரிகளின் ஆதரவால் பணியில் முன்னேற்றங்களை அடைய முற்படுவீர்கள். உயர் அதிகாரிகளால் பாராட்டப்பட்டு பதவி உயர்வின் மூலம் பணப்பயன்களை அடைவீர்கள்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் பைசாவுக்கு பிரயோஜனம் இல்லாத காரியங்களுக்காக அலைய நேரிடும். சிலருக்குக் கையிருப்பு குறைந்து பண முடைகள் ஏற்படலாம். இடுக்கண் களைய உதவும் உறவுகளின் உதவி யால் உள்ளம் மகிழும். செய் தொழிலில் எதிர்பார்த்த நல்ல முன்னேற் றங்கள் இருக்கும். வாக்கு வன்மையால் பொருளாதார உயர்வில் முன்னேற்றம் ஏற்படும். பூஜை வழிபாடுகள் தடைப்பட்டு வந்த காரியங்கள் அனைத்தும் விரைவாக நடைபெறும்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் கட்டுக்கு அடங்காத செலவுகளால் மன அமைதி குறையும். ஆயினும், புதுப்புது முயற்சிகளால் தனவரவு அதிகரித்து கேளிக்கை ஈடுபாடு, இனிய பயணங்கள் ஆகியவை ஏற்பட்டு சந்தோஷம் தரும். வியாபாரிகளுக்கு வியாபாரம் சம்பந்தமான நற்செய்திகள் வரும். மக்களிடம் தங்கள் விற்பனைத் திறமைகளைக் காட்டி வியாபாரத்தில் இலாபத்தை அதிகரித்துக் கொள்வர். அரசு அதிகாரிகள் சந்திப்பு அனுகூலமாக இருக்கும்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரம் வீட்டில் திருமணம் போன்ற இனிய சுப நிகழ்ச்சிகள் களைகட்டும். அதன் காரணமாக சந்தோஷம் பொங்கும். ஏமாற்றத்தை தவிர்க்க கூட்டாளிகளிடம் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. மனைவியுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்பு இருப்பதால் சமாதானமாகப் போவது சிறப்பு. போட்டி தேர்வுகளில் எதிர்பார்த்த வெற்றி கிட்டும். பெண்களால் இலாபம் ஏற்படும். பொருளாதார நிலையைப் பொறுத்தவரை சிரமமான காலம்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் குடும்ப சந்தோஷம் குறைவில்லாது நிறைந்திருக்கும். கணவன் மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். பெரியவர்கள் ஆசியால் நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி அடையும். எதையும் துணிகரமாக எடுத்து மேற்கொள்ளும் தனித்திறன் உங்களிடம் இருப்பதால் வாழ்க்கையில் உச்சத்துக்குச் செல்வீர்கள். பிள்ளைப்பேறு, தொழில் வாய்ப்புகள், லாட்டரி யோகங்கள், புண்ணியத்தல தரிசனங்கள் ஆகியவை ஏற்படும். பண விஷயத்தைப் பொறுத்தவரை திருப்திகரமான வாரமாக இருக்கும்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் உங்களுக்கு நல்ல பல ஆன்மிகக் கருத்துக்களை கேட்பதின் மூலம் ஞான தன்மை அதிகரிக்கும். பக்தி மார்க்கத்தில் செல்ல மனைவியின் பூரண ஒத்துழைப்பு கிடைக்கும். புதிய ஒப் பந்தங்கள் மூலம் தொழிலில் அதிகமாக வருவாய் பெருக்கம் ஏற்படும். தூர தேசங்களில் இருந்து எதிர்பார்த்த நல்ல தகவல்கள் வந்து சேரும். சுபகாரிய செலவுகள் ஏற்பட்டு வீட்டில் மகிழ்ச்சி வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் நண்பர்களுடன் முக்கிய விருந்துகளில் கலந்து கொண்டு மகிழ்ச்சி பொங்க பொழுதை கழிப்பீர்கள். எல்லா வகையிலும் சிறப்பான பலன்களை எதிர்பார்க்கலாம். அரசியல்வாதிகளிடம் அரசாங்கத்திடமும் எதிர்பார்த்த காரியங்கள் அனைத்தும் தாமதமின்றி சாதகமாக நிறைவேறும். தொழிலில் புதிய விரிவாக்கம் சம்பந்தமான முயற்சிகள் வெற்றியை நோக்கிச் செல்லும். சொற்பொழிவுகளைக் மகிழ்ச்சியும் ஏற்படும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் நல்லதும், கெட்டதும் கலந்த பலன்கள் ஏற்படும் ஆதலால் பக்தி மார்க்க ஈடுபாடு நல்ல பலன் தரும். சாதிக்கத் துடிக்கும் உங்கள் கடின உழைப்பால் நீங்கள் பெறும் வெற்றி அனைவரின் பாராட்டையும் பெற்று தரும். உஷ்ணம் காரணமாக உபாதை கள் ஏற்படும். ஆதலால், குளிர்பானங்களை அடிக்கடி எடுத்துக் கொள்வது நல்லது. தந்தைக்கு உங்கள் உதவி தேவைப்படலாம். பழைய உறவுகளின் வரவு மகிழ்வைத் தரும்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் எதிர்பாராத விதமாக பணவரவு அதிகரிப்பால் மகிழ்ச்சி ஏற்பட்டாலும், தேவையற்ற செலவுகள் ஏற்படும். வழக்கு களில் நிச்சயம் வெற்றி கிடைக்கும். அக்கம் பக்கத்தில் தேவையற்ற விவகாரங்களில் மூக்கை நுழைக்காதிருப்பது நல்லது. மனைவி, குழந்தைகளிடம் மனம் விட்டு சிரித்துப் பேசி மகிழுங்கள்.பெண்கள் தங்களை அழகு படுத்தி கொண்டு, அழகை வெளிக்காட்டும் வகையில் பல விழா நிகழ்வுகள் கைகொடுக்கும்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் பல திசைகளில் இருந்தும் இலாபம் பெருகும். பலன் அளிக்கக் கூடிய இனிய பயணங்கள் பலவற்றை மேற்கொள்வீர்கள். உங்கள் திறமைக்கேற்ற, சக்தி மிக்க, அதிகாரமிக்க பதவிகள் உங்களைத் தேடிவரும். நெருங்கிய உறவுகளை அனுசரித்து சென்றால் அவர்களின் உதவிகள் கேட்காமலே கிடைக்கும். அவர்களால் பாராட் டவும் படுவீர்கள். ஆடம்பரச் செலவுகளை குறைத்தால் பொருளாதாரச் சிக்கல்களில் இருந்து மீளலாம்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் உங்களுக்கு இனிய வாரம். புண்ணியத் திருத்தல யாத்திரைகள் செல்வதால் மகிழ்ச்சியும் மன அமைதியும் ஏற்படும். சீரான பொருளாதார உயர்வினால் எப்போதும் மனதில் மகிழ்ச்சி பொங்கும். பொன் பொருள் ஆபரணங்கள் ஆகியவை விதவிதமாகக் கிடைக்கும். குடும்பத்தாருக்கும் அவர்கள் ஆசைகள் , விருப்பங்கள் நிறைவேறுவதால் குதுகலமாய் இருப்பர். அனுபவ பூர்வமான அறிவுத் திறன் கூடும், பூமி வீடு மூலம் இலாபம் ஏற்படும். சுக சௌகரியங்கள் அதிகரிக்கும்.சுபச் செய்திகள் வர மனம் மகிழும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விட்டுக்கொடுப்பு அரசியல் செய்யப் பழகும் தமிழ்க் கட்சிகள்



வீரகத்தி தனபாலசிங்கம்

உள்ளூராட்சி தேர்தல்களை பொறுத்தவரை, தென்னிலங்கையில் எதிரணி அரசியல் கட்சிகளுக்கும் வடக்கு, கிழக்கில் தமிழ் அரசியல் கட்சிகளுக்கும் இடையில் மூன்று ஒற்றுமைகளை காணக்கூடியதாக இருந்தது. இரு தரப்புகளுக்கும் பொது அரசியல் எதிரியாக ஆளும் தேசிய மக்கள் சக்தி விளங்குகிறது என்பது முதல் ஒற்றுமை. ஆளும் கட்சியை எதிர்த்து இரு முனைகளிலும் கட்சிகளினால் ஒன்றுபட்டு களமிறங்க முடியாமல் போனமை இரண்டாவது ஒன்றுமை. தேர்தல்கள் முடிவடைந்து ஒரு மாதத்துக்கும் கூடுதலான காலம் கடந்துவிட்ட நிலையில், உள்ளூராட்சி சபைகளில் நிருவாகங்களை அமைப்பதற்கு மற்றைய கட்சிகளின் ஆதரவை நாடி பேச்சுவார்த்தைகளை நடத்துவது மூன்றாவது ஒற்றுமை.

தேசிய மக்கள் சக்தியும் அறுதிப்பெரும்பான்மை ஆசனங்களை கைப்பற்றிய உள்ளூராட்சி சபைகளை தவிர, கூடுதல் ஆசனங்களைப் பெற்ற தனியான கட்சியாக விளங்கும் பெருவாரியான சபைகளில் நிருவாகங்களை அமைப்பதில் தொடர்ந்து பிரச்சினைகளை எதிர்நோக்குகிறது. கடந்தகால தவறான ஆட்சிமுறைக்கும் ஊழலுக்கும் பொறுப்பானவை என்று தாங்கள் அடையாளப்படுத்திய கட்சிகளுடன் சேர்ந்து நிருவாகங்களை அமைப்பதில் தேசிய மக்கள் சக்திக்கு பிரச்சினை இருக்கிறது. ஆனால், இயன்றவரை, சுயேச்சைக் குழுக்களில் இருந்து தெரிவான உறுப்பினர்களின் ஆதரவை நாடுவதில் அவர்களுக்கு எந்த அசௌகரியமும் இல்லை. தேர்தல் அரசியலில் தங்களது 'பித்தியேகமான' கட்சியாக தங்களைக் காட்டிக்கொள்ளும் பழைய போக்கையே தொடர்ந்து கடைப்பிடிப்பதில் உள்ள நடைமுறைச் சிக்கலை ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) வின் தலைவர்கள் நாளடைவில் புரிந்துகொள்வார்கள்.

தேசிய மக்கள் சக்தி பெற்ற ஆசனங்களின் எண்ணிக்கையை விடவும் எதிர்க்கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் கைப்பற்றிய ஆசனங்களின் கூட்டு எண்ணிக்கை அதிகமானதாக இருக்கும் உள்ளூராட்சி சபைகளில் சாத்தியமான அளவுக்கு ஒன்றுபட்டு நிருவாகங்களை அமைப்பதற்கு முக்கியமான எதிர்க்கட்சிகள் பெரும் பிரயத்தனங்களில் ஈடுபட்டு வருகின்றன.

குறிப்பிடத்தக்க ஒரு அரசியல் நிகழ்வாக, தேசிய மக்கள் சக்திக்கு பெரும்பான்மை இல்லாத உளளூராட்சி சபைகளில் ஒன்றுபட்டு நிருவாகங்களை அமைப்பதற்கு ஒரு இணக்கப்பாட்டை கண்டிருப்பதாக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, சிறிலங்கா பொதுஜன பெரமுன, ஐக்கிய தேசிய கட்சி, பொதுஜன முன்னணி ஆகிய நான்கு கட்சிகள் கடந்த வாரம் அறிவித்தன.

கடந்த வியாழக்கிழமை கூட்டாக நடத்திய செய்தியாளர் மகாநாட்டில் இதை தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க, சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவாசம், பொதுஜன முன்னணியின் பொதுச் செயலாளர் லசந்த அழகிய வண்ண மற்றும் ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் தலதா அத்துக்கோரள ஆகியோர் நான்கு பிரதேச சபைகளில் ஏற்கெனவே நிருவாகங்களை அமைத்திருப்பதாகவும் எதிர்வரும் நாட்களில் மேலும் பல சபைகளை தங்களின் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்போவதாகவும் கூறினர். குறிப்பிட்ட சில உள்ளூராட்சி சபைகளை கைப்பற்றுவதற்கு ஆளும் கட்சி நெறிகெட்ட வழிமுறைகளில் முயற்சிகளை முன்னெடுப்பதாக அவர்கள் குற்றஞ்சாட்டுகிறார்கள்.

தேசிய மக்கள் சக்தியை எதிர்த்துநிற்க வேண்டும் என்பதை தவிர, இந்த நான்கு கட்சிகளுக்கும் இடையில் வேறு எந்த ஒற்றுமையும் கிடையாது. கொள்கைகளைப் பொறுத்தவரை, இவற்றுக்கு இடையில் குறைந்தபட்ச ஒற்றுமையாவது இருந்திருந்தால், தேர்தலிலேயே ஒன்றிணைந்து ஆளும் கட்சிக்கு எதிராக களமிறங்கியிருக்க முடியும். உள்ளூராட்சி சபைகளின் ஊடாக தரமான பொதுச் சேவையை முன்னெடுக்கும் நோக்கத்திற்காகவே ஒன்றிணைந்திருப்பதாக இந்த கட்சிகளின் தலைவர்கள் கூறுவதை மக்கள் நம்பவா போகிறார்கள்? கூட்டு முயற்சியினால் இவர்களால் எத்தனை சபைகளின் நிருவாகங்களை கைப்பற்ற முடியும் என்பதை எதிர்வரும் நாட்களில் தெரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும்.

இதே போன்றே வடக்கு, கிழக்கிலும் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற பகுதிகளில் தேசிய மக்கள் சக்தி எந்தவொரு உள்ளூராட்சி சபையிலும் நிருவாகத்தை கைப்பற்றுவதை தடுப்பதில் தமிழ்க் கட்சிகள் உறுதியாக இருக்கின்றன. தென்னிலங்கையில் எதிரணி கட்சிகளுக்கு உள்ளதைப் போன்றே தேசிய மக்கள் சக்தி தமிழ் கட்சிகளுக்கும் பொது அரசியல் எதிரியாக விளங்குகிறது. ஆனால், அந்த கட்சிகள் உள்ளூராட்சி தேர்தல்களில் ஒன்றுபட்டு போட்டியிடுவதை அவற்றுக்கிடையிலான 'பாரம்பரியமான' கட்சி அரசியல் வன்மம் தடுத்துவிட்டது. தலைவர்களுக்கு இடையிலான ஆளுமைப் போட்டியும் இதற்கு பங்களிப்பு செய்தது.

பாராளுமன்ற தேர்தலில் வடக்கு, கிழக்கில் தேசிய மக்கள் சக்தி பெற்ற முன்னென்றும் இல்லாத வகையிலான வெற்றியை தங்களது அரசியல் இருப்புக்கான அச்சுறுத்தலாக நோக்கிய தமிழ்க்கட்சிகள் உள்ளூராட்சி தேர்தல் பிரசாரங்களின்போது தனித்தனியாக போட்டியிட்டாலும் பிறகு சபைகளின் நிருவாகங்களை அமைப்பதில் ஒன்றுபட்டுச் செயற்படப்போவதாக தமிழ் மக்களுக்கு கூறின. ஆறு மாதங்களுக்கு முன்னர் ஏற்பட்ட பின்னடைவில் இருந்து இந்த கட்சிகள் மீண்டுவரக்கூடியதாக அந்த மக்களும் வாக்களித்தார்கள். ஆனால், மக்களுக்கு கூறியதைப் போன்று உள்ளூராட்சி நிருவாகங்களை அமைப்பதில் பிரதான தமிழ்க் கட்சிகளினால் அரசியல் விவேகத்தையும் பக்குவத்தையும் வெளிக்காட்ட முடியவில்லை.

**உள்ளூராட்சி நிருவாகங்களை அமைக்கும் விடயத்தில் தமிழ்க்கட்சிகள் அவற்றின் தனித்தனியான நலன்களை மனதிற்கொண்டுதான் விட்டுக்கொடுப்பு அணுகுமுறைகளைக் கடைப்பிடிக்கத் தொடங்கியிருக்கின்றன.**



உள்ளூராட்சிகளின் நிருவாகங்களை அமைக்கும் செயற்பாடுகளை தமிழ்க்கட்சிகள் இரு முகாம்களாக நின்று ஏட்டிக்குப் போட்டியாக முன்னெடுப்பதை காணக்கூடியதாக இருக்கிறது. இலங்கை தமிழரசு கட்சியும் தமிழ் தேசிய பேரவை என்று அழைக்கப்படும் கூட்டணியுமே அந்த இரு முகாம்களுமாகும்.

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் இதுவரை காலமும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி என்ற பெயரிலேயே இயங்கி வந்தது. பாராளுமன்ற தேர்தலில் ஏற்பட்ட பின்னடைவுக்கு பிறகு தனது பாரம்பரியமான போக்கை மாற்றி பொன்னம்பலம் கூட்டணி அமைப்பதில் நாட்டம் காட்டினார். (அவரது கடந்த கால அரசியலுடன் ஒப்பிடும்போது மற்றைய தமிழ் கட்சிகளுடன் சேர்ந்து இயங்க வேண்டும் என்று அவருக்கு ஏற்பட்ட மனமாற்றத்தில் வரவேற்கத்தக்க அம்சம் ஒன்று நிச்சயமாக இருக்கிறது) உள்ளூராட்சி தேர்தல்களுக்கு முன்னர் தமிழ் தேசிய பேரவை என்று அழைக்கப்பட்ட அவர்களின் கூட்டணி தேர்தல்களுக்கு பிறகு ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியையும் சேர்த்துக் கொண்டது.

பொன்னம்பலமும் அவரைச் சார்ந்தவர்களும் இதுநாள் தாங்கள் வரை படுமோசமாக விமர்சித்து வந்த (முன்னாள் தீவிரவாத இயக்கங்களின் தலைவர்களின்) கட்சிகள் சிலவற்றை அரவணைப்பதில் எந்தவிதமான அசௌகரியத்தையும் எதிர்நோக்கவில்லை. உள்ளூராட்சி சபைகளில் நிருவாகங்களை அமைப்பதற்கு அந்த கட்சிகளின் சார்பில் தெரிவான உறுப்பினர்களின் ஆதரவைப் பெறுவதே நடைமுறை ரீதியான உடனடி நோக்கமாக இருந்த போதிலும், தாங்கள் ஒரு 'கொள்கை அடிப்படையிலான கூட்டணியை' அமைத்திருப்பதாக ஒரு பிரகடனத்தையும் அவர்கள் வெளியிட்டார்கள்.

தமிழரசு கட்சியை பொறுத்தவரை, அது தற்போது முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனின் கட்டுப்பாட்டில் இருப்பதை அந்த கட்சிக்குள் அவருக்கு எதிராக இருக்கும் அணியினரால் மாத்திரமல்ல, மற்றைய தமிழ்க் கட்சிகளின் தலைவர்களினாலும் பொறுத்துக் கொள்ள முடியாமல் இருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரிந்த இரகசியம். தமிழரசு கட்சி கூட்டணிகளை அமைப்பதில் அக்கறை காட்டவில்லை. உள்ளூராட்சி நிருவாகங்களை அமைப்பதற்கு தமிழரசு கட்சியின் தலைவர் சி.வி.கே. சிவஞானமும் பொதுச் செயலாளர் சுமந்திரனும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் தலைவர்களுடன் மாத்திரமல்ல, பொன்னம்பலத்துடனும் பேச்சுவார்த்தைகளை நடத்தினார்கள். ஆனால், எதிர்பார்க்கப்பட்டதைப் போன்றே அவர்களினால் ஒரு இணக்கப்பாட்டுக்கு வரமுடியவில்லை.

இதையடுத்து தமிழரசு கட்சி முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் ஆதரவை நாடியது. சிவஞானம் தேவானந்தாவைச் சந்தித்துப் பேசுவதற்கு அவரது கட்சியின் அலுவலகத்துக்கு தானே நேரடியாகச் சென்றார். அது ஒரு 'பாவச் செயல்' என்பது போன்று விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

போர்க்காலத்தில் விடுதலை புலிகளுக்கு எதிராக வெவ்வேறு கட்டங்களில் அரசாங்கங்களின் பக்கமாக நின்று அரசியல் ரீதியாகவும் இராணுவ ரீதியாகவும் செயற்பட்ட வெவ்வேறு தமிழ் இயக்கங்களை (அவை இப்போது அரசியல் கட்சிகள்) 'தீண்டத்தகாதவை' என்று அடையாளப்படுத்திய ஒரு அரசியல் கலாசாரத்தில் தற்போது (அரசியல் அனுகூலங்களுக்காக) ஒரு மாறுதல் ஏற்பட வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகியிருக்கிறது. இவற்றில் எந்த கட்சியுடன் கூட்டுச் சேருவது, எந்தக் கட்சியின் உறுப்பினர்களின் ஆதரவுடன் உள்ளூராட்சி நிருவாகங்களை அமைப்பது என்பதில் வேறுபாடுகளைக் காண்பதற்கான அளவுகோல் என்ன என்ற ஒரு கேள்வி எழுகிறது.

அவர்கள் தேசியவாதத்தின் பக்கம் நிற்கிறார்கள், இவர்கள் தேசியவாத நீக்க அரசியலை முன்னெடுக்கிறார்கள் என்கின்ற வகையிலான விமர்சனங்களை அல்லது சாக்குப் போக்குகளை முன்வைப்பவர்கள் தாங்கள் கூறுகின்ற வியாக்கியானமே 'உண்மையான தேசியவாதம்' என்று தங்களுக்குள் தாங்களே திருப்திப்பட்டுக் கொள்கிறார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக, கடந்த காலப் போராட்டங்களில் எந்தவிதமான ஈடுபாடும் இல்லாத அரசியல்வாதிகள் போராளாகளின் தியாகங்களை வெறுமனே உதட்டளவில் போற்றுவதன் மூலம் மாத்திரம் 'புடம்போட்ட தேசியவாதிகளாக' தங்களை உரிமை கொண்டாடுவது எவ்வாறு பொருத்தமானதாக இருக்கும்?

தேசியவாதம் என்பது ஒரு தேசத்தின் அரசியல் சுதந்திரத்தின் மீதான நம்பிக்கைதான். அதை அடைவதற்கான வழிமுறைகள் என்று வரும்போது காலகட்டங்களையும் அகச்சூழ்நிலையையும் புறச்சூழ்நிலையையும் கருத்தில் எடுத்தே எந்தவொரு தேசமும் தேசிய இனமும் அடிப்படை அபிலாசைகளை சமரசம் செய்யாமல் அணுகுமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

உலகில் அரசியல் சுதந்திரத்தை அடைந்த தேசங்களினதும் இனங்களினதும் வரலாறு இந்த உண்மையைப் போதிக்கிறது. சூழவுள்ள நிலைவரங்களை கருத்தில் எடுக்காமல் வெறுமனே கோட்பாடுகளில் வரட்டுப் பிடிவாதமாக நிற்பதும் கடந்தகால நினைவுகளுடன் மாத்திரம் மக்களைப் பிணைத்துவைத்திருக்க முயற்சிப்பதும் எந்தப் பயனையும் தராது என்பதே எமக்கு வரலாறு தந்த படிப்பினையாகும்.

இதை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது தங்களது அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்கு முதலில் மூன்று தசாப்தங்கள் அகிம்சைவழிப் போராட்டத்தையும் அடுத்த மூன்று தசாப்தங்கள் ஆயுதப் போராட்டத்தையும் நடத்திய இலங்கை தமிழ் சமுதாயம் இன்று எந்த இடத்தில் நிற்கிறது என்பதை எமது அரசியல்வாதிகள் புரிந்துகொள்வது அவசியமானது.

தாங்கள் முன்வைக்கின்ற கோட்பாடுகள், கோரிக்கைகளை அடைவதற்கான வழிமுறைகள் பற்றிய எந்தவிதமான நடைமுறைச் சாத்தியமான தந்திரோபாயமும் இல்லாமல், கடந்த நூற்றாண்டின் நடுப்பகுதியின் பின்னரைப் பகுதியில் வெறுமனே உணர்ச்சிவசமான அரசியலைச் செய்த மிதவாத தமிழ் அரசியல்வாதிகளுக்கு ஏற்பட்ட அனுபவங்கள் தற்போதைய தமிழ் அரசியல்வாதிகளுக்கு சிறந்த படிப்பினைகளாகும். அந்த மிதவாத தலைவர்கள் பாராளுமன்றத்திலாவது முன்னுதாரணமான பங்களிப்பைச் செய்தார்கள்.

தற்போது தமிழரசு கட்சி டக்ளஸ் தேவானந்தாவின் கட்சியினதும் வடமாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனின் கட்சியினதும் ஒத்துழைப்புடன் ஒரு முகாமாகவும் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் தேசிய பேரவை இன்னொரு முகாமாகவும் நின்று கொண்டு வடக்கில் உள்ளூராட்சி நிருவாகங்களை கைப்பற்றும் போட்டியில் இறங்கியிருக்கின்றன.

உள்ளூராட்சி சபைகளில் தலைவர், துணைத் தலைவர் தெரிவுகளை ஏதோ எதிரியின் முகாம்களை சண்டையிட்டுக் கைப்பற்றுவது போன்று அரசியல்வாதிகள் அறிவிப்புகளைச் செய்கிறார்கள். அது மாத்திமல்ல, தமிழ்க்

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார பொறுப்புக்கூறலில் இருந்து போர்க்கால பொறுப்புக்கூறலுக்கு...



கலாநிதி ஜெகான் பெரேரா

பாராளுமன்ற தேர்தலில் ஏழு மாதங்களுக்கு முன்னர் மக்கள் வழங்கிய ஆணை முறைமை மாற்றத்துக்கானது. பொருளாதார நிலைவரத்தில் மேம்பாடு வேண்டும் என்பதே தேசிய மக்கள் சக்திக்கு பெருமளவில் வாக்களித்தவர்களின் பிரதான எதிர்பார்ப்பு. நீண்ட உள்நாட்டுப்போர் இடம்பெற்ற வடக்கு, கிழக்கில் வாழ்கின்ற மக்களும் நாட்டின் ஏனைய பாகங்களில் உள்ள சகோதரத்துவ குடிமக்களுடன் சேர்ந்து தங்களது பொருளாதார நிலைவரத்தில் முன்னேற்றம் ஏற்பட வேண்டும் என்பதற்காகவும் பல தசாப்தங்களாக தாங்கள் அனுபவித்த பாகுபாடுகளில் இருந்து விடுபடுவதற்காகவும் வாக்களித்தார்கள்.

ஒரு வழியில் அவர்கள் பொருளாதார அபிவிருத்தியில் இருந்து வளங்களை அபகரித்த ஊழலைக் குறைப்பதன் மூலமாக பொருளாதார மேம்பாட்டை அடையலாம் என்று நினைத்தார்கள். ஊழல் மோசடிகள், முறைகேடுகள் இன்றி தூய்மையாக ஆட்சி செய்வது, ஊழல் செய்தவர்களை பொறுப்புக்கூற வைப்பது, கொள்ளையடிக்கப்பட்டு வெளிநாடுகளில் பதுக்கி வைக்கப்பட்டிருப்பதாக கூறப்படும் கோடிக்கணக்கான டொலர்களை மீட்டுக் கொண்டுவருவது ஆகியனவே தேசிய மக்கள் சக்தியின் முக்கியமான வாக்குறுதிகள். ஆனால், அவ்வாறு அந்த பணத்தை மீட்டுக் கொண்டுவருவதற்கு குறிப்பிடத்தக்க எந்த நடவடிக்கையும் இன்னமும் எடுக்கப்படவில்லை. அரசாங்கத்தின் மீதான பொதுவான விமர்சனம் அதிகரித்து வருகின்றது.

அண்மைய சில வாரங்களாக, முன்னைய அரசாங்கங்களில் உறுப்பினர்களாக இருந்த ஊழல் மோசடிகளால் ஈடுபட்டதாக நம்பப்படும் அரசியல்வாதிகள் தொடர்ச்சியாக கைதுசெய்ப்பட்டு வருகிறார்கள். அவர்களில் சிலர் செய்ததாக நம்பப்படுகின்றதை விடவும் சிறியளவிலான குற்றச்செயல்களுக்காகவே குற்றம் சுமத்தப்பட்டிருக்கிறார்கள்.

அவர்களில் சிலர் அத்தியாவசியமான வரிகளைச் செலுத்தாமல் வாகனங்களை கொள்வனவு செய்ததை, பட்ஜெட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டதற்கு வெளியில் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு அரசாங்க நிதியை பயன்படுத்தியமை போன்ற குற்றச்செயல்களுக்காக கைது செய்யப்பட்டார்கள். சில வழக்குகளில், அவர்கள் செய்ததாக சந்தேகிக்கப்படும் திட்டமிட்ட வகையிலான பாரிய ஊழலுடன் ஒப்பிடும்போது மிகவும் சிறியதாகத் தோன்றுகின்ற குற்றங்களுக்காக குற்றம் சாட்டப்பட்டிருக்கிறார்கள். இருந்தாலும், எதிர்பார்க்கப்பட்டதை விடவும் மிகவும் கடுமையான தண்டனைகளை நீதித்துறை விதித்திருக்கிறது. இது சட்ட மற்றும் அரசியல் சூழ்நிலையில் ஒரு மாற்றத்தைக் குறித்து நிற்கிறது.

வெளிநாட்டில் பதுக்கி வைக்கப்பட்டிருப்பதாக நம்பப்படுகின்ற கோடிக்கணக்கான டொலர்களை அரசாங்கத்தினால் எவ்வாறு மீட்டுக் கொண்டு வரக்கூடியதாக இருக்கும் என்பதற்கான அறிகுறி எதையும் தற்சமயம் காணமுடியவில்லை. உடைமைகள், ஆடம்பர வாகனங்கள், அடையாளம் காணப்பட்ட அரசியல்வாதிகளினால் அவர்களது உத்தியோகபூர்வ சம்பாத்தியத்தியத்துக்கு விகிதப் பொருத்தமில்லாத வகையில் கொள்வனவு செய்யப்பட்ட நிலங்கள் போன்ற உள்நாட்டுச் சொத்துக்களை கண்டுபிடிப்பதிலேயே இலஞ்ச ஊழல் தடுப்பு ஆணைக்குழுவின் விசாசணைகள் கவனத்தைக் குவித்திருக்கின்றன.

ஆனால், உண்மையில் இடம்பெற்றதாக நம்பப்பட்ட ஊழலையும் விட சிறியதாக இருந்தாலும் அவற்றைச் செய்தவர்களை கண்டுபிடிப்பதில் சம்பந்தப்பட்ட அரசாங்க நிறுவனங்கள் சுறுசுறுப்பாக செயற்படுகின்றமை அரசாங்கத்தின் பற்றுறுதியில் மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கிறது.

நீண்டகால உள்நாட்டுப்போர் இடம்பெற்ற வடக்கு, கிழக்கில் வாழ்கின்றவர்கள் தங்களது பொருளாதார நிலைவரத்தில் முன்னேற்றம் ஒன்றுக்கு வழிவகுக்கக்கூடிய 'முறைமை மாற்றத்திற்காக' நாட்டின் ஏனைய பாகங்களில் வாழ்கின்ற மக்களுடன் சேர்ந்து வாக்களித்தார்கள். இதற்கு மேலதிகமாக, அரசியலில் புதிய முகமான தேசிய மக்கள் சக்தி தங்களுக்கு தங்களது உரிமைகளையும் நீதியையும் பெற்றுக் கொடுக்கும் என்ற நம்பிக்கையிலும் வடக்கு, கிழக்கில் உள்ளவர்கள் வாக்களித்தார்கள்.

பிழைத்து வாழ்ந்து முன்னேறுவதற்கு அவர்களுக்கு வளங்கள் எந்தளவுக்கு தேவையோ அதைப் போன்றே போர்காலத்தில் இடம்பெற்ற பயங்கரமான சித்திரவதைகள் மற்றும் கொலைகள் தொடர்பான அனுபவங்களை அவர்களினால் அலட்சியம் செய்ய முடியாது. வடக்கு, கிழக்கிற்குள் வாழ்ந்தாலும் சரி, வெளியில் வாழ்ந்தாலும் சரி, போரையும் அதன் விளைவான இழப்புக்களை அனுபவித்தவர்களை பழைய சம்பவங்கள் தொடர்ந்து அச்சமூட்டிக் கொண்டேயிருக்கும்.

பதினாறு வருடங்களுக்கு முன்னர் போர் முடிவுக்கு வந்திருந்தாலும் கூட, காணாமல் போனவர்களின் குடும்பத்தவர்கள் உண்மை, நீதி மற்றும் இழப்பீட்டுக்காக இன்னமும் காத்திருக்கின்றார்கள். தங்களது அன்புக்குரியவர்கள் எங்கே இருக்கிறார்கள், அவர்களுக்கு என்ன நேர்ந்தது எனபதை தெரிந்துகொள்ளாத நிலையில், ஆட்கள் காணாமல்போகச் செய்யப்பட்ட அந்த சம்பவங்கள் முழுச் சமூகங்களையுமே அச்சுறுத்திக் கொண்டிருக்கும். அத்தகைய நிலைவரம் நல்லிணக்கத்துக்கான நாட்டின் முயற்சிகளை மலினப்படுத்தும்.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை அதற்கு ஒரு உதாரணமாகும். சாட்சியங்களின் பிரகாரம் கிழக்கு பல்கலைக்கழக முகாமில் 1990 செப்டெம்பர் 5 ஆம் திகதி இராணுவத்தினால் 158 பேர் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர் என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டது. ஆனால், அவ்வாறு தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதைப் பற்றி எதுவும் தெரியாது.




**பொருளாதார ஊழல்கள் பொறுத்துக் கொள்ளப்படப் போவதில்லை என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கும் மாற்றியமைக்கப்பட்ட இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவைப் போன்று உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவும் கடந்த காலத்துக்கு ஒரு முடிவைக் கட்டவும் தேசிய அபிவிருத்திக்காக சேர்ந்து பாடுபடுவதற்காக மக்களையும் சமூகங்களையும் ஐக்கியப்படுத்தவும் உதவ முடியும்.**

அடுத்தடுத்து பதவிக்கு வந்த அரசாங்கங்கள் போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் அக்கறைகளில் இருந்து கவனத்தை திருப்பும் நடவடிக்கைகளிலேயே நாட்டம் காட்டி வந்திருக்கின்றன. கடந்த காலத்தைக் கையாளுவதில் முன்னைய அரசாங்கங்களுக்கு ஆர்வம் இருந்ததில்லை. முன்னைய அரசாங்கங்களின் உயர்மட்ட தலைவர்களில் பலர் தாங்களே போரில் சம்பந்தப்பட்டிருந்தார்கள். ஜனாதிபதிகள் பாதுகாப்பு அமைச்சராகவும் ஆயுதப் படைகளின் பிரதம தளபதியாகவும் இருந்தார்கள்.

கடந்த காலத்தில் உண்மையில் நடந்தவை பற்றிய வேதனையானதும் சர்ச்சைக்குரியதுமான விவகாரங்களை கையாள்வதில் பெரும்பான்மைச் சமூகத்துக்கு அக்கறை இல்லாமல் இருப்பது இரண்டாவது பிரச்சினை. வடக்கு, கிழக்கிற்கு வெளியில் வாழ்பவர்களைப் பொறுத்தவரை, அமைதியும் வழமைநிலையும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்ற ஒரு எளிமையான நம்பிக்கையுடனேயே அவர்கள் இருக்கிறார்கள்.

தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தைப் பொறுத்தவரை, போர்க்காலத்தில் பாதுகாப்பு படைகளுக்கு பொறுப்பாக இருந்தில்லை என்பதால் அதன் கீழ் கடந்த காலத்தைக் ஒரு கையாளக்கூடிய நிலைபேறான தீர்வொன்றை காண்பது சாத்தியமாகக் கூடியதாகும். ஆனால், அதற்கு கடந்த காலச் சவால்களுக்கு முகங்கொடுப்பதற்கான அரசியல் துணிவாற்றலும் பற்றுறுதியும் அவசியமாகும்.

தற்போதைய அரசாங்கத்தின் கீழ் கூட, முல்லைத்தீவு, திருகோணமலை போன்ற இடங்களில் நிலங்கள் கையகப்படுத்தப்படும் சம்பவங்கள் குறித்து செய்திகள் வருகின்றன. இது பல தசாப்தங்களாக இடம்பெற்றுவந்த குடிப்பரம்பலை மாற்றியமைக்கும் நடவடிக்கைகளின் பாணியை பிரதிபலிப்பவையாக அமைகின்றன. இத்தகைய நிலைவரம் போரின் தாக்கம் உண்மையில் முடிவுக்கு கொண்டு வரப்படவில்லை என்பதை மாத்திரமல்ல, அதன் வடிவம் மாற்றப்பட்டிருக்கிறது என்ற எண்ணத்தை வலுப்படுத்துவதாக அமைகிறது.

வெளிப்படையான மோதலுக்கு பதிலாக, இப்போது காணிகளை திருப்பிக் கையளித்தலில் உயர் அதிகாரிகள் மற்றும் நிருவாக மட்டங்களில் காணப்படும் தாமதம், சட்டங்களை பாகுபாடான முறையில் நடைமுறைப்படுத்துதல் மற்றும் தீர்மானங்களை எடுப்பதில் மத்தியமய செயன்முறைகள் ஊடாக உள்ளூர்ச் சுயாட்சியை படிப்படாயாக திணறடித்தல் போன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

பதினாறு வருடங்கள் கடந்துவிட்ட போதிலும் கூட, இலங்கையில் போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட முறை தொடர்பிலான சர்வதேச கரிசனை தொடர்ந்தும் உயர்வாகவே இருந்துவருகிறது. இலங்கையின் போர்களத்தில் மனித உரிமை மீறல்களையும் போர்க்குற்றங்களையும் செய்தவர்கள் அவற்றை எவ்வாறு செய்தார்கள், செய்வதற்கு எவ்வாறு அனுமதிக்கப்பட்டார்கள் என்பது இலங்கையில் இடம்பெற்றதை விடவும் மோசமான மீறல்கள் இடம்பெற்ற உலகின் வேறு பாகங்களுக்கும் பாடங்களாக அமையக்கூடும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வொல்கர் ரேர்க் இலங்கைக்கு மேற்கொள்ளவிருக்கும் விஜயத்தை நாட்டின் நற்பெயருக்கு ஒரு அச்சுறுத்தலாக அல்லது ஒரு சுமையாக நோக்குவதற்கு பதிலாக, உலகிற்கு ஒரு வகைமாதிரியாக அமையக்கூடியதாக சர்வதேச சமூகத்தின் ஆதரவைப் பெறுவதற்கு கிடைக்கும் ஒரு வாய்ப்பாக அரசாங்கம் நோக்கலாம். சுதந்திரம் பெற்ற காலத்தில் இருந்து நாட்டை அவலத்துக்கு உள்ளாக்கிய இன,மதப் பிரச்சினைகளை தீர்த்துவைப்பதற்கு இதுவே சிறந்த தருணம் என்பதையே 'முறைமை மாற்றத்துக்கான' மக்களின் ஆணையும் உணர்த்துகிறது.

பொருளாதார குற்றங்களுக்கான பொறுப்புக்கூறல் தொடர்பில் மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதில் பின்பற்றுகின்ற அதே தந்திரோபாயத்தை அரசாங்கம் இது விடயத்திலும் பின்பற்ற முடியும். சுயாதீனமான அரச நிறுவனங்கள் ஊடாக செயற்பட அனுமதிக்கப்பட்டால் நீதியை நிலைநாட்டுவதற்கு வலிமையான கருவிகளாக அமையக்கூடிய வழமையான சட்டங்களையே அரசாங்கம் பயன்படுத்தவும் முடியும். மனித உரிமைகள் மற்றும் போர்க் குற்றங்களை பொறுத்தவரை, அவற்றைக் கையாளுவதற்கென்ற அமைக்கப்பட்ட நிறுவனங்கள் கடந்த காலத்தில் அடையாளம் காணப்பட்ட 'வகைமாதிரியான'வழக்குகளை கையாளமுடியும்.

இந்த வழக்குகள் பல தசாப்தங்களாக பொதுவெளியில் அறியப்பட்டிருக்கும் மனித உரிமைமீறல்கள் அல்லது போர்க்கால துஷ்பிரயோகங்களுடன் சம்பந்தப்பட்ட சம்பவங்களுடன் தொடர்புடையவையாகும். உதாரணமாக, திருகோணமலை கடற்கரையில் ஐந்து மாணவர்கள் கொலை செய்யப்பட்ட சம்பவம் (2006), மூதூரில் அரசாங்க சார்பற்ற தொண்டர் நிறுவனம் ஒன்றின் பதினேழு உதவிப்பணியாளர்கள் கொலை செய்யப்பட்ட சம்பவம் ( 2006), ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமல்போன சம்பவம் (2010) ஆகியவற்றை கூறலாம்.

போருடன் சம்பந்தப்பட்ட முன்னைய சகல ஆணைக்குழுக்களினதும் அறிக்கைகளை ஆராய்வதற்காக 2021 ஆம் ஆண்டில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவினால் நியமிக்கப்பட்ட நவாஸ் ஆணைக்குழுவே போர் விவகாரங்களை ஆராய்ந்த கடைசி ஆணைக்குழுவாகும். 'வகைமாதிரியான வழக்குகளை" விசாரணை செய்வதை முதற்பணியாகக் கொண்டு உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஒன்று நியமக்கப்பட வேண்டும் என்று நவாஸ் ஆணைக்குழு சிபாரிசு செய்தது.

அத்தகைய ஒரு நடவடிக்கை போரில் பாதிக்கப்பட்ட மக்கள், பொதுமக்கள் மற்றும் சர்வதேச சமூகத்தின் மத்தியில் அரசாங்கத்தின் அக்கறை தொடர்பில் நம்பிக்கையை கட்டியெழுப்பும். பொருளாதார ஊழல்கள் பொறுத்துக் கொள்ளப்படப் போவதில்லை என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கும் மாற்றியமைக்கப்பட்ட இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவைப் போன்று உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவும் கடந்த காலத்துக்கு ஒரு முடிவைக் கட்டவும் தேசிய அபிவிருத்திக்காக சேர்ந்து பாடுபடுவதற்காக மக்களையும் சமூகங்களையும் ஐக்கியப்படுத்தவும் உதவ முடியும். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம், மட்டு.நகர் சபைகளை தமிழ் அரசு கைப்பற்றிய பின்னணியில் தமிழ்த் தேசிய எதிர்ப்புக் கட்சிகள்!

பனங்காட்டான்

ஈழப்போரின்போது பல களங்களைக் கொண்டதாக அமைந்தது ஓயாத அலைகள். இந்த நெடுஞ்சமர் 1,2,3 என்று வெவ்வேறு நிலப்பரப்புகளில் தொடர்ந்தது.

நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தல்களுக்கான சபைகளை அமைப்பதில் தொடரும் இழுபறிகள், இணைப்புகள், கூட்டுகள், கூட்டணிகள், விட்டுக்கொடுப்புகள், ஏமாற்றுகள், சரணாகதிகள் என்று ஒவ்வொன்றையும் பார்க்கும்போது இதனை தேர்தல் கால ஓயாத அலைகள் என அழைக்கலாமோ என்று எண்ண வைக்கிறது.

தேர்தல்கள் முடிந்து ஒரு மாதம் ஆகின்ற போதிலும், வென்றவர் தோற்றவராகவும், தோற்றவர் வென்றவராகவும் ஆக்கப்படும் நாடகங்கள் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு சபையிலும் இறுதி வெற்றி பெற்றவர் - பெறப்போகிறவர் எவர் என்பதை அறுதியிட்டுச் சொல்ல முடியாதவாறு கடலலை மேலே செல்லும் காகித ஓடம் போன்று தள்ளாட்டம் காணப்படுகிறது.

கடந்த வாரத்தில் சில சபைகள், அவை அறுதிப் பெரும்பான்மை பெற்றதால் சுலபமாக தங்களின் தவிசாளரையும், உதவித் தவிசாளரையும் தெரிவு செய்தன. தமிழரசுக் கட்சிக்குள் தனிக்காட்டு ராஜாவாக திகழும் சிவஞானம் சிறீதரன் தமது கிளிநொச்சித் தொகுதியின் மூன்று சபைகளும் இவரது ஆளுமையால் அறுதிப் பெரும்பான்மையை பெற்றதால் தெரிவுகளை முடித்துவிட்டார்.

மற்றைய சபைகளில் அதிகப்படியான உறுப்பினர்களைப் பெற்ற (இது அறுதிப் பெரும்பான்மை அல்ல) சில சபைகளுக்கு தலைவருக்கான போட்டிகள் இடம்பெற்றன. இதற்கான முதலாவது கூட்டம் அந்தந்த பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தலைமையில் இடம்பெற்றது. யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த 13ம் திகதி வெள்ளிக்கிழமை மூன்று சபைகளுக்கான தெரிவுகள் இடம்பெற்றன. இதற்கு முன்னரான சில நாட்கள் ஆள்பிடி படலம் இடம்பெற்றது.

இந்தக் காலம் ஊடகங்களுக்கு அளவுக்கு மிஞ்சிய தீனி கிடைத்தது. சில ஊடகங்கள் தாமே முடிவை தீர்மானிப்பவைகள் போன்று விடயங்களை ஊதிப் பெருப்பித்தன. வேறு சில ஊடகங்கள் காண்டம் வாசிப்பவர்களாகவும், கைரேகை சாத்திரிகளாகவும் மாறிக்கொண்டன. கனாக்கால வேடிக்கையாக இந்நாட்கள் நகர்ந்தன.

கடந்த வார பத்திகளில் குறிப்பிட்டவாறு தமிழ்த் தேசியத்துக்கு தீண்டப்படாதவர்கள் என பட்டியலிடப்பட்டவர்களின் படிகளில் ஏறிச் சென்று ஆதரவு கேட்ட காட்சிகளையும் காணமுடிந்தது. விடுதலைப் புலிகளின் நம்பிக்கைக்குரியவராகவும், திலீபனின் சாத்வீக போராட்டக் காலத்தில் அமைக்கப்படவிருந்த இடைக்கால நிர்வாகத்துக்கு விடுதலைப் புலிகளால் தலைவர் பதவிக்கு பரிந்துரைக்கப்பட்டவருமான சி.வி.கே.சிவஞானம், யாழ்நகரிலுள்ள ஸ்ரீதர் தியேட்டருக்குள் சென்றதை பலராலும் ஜீரணிக்க முடியாதிருந்தது. இவரை கொள்கை ரீதியாக ஏற்காதவர்களும் இவரது படியேற்றத்தைக் கண்டித்தனர்.

பன்றியோடு கூடினால் பசுவும் அதனை பழகிவிடுமென்று தமிழரசின் கிழக்கு மாகாண பிரமுகர் ஒருவர் கூறிவிட்டு நெடுமூச்சு விட்டார். சீ.வி.விக்னேஸ்வரன் வடமாகாண முதலமைச்சராகவிருந்தபோது அவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவதில் முன்னின்று ஈடுபட்ட சுமந்திரன், கடந்த வாரம் கொழும்பிலுள்ள விக்னேஸ்வரனின் வீட்டுக்கு படி தாண்டிச் சென்று அவரது தமிழ் மக்கள் கூட்டணி ஆதரவு வேண்டி ஒப்பந்தம் செய்தார். விக்கியர் புத்திசாலி. சுமந்திரனுக்கு சட்டக்கல்லூரியில் பாடம் போதித்தவர் அல்லவா? செய்யப்பட்ட ஒப்பந்தம் நல்லூர் பிரதேச சபைக்கு மட்டுமே என்று எழுத்தில் வரையறை செய்துவிட்டார்.

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கான மேயர், உதவிமேயர், நல்லூர் பிரதேச சபைக்கான தவிசாளர், உதவித்தவிசாளர் தெரிவுகள் அனைவராலும் உன்னிப்பாக எதிர்நோக்கப்பட்டவை. யாழ்ப்பாணம் மாநகர சபையில் தமிழரசு கட்சி 13 ஆசனங்களைக் கொண்டது. தமிழ்த் தேசிய பேரவை எனும் கஜேந்திரகுமார் தலைமையிலான அணி 12 பேரைக் கொண்டது. டக்ளசின் ஈ.பி.டி.பி.யும், ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பும் தலா நான்கு ஆசனங்களைக் கொண்டவை. இதில் ஈ.பி.டி.பி. ஏற்கனவே தமிழரசுடன் இணைய ஏற்பாடாகயிருந்தது. மறுதரப்பில் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு கஜேந்திரகுமார் அணியோடு இணைந்திருந்தது. அதேசமயம் ஒவ்வொரு ஆசனங்களைக் கொண்டிருந்த ரணிலின் ஐக்கிய தேசிய முன்னணியும் சஜித்தின் ஐக்கிய மக்கள் சக்தியும் அமைதியாக இருந்துவிட்டு தமிழரசை ஆதரிக்குமென்ற எதிர்பார்ப்பும் இருந்தது. அதுவே நடைபெற்றதும்.



ரணில், சஜித், டக்ளஸ் ஆகியோரின் தலைமையிலான தமிழ்த் தேசியத்தை ஏற்றுக் கொள்ளாத கட்சிகள் வழங்கிய ஆதரவினால் வடக்கு, கிழக்கின் பிரதான மாநகர சபைகளில் தமிழரசுக் கட்சி வெற்றி பெற்றது என்பதே உண்மை. தமிழரசிலுள்ள எக்கராஜ்ஜிய கொள்கையாளருக்கான நன்றிக்கடனாகவே இந்த ஆதரவு வழங்கப்பட்டுள்ளது. இது, அடுத்த நான்கு ஆண்டுகளுக்கு பிசகின்றித் தொடருமென நம்ப முடியுமா?



19 வாக்குகளைப் பெற்ற தமிழரசுக் கட்சி மேயர், உபமேயர் பதவிகளைக் கைப்பற்றிக் கொண்டது. 10 ஆசனங்களில் வெற்றி பெற்றிருந்த அநுர குமரவின் தேசிய மக்கள் சக்தி நடைபெறுபவைகளை பார்த்துக்கொண்டு எவரையும் ஆதரிக்காது அமைதியாக இருந்தது.

45 உறுப்பினர்களைக் கொண்ட இந்த மாநகர சபையில் 13 பேரை மட்டும் கொண்டிருந்த தமிழரசு, 2 சிங்களத் தலைமை கட்சிகளதும், தமிழ்த் தேசியம் என்ற வட்டகைக்குள் அடங்காத ஈ.பி.டி.பி.யின் ஆதரவுடனும் தனது கதிரை ஆசையை நிறைவேற்றிக் கொண்டது. இதனை, கஜேந்திரகுமாரின் தமிழ்க் காங்கிரசை யாழ்ப்பாணம் மாநகர சபையை கைப்பற்றாமல் தடுத்துக் கொண்டது என்றும் சொல்ல முடியும். தமிழரசு பெற்றுக் கொண்ட 19 என்பது மொத்த எண்ணிக்கையான 45ல் ஐம்பது வீதத்துக்கும் குறைவானது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

நல்லூர் பிரதேச சபையில் விக்னேஸ்வரன் - மணிவண்ணன் கூட்டிலான தமிழ் மக்கள் கூட்டணிக்கு 6 ஆசனங்கள் கிடைத்தன. தமிழரசுக் கட்சிக்கு 7 ஆசனங்கள் கிடைத்தது. அநுரவின் தேசிய மக்கள் சக்திக்கும், ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்புக்கும் தலா 3 கிடைத்தன. அநுர அணி எவரையும் ஆதரிக்காது என்பதால் தமிழரசு இங்கு தனித்து ஆட்சியமைத்திருக்க முடியும். ஆனால் சிலசமயம் தமிழ் மக்கள் கூட்டணியும், ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பும் இணைந்துவிட்டால் அவர்கள் ஆட்சியமைத்து விடுவார்கள் என்ற அச்சம் தமிழரசுக்கு இருந்தது. அதனைத் தடுப்பதற்காக விக்னேஸ்வரனைச் சந்தித்து அவருடன் ஒப்பந்தம் செய்து முதல் இரண்டு வருடங்களையும் அவரது முன்னணிக்குக் கொடுத்துவிட்டது. இதனால் முன்னணியின் மயூரன் இச்சபையின் தலைவராகியுள்ளார். இது தான் சுமந்திரன் சொல்லிவரும் தேர்தல் கோட்பாடு என்பது போலும்.

சாவகச்சேரி நகரசபைக்கான தெரிவு லொத்தர் அதிர்ஸ்டம் போன்றது. இங்கு தமிழ் தேசிய பேரவைக்கும், தமிழரசு கட்சிக்கும் தலா 7 வாக்குகள் ஆதரவாகக் கிடைத்தன. பேரவையில் இடம்பெற்ற பெண் உறுப்பினர் மீது உயர்நீதிமன்றம் இடைக்கால தடையுத்தரவு பிறப்பித்ததால் அவர் வாக்களிப்பில் பங்கேற்க முடியவில்லை. பேரவையின் சார்பில் தவிசாளர் பதவிக்கு போட்டியிட்ட சிறீபிரகாசுக்கும், தமிழரசின் வேட்பாளர் கைலாசபிள்ளைக்கும் போட்டியில் சமமான வாக்குகள் கிடைத்தன. திருவுள சீட்டு முறையில் சிறீபிரகாஸ் தவிசாளராகவும், கிஷோர் உபதவிசாளராகவும் தெரிவாகினர். அதிர்ஸ்ட தேவதையால் கஜேந்திரகுமாரின் பேரவை சாவகச்சேரி சபையை கைப்பற்றிவிட்டது.

மட்டக்களப்பு மாநகரசபை மேயராக ஊடகவியலாளர் சிவம் பாக்கியநாதன் தெரிவாகியுள்ளார். தமிழரசுக் கட்சியைச் சார்ந்த இவரிடம் 16 வாக்குகள் மட்டும் இருந்தன. சஜித் பிரேமதாசவின் ஐக்கிய மக்கள் சக்தியின் இருவர் இவரை ஆதரித்தனர். பிரதி மேயர் தினேசும் இவ்வாறே 18 வாக்குகளால் தெரிவானார்.

மட்டக்களப்பின் மண்முனை தென்மேற்கு பிரதேச சபையை தமிழரசுக் கட்சி இம்முறை இழந்துள்ளது. பந்து சின்னத்தில் போட்டியிட்ட சுயேட்சைக் குழுவும், பிள்ளையான் தலைமையிலான கிழக்கு தமிழர் கூட்டணியும் இணைந்து தமிழரசுக் கட்சியின் வேட்பாளர் கோபாலபிள்ளை சுரேந்திரனை தோற்கடித்துள்ளனர். இவருக்கு 6 வாக்குகள் கிடைத்துள்ளன. வெற்றிபெற்ற சுரேந்திரனுக்கு 9 வாக்குகள் கிடைத்தன. கடந்த முறை இச்சபையில் வெற்றி பெற்ற தமிழரசுக் கட்சிக்கு இம்முறை எதிர்பாராத தோல்வி கிடைத்துள்ளது.

வடக்கிலும் கிழக்கிலும் பல சபைகளுக்கான தவிசாளர், உதவித் தவிசாளர் தெரிவுகள் வரும் நாட்களில் இடம்பெறவுள்ளன. தனிக்கட்சிகளும் கூட்டுகளும் சில சபைகளில் போட்டியிடும் சாத்தியம் காணப்படுகிறது.


தேர்தலின் பின்னர் தமிழ்த் தேசிய கட்சிகளின் கோட்பாடு அடிப்படையில் இணைந்து ஆட்சியைக் கைப்பற்றுவோம் என்று கூறிய தமிழரசுக் கட்சியின் சுமந்திரன், தேர்தல் முடிவுகளின் பின்னர் தேசியம் என்பதை மறைத்துவிட்டு (அழித்துவிட்டு) தமிழ்க் கட்சிகளுடன் இணைவோம் என்று தீர்மானம் எடுத்தது, வசதி கருதிய ஒரு நிலைப்பாடு. இது ஈ.பி.டி.பி.யுடன் தாலி கட்டாத சம்பந்தம் செய்வதற்கான முன்னேற்பாடு.

அது மட்டுமன்றி ரணிலின் ஐக்கிய தேசிய முன்னணி, சஜித்தின் ஐக்கிய தேசிய சக்தி ஆகியவற்றின் ஆதரவு யாழ்ப்பாணம் மாநகர சபையிலும், சஜித்தின் ஐக்கிய தேசிய சக்தியின் ஆதரவு மட்டக்களப்பு மாநகர சபையிலும் தமிழரசு கட்சியால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. இது சுமந்திரனின் எக்கராஜ்ஜியத்துக்குக் கிடைத்த ஆதரவாக பார்க்கப்பட வேண்டியது என்பதற்கு மாற்றுக்கருத்திருக்க முடியாது.

இனி இடம்பெறப்போகும் பல சபைகளின் தெரிவுகளும், முக்கியமாக கொழும்பு மாநகர மேயர் தெரிவும் அரசியல்வாதிகளதும் கருத்துருவாக்கிகளதும் கழுகுப் பார்வையில் உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆபத்தில் சிக்கியோருக்கு புகலிடம் வழங்குவதில் பெருமைக்குரிய தமிழகத்தின் வரலாற்றில் ஓர் இருண்ட அத்தியாயம்!



ரி. இராமகிருஷ்ணன்

ஆபத்தில் சிக்கியோர் எங்கிருந்து வந்தாலும் அவர்களுக்கு புகலிடம் வழங்குவதில் பெருமைக்குரிய ஒரு வரலாற்றைக் கொண்டது தமிழ்நாடு. ஆனால், மாநிலத்தின் இந்த பாரம்பரியத்தில் இலங்கை அகதிகள் தொடர்பான ஒரு 1990 மார்ச் அத்தியாயம் ஒரு விலகலைக் குறித்து நிற்கிறது. 1,612 அகதிகள் (அவர்களில் 353 பெண்கள், 400 சிறுவர்கள்) சம்பந்தப்பட்ட இந்த அத்தியாயம் பொதுவெளிக் கதையாடல்களில் பெரிதாக ஆராயப்படாமல் இருந்து வருகிறது. அதனால், ஜூன் 20 ஆம் திகதி உலக அகதிகள் தினம் அனுஷ்டிக்கப்படவிருக்கும் பின்புலத்தில் அதை நினைவுபடுத்துவது பொருத்தானதாக அமையும்.

1989 ஜனவரியில் ரணசிங்க பிரேமதாச ஜனாதிபதியாக பதவிக்கு வந்ததை அடுத்து இலங்கையில் இந்திய அமைதிகாக்கும் படையின் பிரசன்னம் தொடர்பில் ஒரு வேறுபட்ட உணர்வைக் காணக்கூடியதாக இருந்தது. ஐந்து மாதங்கள் கழித்து பிரேரமதாச இந்திய படைகள் நாட்டைவிட்டு வெளியேற வேண்டும் என்று பகிரங்கமாகக் கோரினார். 1987 ஜூலை 29 இந்திய - இலங்கை சமாதான உடன்படிக்கையை தொடர்ந்து அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தனாவின் வேண்டுகோளின் பேரில் இந்திய அமைதிகாக்கும் படைகள் இலங்கைக்கு சென்றன.

இந்திய படைகளுக்கு எதிராக இரு வேறு தீவிரவாத இயக்கங்கள் (ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.), தமிழீழ விடுதலை புலிகள் தனித்தனியாக போராட்டங்களை முன்னெடுத்த சூழ்நிலையை மனதிற் கொண்டு புதிய ஜனாதிபதி அந்தக் கோரிக்கையை முன்வைத்தார். 1989 ஜூல இறுதியில் இருந்து இந்திய படைகள் விலகத் தொடங்கியதற்கு பிறகு வடக்கு, கிழக்கு பிராந்தியங்களின் பகுதிகளை விடுதலை புலிகள் தங்களின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரத் தொடங்கினர்.

அன்றைய இணைந்த வடக்கு - கிழக்கு மாகாண சபையில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (ஈ.பி. ஆர்.எல்.எவ்.) அண்ணாமலை வரதராஜப் பெருமாள் தலைமையிலான அரசியல் கட்டமைப்பின் முடிவுக்கு வரப்போகிறது என்பது தெளிவாகத் தெரிந்த நிலையில், தமிழ்நாட்டுக்கு ஒரு பெரிய அளவில் அகதிகள் வருகை மீண்டும் தொடங்கியது.

இத்தகைய பின்புலத்தில், 1,250 அகதிகளை ஏற்றிக் கொண்டுவந்த ஹர்ஷ் வர்தன, திப்பு சுல்தான் என்ற இரு கப்பல்கள் அன்றைய மெட்ராஸ் துறைமுகத்தில் மார்ச் 8, 9 ஆம் திகதிகளில் அவர்களை இறக்குவதற்கு அனுமதிக்கப்படவில்லை.

இரு கப்பல்களும் விசாகபட்டினம் துறைமுகத்துக்கு திசை திருப்பப்பட்டதை அடுத்து அங்கிருந்து அகதிகள் ஒடிசாவுக்கு (அன்றைய ஒரிசா) கூட்டிச் செல்லப்பட்டனர். கோராப்புட் நகரில் இருந்து சுமார் 125 கிலோ மீட்டர்கள் தொலைவில் உள்ள மல்காங்கிரியில் இடைத் தரிப்பு முகாமில் அவர்கள் தங்க வைக்கப்பட்டனர்.

திருகோணமலையில் இருந்து மெட்ராஸுக்கு அகதிகளை கப்பலில் ஏற்றிக்கொண்டு செல்வதற்கான தீர்மானம் 1990 ஜனவரி- பெப்ரவரியில் புதுடில்லியில் வெளிவிவகார அமைச்சர் ஐ.கே. குஜ்ராலுக்கும் வடக்கு - கிழக்கு மாகாண முதலமைச்சருக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பு ஒன்றில் எடுக்கப்பட்டதாக 'உத்தியோகபூர்வ வட்டாரங்களையும் வேறு வட்டாரங்களையும்' மேற்கோள்காட்டி மார்ச் 10 ஆம் திகதி 'தி இந்து' வில் வெளியான செய்தி ஒன்றில் தெரிவிக்கப்பட்டது. அந்த தீர்மானத்தின் அடிப்படையில் மாத்திரமே சுமார் 1300 அகதிகளை ஏற்றிக் கொண்டு செல்வதற்கு ஹர்ஷ் வர்தனவும் திப்பு சுல்தானும் வாடகைக்கு அமர்த்தப்பட்டன. அது பற்றி அன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் மு.கருணாநிதி பெரும்பாலும் எதுவும் தெரிந்திருக்கவில்லை என்றும் அந்த செய்தி கூறியது.

இலங்கை பாராளுமன்றத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ்.வின் உறுப்பினராக இருந்த சுரேஸ் கே. பிரேமச்சந்திரன் அந்த அகதிகள் நடத்தப்பட்ட முறை குறித்து பெரும் கசப்படைந்தார். திருகோணமலை துறைமுகத்தில் கப்பலில் ஏற்றப்பட்ட நேரத்தில், மெட்ராஸ் துறைமுகத்தில் இறக்கப்படுவார்கள் என்றே பயணிகளுக்கு உறுதியளிக்கப்பட்டது. 'அவர்களது மனவேதனையை நினைத்துப் பாருங்கள். என்ன நடக்கிறது என்பதை தெரியாதவர்களாக அவர்கள் நடுக்கடலில் இருந்தார்கள்' என்று பிரேமச்சந்திரன் கூறியதாகவும் 'தி இந்து'வின் அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

பிரதமர் வி.பி. சிங் தலைமையிலான தேசிய முன்னணி அரசாங்கத்தில் தகவல், ஒலிபரப்புத்துறை அமைச்சராக இருந்த பி. உபேந்திரா மார்ச் 9 ஆம் திகதி மெட்ராஸில் செய்தியாளர்களிடம் பேசுகையில் 'கப்பல்களில் உள்ள பயணிகள் மெய்யான அகதிகளா அல்லது ஈ.பி.ஆர்.எல். எவ். உறுப்பினர்களா என்று சந்தேகம் இருக்கிறது' என்று கூறினார்.

அகதிகள் என்று கூறப்படுபவர்கள் கப்பல்களில் ஆயுதங்களை இரகசியமாக எடுத்துக்கொண்டு வந்திருக்கக் கூடிய ஈ.பி.ஆர்.எல்.எவ். மற்றும் ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி (ஈ.என்.டி.எல். எவ் ) யின் உறுப்பினர்களாக இருக்கக்கூடும் என்ற ஐயுறவு குறித்து கருத்து வெளியிட்ட பிரேமச்சந்திரன், பயணிகள் ஒவ்வொருவரும் திருகோணமலையில் சீனக்குடாவில் பூரணமாச் சோதனை செய்யப்பட்டனர். அத்துடன் கப்பலில் ஒரு ஆயுதம் கூட இருக்கவில்லை என்பதை இந்திய அமைதி காக்கும் படையினரும் உறுதிப்படுத்தினர்' என்று தெரிவித்தார்.

அன்றைய ஆந்திரப் பிரதேச முதலமைச்சர் எம். சென்னாரெட்டி இரு கப்பல்களும் விசாகபட்டினம் துறைமுகத்தின் வெளிப்பகுதியில் தரித்துநிற்க அனுமதித்து அகதிகளுக்கு உணவும் நீரும் வழங்கினார். ஆனால், அவர்கள் அந்த துறைமுகத்தில் இறங்குவதற்கு அனுமதிக்க மறுத்து விட்டார் என்று புபனேஷ்வரைச் சேர்ந்த ஆய்வாளரும் எழுத்தாளருமான அனில் தீர் கூறினார். வேறு முதலமைச்சர்களும் இதே நிலைப்பாட்டை எடுத்தனர். தங்களது மாநிலங்களில் எந்த தொல்லையும் ஏற்படுவதை அவர்கள் விரும்பவில்லை. இறுதியில் ஒடிசா முதலமைச்சர் பிஜூ படநாய்க் அகதிகளை ஏற்றுக்கொள்வதற்கு இணங்கினார்.



நான்கு நாட்களுக்கு முன்னர்தான் (மார்ச் 5) முதலமைச்சராக பதவியேற்றிருந்தார். என்றாலும் அவர் அத்தகைய முக்கிய தீர்மானம் ஒன்றை எடுக்கத் தயங்கவில்லை. 26 வருடங்களுக்கு பிறகு முதலமைச்சராக வந்த அவர் ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கத்தின் பொதுச் செயலாளர் கே. பத்மநாபாவுடன் சேர்த்து மற்றவர்களுக்கும் இடம்கொடுக்குமாறு பிரதமர் சிங் விடுத்த வேண்டுகோளுக்கு மீண்டும் இணங்கினார். இந்த கட்டுரையாளர் அண்மையில் வரதராஜப் பெருமாளுடன் நடத்திய சம்பாஷணை ஒன்றின்போது அவர் அதை ஒத்துக் கொண்டார்.

ஒரு மட்டான பொருளாதார நிலைவரத்தைக் கொண்டிருந்த போதிலும், ஒடிசா அகிதிகளை ஏற்றுக்கொள்ள முன்வந்ததை பாராளுமன்ற உறுப்பினர்கள் கவனிக்கத் தவறவில்லை. 1990 மார்ச் 29 ஆம் திகதி அந்த மாநிலத்தின் அஸ்கா தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் ஏ.என். சிங் தியோ தனது மாநிலத்தை 'மிகவும் வறியது' என்று கூறி அகதிகளுக்கு புகலிடம் வழங்குவதற்கான செலவை மத்திய அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுமா என்று குஜ்ராலிடம் கேட்டார். முழுச் சுமையையும் மத்திய அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும் என்று குஜ்ரால் உறுதியளித்தார்.

அகதிகள் மத்தியில் ஈ.பி.ஆர்.எல்.எவ். உறுப்பினர்கள் இருந்தனர் என்பது உண்மையே. ஆனால், அவர்கள் விடுதலை புலிகள் இயக்கப் போராளிகளை விடவும் ஆபத்தானவர்கள் இல்லை என்று மல்காங்கிரி முகாமில் தங்கியிருந்த ஈ.பி.ஆர்.எல்.எவ். செயற்பாட்டாளரான சுகுமார் 'தி இந்துவு"க்கு கூறியதாக 1990 மார்ச் 13 ஆம் திகதி வெளியான செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால், அகதிகளுக்கு புகலிடம் அளிப்பதற்கு தனது அரசாங்கம் தெரிவித்த மறுப்பை நியாயப்படுத்துவதற்கு கருணாநிதிக்கு காரணங்கள் இருந்தன. 1990 ஏப்ரில் 26 ஆம் திகதி சட்டசபையில் இடம்பெற்ற விவாதம் ஒன்றில் குறுக்கிடட முதலமைச்சர் தனது தீர்மானத்துக்கு சட்டம் , ஒழுங்கை பிரதான காரணமாகக் கூறினார்.

போராளிகள் அயல் மாநிலங்களில் இருந்து கூட விலக்கிவைக்கப்பட வேண்டும் என்று கருணாநிதி உணர்ந்தார் என்று 1990 ஏப்ரில் 27 ஆம் திகதி 'தி இந்து' செய்தி வெளியிட்டது. அகதிகளில் பெரும்பான்மையானவர்கள் போராளிகளாக இருந்ததால் அவர்கள் எல்லோரையும் மத்திய அரசாங்கம் அந்தமான் தீவுக்கு மாற்றவேண்டும் என்று கூட கருணாநிதி யோசனை கூறினார். தனது இந்த யோசனை குறித்து பிரதமர் சிங்குடனும் வெளிவிவகார அமைச்சர் குஜ்ராலுடனும் கலந்தாலேசித்ததாக இரு வாரங்களுக்கு பிறகு அவர் செய்தியாளர்களிடம் கூறினார்.

அகதிகள் விவகாரத்தை பாராளுமன்றமும் விவாதித்தது. 'விருந்தோம்பல் என்பது கதவை அகலத்திறந்து விடுவதாக அர்த்தப்படாது" என்று வெளிவிவகார அமைச்சர் 1990 மார்ச் 28 ஆம் திகதி பாராளுமன்றத்தின் ராஜ்ய சபாவில் கூறினார். அதேவேளை, இந்தியாவின் 'மனிதாபிமானப் பாரம்பரியங்களுக்கு இசைவாக, தங்களுக்கு உயிராபத்து இருப்பதாக உணரும் அகதிகளை (தற்போதைய சந்தர்ப்பத்தைப் போன்று) அனுமதிப்பதற்கு நாம் ஒருபோதும் மறுத்ததில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். இந்தியாவுக்கு அகதிகள் கடல் மார்க்கமாகவும் ஆகாய மார்க்கமாகவும் கொண்டுவரப்பட்டனர் என்றும் அவர் கூறினார்.

பட்நாய்க் நிருவாகம் அகதிகளை அனுதாபத்துடன் கவனித்த போதிலும், அவர்களில் பலர் தாங்கள் தங்கியிருப்பதற்கு உகந்த இடமாக ஒடிசாவை கருதவில்லை. போராளிகள் ஒடிசாவில் இருந்து ரயில் மூலம் சென்னைக்கு தொடர்ந்து வந்துகொண்டிருப்பதாகவும் பொலிசார் அவர்களை பிடிப்பதாகவும் கருணாநிதி சட்டசபையில் அறிவித்தார். முகாம்களில் இருந்து வெளியேறும் அகதிகளின் செயலை 'தவறானது" என்று மே மாத நடுப்பகுதியில் வர்ணித்த அவர் தமிழ்நாட்டுக்கு வந்தவர்களில் போராளிகளான 190 பேர் கைதுசெய்ப்பட்டு காவலில் வைக்கப்பட்டதை ஒத்துக்கொண்டார். பெண்கள், சிறுவர்கள் உட்பட மற்றைய அகதிகள் கைது செய்யப்படவில்லை என்று அவர் கூறியதாக 1990 மே 17 ஆம் திகதி 'தி இந்து' பத்திரிகை செய்தி வெளியிட்டது.

ஒடிசாவில் இருந்து தமிழ்நாட்டுக்கு வந்த 111 இலங்கை அகதிகள் மத்திய சிறையில் உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தியதை தொடர்ந்து அவர்களை விடுதலை செய்யுமாறு முதலமைச்சர் உத்தரவிட்டார். மத்திய உள்துறை அமைச்சு வெளியிட்ட வருடாந்த (1990 - 91) அறிக்கையின் பிரகாரம் ஒடிசாவில் இருந்த அகதிகளின் எண்ணிக்கை ஒரு வருட காலத்திற்குள் 218 ஆகக் குறைந்துவிட்டது. 1991 மார்ச் 31 ஆம் திகதியளவில் இந்தியாவில் இருந்த இலங்கை அகதிகளின் எண்ணிக்கை 2.1 இலட்சமாகும்.

முகாம்களில் இருந்து வெளியேறியவர்களில் பெரும்பான்மையானவர்கள் மேற்கு நாடுகளுக்கு சென்று குடியேறி விட்டதாக வடக்கு - கிழக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் நினைப்பூட்டுகிறார். இந்தியாவின் மத்திய மற்றும் வடக்கு பாகங்களுக்கு கூட்டிச் செல்லப்படுவதற்கு முன்னதாக தானும் தனது குடும்பமும் ஆரம்பத்தில் மொரீசியஸ் நாட்டுக்கு கொண்டு செல்லப்பட்டதாக அவர் கூறினார். அவர் இப்போது இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் பயணம் செய்து கொண்டிருக்கிறார்.

இந்த அத்தியாயம் பெரும் கவலைக்குரிய சம்பவத்துடன் முடிவுக்கு வந்தது. ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கத்தின் பொதுச் செயலாளர் பத்மநாபாவும் வேறு 14 பேரும் 1990 ஜூன் 19 ஆம் திகதி மாலை சென்னையில் மிகவும் சனசந்தடி மிக்க கோடம்பாக்கத்தில் தொடர்மாடி வீடொன்றில் கூட்டம் ஒன்றை நடத்திக்கொண்டிருந்த வேளையில் விடுதலை புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தது என்று கூறப்பட்ட கொலைக்குழு ஒன்றினால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

(தி இந்து )

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொது மன்னிப்பில் ஆள்மாறாட்டம்: இலங்கையில் ஜனாதிபதி பெயரிலேயே நடந்த முறைகேடு!

ரஞ்சன் அருண் பிரசாத்

ஜனாதிபதி பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்படுகின்ற சிறைக் கைதிகள் தொடர்பில் இம்முறை பாரிய சர்ச்சை எழுந்துள்ளது. ஜனாதிபதி பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்ய அனுமதிக்கப்பட்ட சிறை கைதிகளுக்கு பதிலாக வேறு கைதி விடுதலை செய்யப்பட்டதை அடுத்தே இந்த சர்ச்சை எழுந்துள்ளது.

இந்த சர்ச்சை தொடர்பில் உடனடியாகப் பணி நீக்கம் செய்யப்பட்ட சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய, குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டிருந்தார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சிறைச்சாலை திணைக்கள ஆணையாளர் நாயகம், கொழும்பு நீதவான் முன்னிலையில் இன்றைய தினம் முன்னிலைப்படுத்தப்பட்டார். அவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

அத்துடன், இந்தச் சம்பவம் தொடர்பில் அநுராதபுரம் சிறைச்சாலையின் பொறுப்பாளர், குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அநுராதபுரம் மேல் நீதிமன்றத்தால் குற்றவாளி என அறிவிக்கப்பட்டு தண்டனை வழங்கப்பட்ட சிறைக் கைதி ஒருவர், இம்முறை ஜனாதிபதி பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

நாற்பது லட்சம் ரூபா நிதி மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்ட நிதி நிறுவனமொன்றின் அநுராதபுரம் கிளை முகாமையாளருக்கு சிறைத் தண்டனை வழங்கப்பட்ட நிலையில், தண்டனை முழுமையாக நிறைவேற்றப்படுவதற்கு முன்பாக ஜனாதிபதி மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

வடமத்திய மாகாண மேல் நீதிமன்ற நீதிபதி லக்மாலி ஹேவாசமினால், இந்தக் குற்றவாளி விடுதலை செய்யப்பட்டிருந்தார். இந்தச் சம்பவம் தொடர்பில் முறைப்பாட்டாளர், மீண்டும் முறைப்பாடு ஒன்றைச் செய்த நிலையிலேயே இந்தச் சம்பவம் மீண்டும் சர்ச்சையைத் தோற்றுவித்துள்ளது.

அநுராதபுரம் சிறைச்சாலை அதிகாரிகள், எழுத்து மூலம் நீதிமன்றத்திற்கு முன்வைத்த ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டே இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

வெசக் பூரணை தினத்தை முன்னிட்டு ஜனாதிபதியால் வழங்கப்பட்ட பொது மன்னிப்பின் கீழ் இந்தக் குற்றவாளி விடுதலை செய்யப்படுவதாக சிறைச்சாலை அதிகாரிகள் நீதிமன்றத்திற்கு அறிவித்திருந்தனர்.

இந்த விடயங்களை ஆராய்ந்த நீதிபதி, குற்றவாளிக்கு



எதிரான வழக்கில் இருந்து விடுதலை செய்திருந்தார்.

இந்நிலையில், ஜனாதிபதி பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டவர்களின் பெயர்ப் பட்டியலில், அநுராதபுரம் சிறைச்சாலையில் இருந்து விடுதலை செய்யப்பட்ட நிதி மோசடியுடன் தொடர்புடைய நபரின் பெயர் உள்ளடக்கப்படவில்லை என ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

இந்த நடவடிக்கையானது முறைகேடான நடவடிக்கை எனவும் ஜனாதிபதி செயலகம் அண்மையில் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

2025 வெசாக் பண்டிகையை முன்னிட்டு ஜனாதிபதி பொது மன்னிப்பின் கீழ் அநுராதபுரம் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த டபிள்யூ.எச். அதுல திலகரத்ன என்பவர் விடுவிக்கப்பட்டதாகவும், இந்தச் சம்பவத்தின் பின்னணியில் கடுமையான முறைகேடு இருப்பதாகவும் வெளியான செய்தி குறித்து ஜனாதிபதி செயலகம் கவனம் எடுத்தள்ளது.

அரசியலமைப்பின் 34 (1) பிரிவின்படி, கைதிகளுக்குப் பொது மன்னிப்பு வழங்க ஜனாதிபதிக்கு அதிகாரம் உள்ளது. அதன்படி, சிறைச்சாலை அதிகாரிகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட கைதிகளின் பட்டியல் நீதி அமைச்சுக்கு அனுப்பப்படும். இந்தப் பட்டியல் நீதி அமைச்சினால் பரிசீலிக்கப்பட்டு ஜனாதிபதி செயலகத்திற்கு அனுப்பப்படுகிறது. அதன்படி, ஜனாதிபதியின் அனுமதியுடன், குறித்த கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கப்படும்.

எவ்வாறாயினும், மேற்குறித்த சம்பவத்திற்கு அமைவாக 2025-05-06 தேதியிடப்பட்ட சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்தால் ஜனாதிபதி செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த பொது மன்னிப்பு கிடைக்க வேண்டியவர்களின் பெயர்ப் பட்டியலில் 388 கைதிகளின் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தன.

அத்துடன், அநுராதபுரம் சிறைச்சாலையில் நிதி மோசடி தொடர்பாகச் சிறையிடப்பட்ட நபரின் பெயர் அந்தப் பட்டியலில் எங்கும் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. அதாவது, ஜனாதிபதியால் பொது மன்னிப்புக்காக அனுமதிக்கப்பட்ட 388 பெயர்களில் அந்த நபரின் பெயர் சேர்க்கப்படவில்லை.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஜனாதிபதி செயலகம் ஜூன் 06ஆம் தேதி 'ஜனாதிபதி பொது மன்னிப்பின் கீழ் சிறைக் கைதிகளை விடுவிப்பது தொடர்பாக' என்ற தலைப்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் நாட்களில் இது தொடர்பாக முறையான விசாரணை நடத்தப்பட்டு, அதற்குப் பொறுப்பான அதிகாரிகள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும்.

கடந்த காலங்களில் நாடு பூராகவும் உள்ள சிறைச்சாலைகளில் ஜனாதிபதி பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்ட சிறைக் கைதிகளில் தகுதியற்ற சிலர் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக உள்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த நிலையில், இவ்வாறான சம்பவங்கள் தொடர்பிலும் விசாரணைகளை நடத்த வேண்டும் எனப் பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

ஜனாதிபதி பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்படுவோரின் பட்டியலில் தகுதியற்ற கைதிகள் விடுதலை செய்யப்படுகின்றமைக்குப் பின்னணியில் சிறைச்சாலை ஆணையாளர் மாத்திரமன்றி, பின்னணியில் பலரும் இருக்கக்கூடும் என தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன், ஃபேஸ்புக் பதிவொன்றின் ஊடாகத் தெரிவித்துள்ளார்.

அதோடு, இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய அதிகாரிகள், அரசியல்வாதிகள் அனைவரும் அடையாளம் காணப்பட்டு, விசாரணை, குற்றப் பத்திரிகை, வழக்கு, சிறைத் தண்டனை என்ற பாதையில் பயணிக்க வைக்கப்பட வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

அத்துடன், இது நிச்சயமாக முதல் சம்பவமாக இருக்க முடியாது எனவும், முன்னைய ஆட்சிக் காலத்திலும் நடந்த இத்தகைய விடுவிப்பு சம்பவ வரலாறுகள் தோண்டி எடுக்கப்பட்டு சட்டம் தன் கடமையைச் செய்ய வேண்டும் எனவும் மனோ கணேசன் குறிப்பிட்டுள்ளார். (பிபிசி)

# மரணத்தின் போது மனித உடலில் என்ன நடக்கிறது? ஓர் ஆழமான அறிவியல் ஆய்வு

ஈழத்து நிலவன்

மரணம் என்பது உயிருடைய ஒவ்வொருவருக்கும் தவிர்க்க முடியாத, ஆனாலும் முழுமையாக புரிந்துகொள்ள முடியாத, மிகவும் ஆழமான நிகழ்வாகும். இது எல்லோருக்கும் உண்டாகும் ஒரு அனுபவமாக இருந்தாலும், அதன் உட்பொருள், நிகழும் முறைகள் மற்றும் அதன் பின்னணியில் நிகழும் உயிரியல், நரம்பியல், உயிரணுக்கூறியல் நிகழ்வுகள் பற்றி மிகக் குறைவாகவே நம் சமூகத்திற்கு அறிவு உள்ளது. இந்தக் கட்டுரை, மரணம் நிகழும் போதுள்ள உடல் மாற்றங்களை விஞ்ஞான ரீதியாக விரிவாக ஆராய்கிறது. மேலும், மரணத்தின் போது "ஆவி" அல்லது "ஆன்மா" உடலை விட்டு வெளியேறுகிறதா என்ற கேள்வியையும், விஞ்ஞானம் மற்றும் தத்துவத்தின் அடிப்படையில் நேர்மையான பார்வையில் ஆராய்கிறது.

முதலில், மரணத்தை அறிவியல் ரீதியாகப் புரிந்துகொள்வது அவசியம். மரணம் ஒரு கணம் அல்ல, அது ஒரு நடந்துவரும் செயல்முறை. மரணம் என்பது உயிரின் ஒவ்வொரு அமைப்பும் அதன் செயல்பாடுகளை நெகிழ்த்துவிட்டு, உயிரின் ஒழுங்கமைக்கப்பட்ட அமைப்பு குலைந்து விழும் நிகழ்வாகும். மருத்துவத்தில், மரணம் இரு முக்கிய நிலைகளில் வரையறுக்கப்படுகிறது: மருத்துவ மரணம் (Clinical Death) மற்றும் உண்மையான உயிரியல் மரணம் (Biological Death). மருத்துவ மரணம் என்பது இருதயமும் சுவாசமும் நிறைவது. ஆனால் இது எதிர்நீட்சிகை (Resuscitation) மூலமாக திரும்பக்கூடியதாக இருக்கலாம். ஆனால், மூளையின் செயற்பாடு முற்றாக நிற்கும்போது, அதைப் பின் திரும்பச் செய்ய முடியாது. இதுவே உண்மையான உயிரியல் மரணமாகும்.

மரணம் ஏற்படும் போது உடலில் நிகழும் முக்கியமான மாற்றங்கள் ஒன்றன்பின் ஒன்றாக ஏற்படுகின்றன. முதலில் இருதயம் துடிப்பதை நிறுத்தும். இதனால் இரத்தம் ஓடுவதும், தசைகளுக்கு ஆக்சிஜன் சென்றடைவதும் நிற்கிறது. ஆக்சிஜன் இல்லாமல், உயிரணுக்கள் ATP எனும் ஆற்றல் மூலக்கூறை உருவாக்க முடியாத நிலைக்கு சென்று, தன்னைத்தானே அழிக்க தொடங்குகின்றன. இதை Hypoxia எனப்படும் ஆக்சிஜன் பற்றாக்குறை என அறிவியலில் அழைக்கின்றனர்.

மூளை, மனித உடலில் ஆக்ஸிஜனுக்கு மிகுந்த தேவை உள்ள உறுப்பு. இருதய துடிப்பு நிறைந்த சில நிமிடங்களுக்குள் மூளையின் நரம்பியல் செல்கள் அழிவதைக் கண்டுபிடித்துள்ளார்கள். குறிப்பாக மூளைமூலம் (Brainstem), இது சுவாசம், இருதய இயக்கம் போன்ற அடிப்படை செயல்களை ஒழுங்குபடுத்துகிறது. இதன் செயல் முடிவடையும் போது மனிதனின் உயிர் மறைதலாக கருதப்படுகிறது.

மரண தருணத்தில், சில முறை உடலில் திடீர் அசைவுகள், அல்லது காற்றை இழுக்கும் போல் தோன்றும் "அகோனல் சுவாசங்கள்" நிகழலாம். இவை உயிரோடு இருப்பதற்கான அறிகுறிகள் அல்ல, இது மூளைமூலச் சுருக்கங்களால் உண்டாகும் இயல்பான மறுமுறைச் செயற்பாடுகள் (Reflexes) மட்டுமே.

மரணத்திற்கு பின் உடலில் சில மாற்றங்கள் தொடர்ச்சியாக ஏற்படுகின்றன. முதலில், உடல் சூடு சீராகக் குறைவதைக் காணலாம். இதை Algor ஆழசவளை எனலாம். இதற்குப் பிறகு, Rigor Mortis என்ற நிலை உரு வாகும், இதில் தசைகள் உறைந்துபோகின்றன. இது ATP இன்றி தசை நெருக்கங்கள் திறக்க முடியாமலிருப்பதால் ஏற்படுகிறது. மேலும், Livor Mortis எனப்படும் இரத்தத்தின் கீழ் பகுதியிலுள்ள திரளும் ஏற்படுகிறது. அதன் விளைவாக தோலில் நீலம்சாயல் காணப்படும்.

மூளை செயலிழப்பின் பின், சில நிமிடங்களுக்கு சிறிய நரம்பியல் அலைகள் தொடர்ந்து இருப்பது சமீபத்திய ஆய்வுகளில் தெரிய வந்துள்ளது. இது, மரணம் ஒரு "முகப்பு" அல்ல, நிலையான செயல்முறை என்பதற்கான புதிய ஆதாரங்களைக் கொடுக்கிறது. மரணம் என்பது ஒரு திருப்புமுனை மட்டுமல்ல, அது ஒரு பரிணாம நிலை.

மனித உடலில் நினைவு, உணர்வு, சுயம் ஆகியவை அனைத்தும் மூளையின் வேதியியல் மற்றும் மின்னழுத்த செயல்பாடுகளால் இயக்கப்படுகின்றன. Alzheimer's, Dementia போன்ற நோய்களில் மூளை சேதம் ஏற்படும் போது, ஒரு மனிதனின் ஆளுமை முழுமையாக மாறிவிடலாம். இது "ஆன்மா" அல்லது "ஆவி" என்பது, மெய்யான மூளையியல் செயல்முறைகளில் இருக்கின்றதா என்பதற்கான நெருங்கிய சான்றாக பார்க்கப்படுகிறது.

ஆனால், ஆன்மா அல்லது ஆவி உடலை விட்டு வெளியேறுகிறதா என்பது எப்போதும் ஒரு கலாசார, மெய்யியல், அல்லது ஆன்மீக விவாதமாகவே இருந்து வருகிறது. பல மதங்களில், ஆன்மா என்பது சுய அசைவுள்ள, நித்யமான, மறுஜன்மம் அடையும் ஒரு சக்தியாக இருக்கிறது. ஆனால், இன்றைய அறிவியலில், இந்த ஆன்மாவை ஒரு அளக்கக்கூடிய அல்லது சோதிக்கக்கூடிய அங்கமாக நிரூபிக்க எவ்வித ஆதாரமும் கிடைக்கவில்லை.

20ஆம் நூற்றாண்டில் Dr. Duncan MacDougall என்பவர் மரண நேரத்தில் உடல் எடை 21 கிராம் குறைவதாகக் கூறியதும், ஆன்மாவின் எடை என்றும் கூறியதும் ஒரு புகழ்பெற்ற மக்களை மயக்கும் துருதரிசனமாக இருந்தாலும், அறிவியல் அளவில் அதன் முறைகள்

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "புத்தியுள்ள மனிதர் எல்லாம் வெற்றி காண்பதில்லை வெற்றி பெற்ற மனிதர் எல்லாம் புத்திசாலியில்லை..."

ச. வி. கிருபாகரன்,
பிரான்ஸ்.

1962ம் ஆண்டு 'அன்னை' என்ற திரைப் படத்தில், கவியரசர் கண்ணதாசனினால் எழுதப்பட்ட பாடலை, நடிகர் ஜே. பி. சந்திரபாபுவினால் பாடப்பட்டுள்ள வரிகளை, இங்கு தலையங்கமாக எடுத்துள்ளதற்கு முக்கிய காரணம், இப் பாடல்வரிகள், இன்று வடக்கு-கிழக்கு அரசியலிற்கு அல்ல, வடக்கில் அதுவும் தமிழ் கலாசார தலைநகரான யாழ்பாணத்து, அரசியல்வாதிகளெனப்படும் தேர்தல்வாதிகளின் நிஜ வாழ்க்கையில் ஒத்துபோகும் பாடலாக காணப்படுகிறது.

உலகில் வடக்கு திசை என்பது என்றும் சார்ச்சைக்குரியது. விசேடமாக வடக்குடன் சம்பந்தப்பட்ட அரசியல், இனங்கள், நாடுகளை பார்த்தீர்களானால், வடக்கு என்றும் சர்ச்சைகுரியதாகவே காணப்படுகிறது. இவ் வரிசையில், இலங்கைதீவு சுதந்திரம் அடைந்த 1948ம் ஆண்டு முதல், வடக்கு கிழக்கு அரசியலில் வேறுபட்ட முன்னணி கட்சி தலைவர்களாக காணப்படுவர்களில் - ஜி.ஜி பொன்னம்பலம் முதல் இன்று வரை தொண்ணூறு வீதமானவர்கள், வட மாகாணத்தை சார்ந்தவர்களாகவே காணப்படுகிறார்கள். ஆனால் கடந்த ஏழு தசாப்தங்களிற்கு மேலாக, வடக்கு கிழக்கை தாயகமாக கொண்ட மக்களிற்கு, இவர்கள் யாரும் இன்று வரை ஏதையும் உருப்படியாக நிறைவேற்றியதாகவோ, சேவை செய்துள்ளதாகவோ சரித்திரம் கிடையாது. ஆனால் வாய் வீரர்கள். அதுவும் தமிழ் மக்களிற்கு இடையில் மட்டுமே.


இன்றைய தமிழ் அரசியல் என்பது, விசேடமாக யாழ்பாணத்து அரசியல் என்பது, 'விழுந்தாலும் மீசையில் மண்படவில்லை' என்ற தத்துவத்திலேயே பயணிக்கிறது. இன்று நடக்கும் அரசியல் சர்ச்சைகள் யாவும், நேற்று அரசியலிற்கு வந்துள்ள இரு அரசியல்வாதிகளெனும் தேர்தல்வாதிகளிற்கு இடையிலானாது. ஒரு பக்கம் எம்.ஏ. சுமந்திரன், மற்றைய பக்கம் கஜேந்திரகுமார் பொன்னம்பலம். இவர்கள் இருவருக்கிடையிலான அரசியல் - ஒன்று சையிக்கிள் கட்சியெனப்படும் தமிழ் காங்கிரஸ் கட்சியின் செயலாளர் நாயகம், மற்றையவர், தமிழரசு கட்சியின் பதில் செயலாளர். இவர்கள் இருவரினாலும் வடக்கு கிழக்கு வாழ் மக்களின் மானம் மரியாதை யாவும் உள்நாட்டிலும் சர்வதேச ரீதியாக, காற்றில் பறக்கிறது.

இவர்கள் இருவருக்கும் பக்கவாத்தியம் போடுவதற்கு, அவரவர் கட்சியில், சிலர் இவர்களை மானபங்கபடுத்தும் உள் நோக்குடன், இவர்களது பலவீனங்களை பாவித்து, இருவர் மீதும் நன்றாக சாவரி செய்கிறார்கள். இதனால், இவர்கள் இருவரும், இவர்கள் கட்சிகளிற்கு வாக்களித்த மக்கள் மீது, சவாரி நடைபெறுவதை கண் முன்னே காணக்கூடியதாகவுள்ளது.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் செயலாளர் நாயகமாக திகழும் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை தமிழ் காங்கிரஸ் கட்சியின் ஆரம்பம் முதல், முதுகெலும்பாக விளங்கிய திரு விநாயமூர்த்தி அவர்களலேயே, மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் படுகொலையை தொடர்ந்து, கஜேந்திர குமார் அவர்கள் அரசியல்வாதியாக வடிவெடுக்க வழிவகுத்தவர்.

இதேபோல், முள்ளிவாய்கால் அனர்ந்தங்களின் பின்னர், தமிழரசு கட்சியின் மூத்த உறுப்பினரும், தலைவருமான திரு சம்பந்தர், மாவை சேனதிராஜா போன்றவர்களினால், சிவப்பு கம்பளம் விரித்து வரவேற்கப்பட்டவரே, சுமந்திரன்.

இவ்விரு மாபெரும் வீரர்களிற்கு இடையில் பாரிய பல ஒற்றுமைகள் உள்ளதை நாம் காணக்கூடியதாகவுள்ளது.



இருவரும் வழங்கறிஞர். ஆனால் இதில் யார் திறமையானவர் என்பதை இங்கு நான் கூறவேண்டிய தேவையில்லை. அடுத்து இவர்கள் இருவரும், கொழும்பைத் தமது தாய் வீடாக கொண்டவர்கள், ஆனால் யார் பரம்பரை குபேரன் என்பதை உலகமே அறியும். இருவரும் தாம் பிடித்த முயலுக்கு மூன்றுகாலென வாழ்பவர்கள். இருவரும் தம்மை அரசியலிற்கு கொண்டுவந்தவர்களிற்கு நன்றி கடனாக வாழாது, தமக்கு முந்தியவர்கள் யாவரையும் அப்புறப்படுத்தி, தமது கைக்குள், கட்சியின் சகல உரிமைகளையும் சேர்த்து கொண்டவர்கள்.

இப்படியாக பல ஒற்றுமைகள் காணப்பட்ட காரணத்தினால், இருவருக்கும் இடையில் பகைமை உருவாகும் என்பது உலக நியாதி. இதற்கு அப்பாவி அரசியல்வாதிகள், இளம் வயதிலேயே தம்மை தமிழீழ விடுதலை போராட்டத்தில் இணைத்து கொண்டவர்கள், இவ் நபர்களது சமரின் பார்வையாளராக விளங்காது, தாமும் பங்களிகளாக இணைந்து, வாக்களித்த மக்கள் மீது சவாரி செய்வது நியாயமானதா? அப்பாவி மக்கள் இவற்றை பார்த்து சிரிப்பதா அழுவதா?

இவர்கள் இருவரும் மாறி மாறி தங்களுக்குள் பழிவாங்கும் படலத்தில் உள்ளனர். பாரளுமன்ற தேர்தலில் தோல்வியடைந்து விட்டேனே என சுமந்திரன் ஒதுங்கவுமில்லை. உள்ளூர் ஆட்சி தேர்தலில் எம்மை ஒதுக்கிவிட்டார்களென கஜேந்திரகுமார் மக்களின் நன்மை கருதி அமைதியாகவும் இல்லை.

இப்பொழுது நடப்பவை யாவும், "எனக்க மூக்கு போனாலும் பறவாயில்லை, எதிரிக்கு சகுணம் பிழைத்தால் காணும் என்பதே". ஆனால் ஒன்று, இந்த ஒரு மாத காலத்திற்குள், உள்ளூர் மன்றங்களின் ஆட்சி முறையின் சட்டரீதியான ஒழுக்கு சுழுக்குகளை சுமந்திரன் படித்திருப்பார் என்பது பலரது ஊகம். அது மட்டும் அல்லாது, உள்ளூர் ஆட்சி மன்றங்கள் பற்றிய சிறிலங்காவின் அரசியல் யாப்பில் கூறப்பட்டவையையும், சுமந்திரன் நன்றாக படித்து தெரிந்து கொண்டுள்ளார் என்பது, "கஜேந்திர குமார் பொன்னம்பலத்திற்கான எச்சரிக்கையிலிருந்து" தென்படுகிறது. முடிவுரையாக கூறுவதனால், இவர்கள் இருவரும் நீதிமன்றத்தில் முடிய போகிறார்கள் என்பது வெளிச்சம்.

இவற்றில் வேடிக்கை என்னவெனில், கொள்கையில் ஒன்றினைந்தவர்கள் கூட்டணியாகி உள்ளனராம். இதை போல் அபாண்டமான பொய்யை யாரும் பொது வெளியில் கூறுவது முழு பித்தலாட்டம். ஒப்பந்த்தத்தில், "பதின் மூன்றவது திருத்த சட்டம், தமிழர்களது அரசியல் தீர்விற்கு ஆரம்ப புள்ளியும் இல்லையாம், முடிவும் இல்லையாம்!". அப்படியாக இணைந்தவர்கள் யாவரும் கருதுவதனால், பதின் மூன்றவது திருத்த சட்டம் பற்றி ஏன் உங்கள் உடன்படிக்கையில் இவ்வசனத்தை இணைத்தீர்கள்?

இது முன்பு ஜனதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா வெற்று பத்திரிகைகளில் கையெழுத்து வாங்கியதற்கு மேலாக காணப்படுகிறது. இவை யாவும் நாம் சிறு வயதில், மண் கும்பலில், கோட்டை கட்டி - அரசர், மன்னர், சேவகர், குதிரைகள் போன்று, மண்ணில் விளையாடியது நினைவிற்கு வருகிறது.

"ஒற்றையாட்சிக்கு வெளியில் தீர்வாம்". யார் வேண்டாமென்பது? எப்பபொழுது? எவரிடமிருந்து என்பதை கூறிய பின்னர், இவற்றை உச்சரியுங்கள். இலங்கைதீவில், வடக்கு கிழக்கை தாயகமாக கொண்ட மக்கள் வாழும் இன்றைய நிலையில், பதின்மூன்றாம் திருத்த சட்டம் என்பதையே கடந்து, பதினாறு ஆண்டுகளாக, சிங்கள பௌத்த அரசு

> **ஜனதிபதி அனுரா திசநாயக்க எதற்காக ஜேர்மனி சென்றுள்ளார் என்பதை யாவரும் கவனத்தில் கொள்கிறார்கள். எதிர்வரும் செப்ரெம்பர் மாதம், ஐ.நா.மனித உரிமை சபையில், சிறிலங்கா மீது கொண்டுவரவிருக்கும் தீர்மானத்திற்கு, ஐரோப்பிய ஒன்றியத்தின் அங்கத்துவ நாடான ஜேர்மனியின் உதவியை கோரவே சென்றுள்ளார்.**

களிடமிருந்து நடைமுறை படுத்த முடியாத நிலையில், ஒற்றை யாட்சிக்கு வெளியில், ஒரு நாடு இரு தேசமா? இதை சொல்வது மிக சுலபம். "கேட்கிறவன் கேணையனாக இருந்தால், எருமை மாடும் விமானம் ஒட்டுமாம்".

இருவரும் உங்கள் மல்யுத்தங்களை உள்நாட்டிற்குள் வைத்து கொள்ளுங்கள். நாளை 16ம் திகதி, ஐ.நா.மனித உரிமை சபையின் 59வது கூட்ட தொடர் ஆரம்பமாகவுள்ளது. இவ் கூட்டத் தொடரில், சிறிலங்கா விடயத்தில், விசேடமான செயற்பாடு ஒன்றும் நடைபெறமாட்டாது. ஆகையால் மனித உரிமை சபையின் அங்கத்துவ நாடுகளை சந்தித்து சிறிலங்கா பற்றிய பரப்புரை மேற்கொள்வதற்கு உகந்த கூட்ட தொடர். உண்மையில் உங்களிற்கு பாதிக்கப்பட்ட மக்களில், தமிழீழ மக்களின் அரசியல் அபிலாசைகளில் உண்மையான விசுவாசம், அர்பணிப்பு இருந்தால், மல்யுத்த களங்களை விட்டு ஜெனிவா ஐ.நா. மனித உரிமை சபையின் 59வது கூட்ட தொடரில் கலந்து கொள்ளுங்கள்.

ஐ.நா.ம.உ.சபையின் 60வது கூட்ட தொடர், எதிர்வரும் செப்டம்பர் மாதம் 8ம் திகதி முதல் ஒக்டொபர் 3ம் திகதி வரை நடைபெறவுள்ளது. இக் கூட்ட தொடரில் நிட்சயம் சிறிலங்கா விடயம் சூடுபிடிக்கவுள்ளது. ஆகையால் நீங்கள் யாவரும் ஒன்றுபட்டு மனித உரிமை சபையின் அங்கத்துவ நாடுகளின் ஆதரவை தேடாத கட்டத்தில், பாதிக்கப் பட்ட மக்கள் மீண்டும் ஏமாற்றப்படுவார்கள். இதற்காக முன்பு போல், தீர்மானம் சமர்பிக்கப்பட்ட பின்னர், அங்கு வந்து, சில சில்லறை கூட்டங் களில், "பிளிஸ் சேர்" என அலட்டுவது, மிக நீண்டகாலமாக நீதியை பார்த்திருக்கும் மக்களிற்கு எதையும் கொண்டு வராது. அது உங்களது புலன்பெயர் தேசத்தில் நிதி சேகரிப்பிற்கும், பரப் புரைக்குமானதாகவே திகழும் என்பது உங்களிற்கும், எங்களிற்கும் நன்றாக தெரியும்.

இவ் சந்தர்பத்தில், கஜேந்திரன் பொன்னம்பல் குழுவினரிடம், ஒரே ஒரு முக்கிய கேள்வி. நீங்கள் 2009ம் ஆண்டு மே மாதத்தின் பின்னர், ஜெனிவா ஐ.நா. மனித உரிமை சபைக்கு வருவதாக ஊடகங்களிற்கு கூறி, வந்த காலங்களில், இன்றுவரை எத்தனை ஐ.நா.மனித உரிமை சபை அங்கத்துவ நாடுகளையும், ஐ.நா.முக்கிய புள்ளிகளையும் தமிழீழ மக்கள் விடயமாக சந்தித்து உரையாடியுள்ளீர்கள்? காரணம் இதற்கான பதில் எமக்கு நன்றாக தெரியும்.

இதேவேளை, ஐ.நா.மனித உரிமை ஆணையாளர் இம்மாதம் 20ம் திகதிக்கு பின்னர் சிறிலங்காவிற்கு விஜயம் செய்யும் பொழுது, நீங்கள் யாவரும் ஒவ்வொரு கட்சியாக சந்திக்காமல், ஒன்றாக சந்தித்து நிலைமைகளை அவரிடம் நேரடியாக கூறுவது மிக நல்லது. ஆனால், ஐ.நா.மனித உரிமை சபையில் தீர்மானம் வெற்றியாக நிறைவேற்றப்பட வேண்டுமானால், அது மனித உரிமை சபையின் நாற்பத்தி ஏழு அங்கத்துவ நாடுகளின் ஆதரவினலேயே நடைபெறும்.

ஜனதிபதி அனுரா திசநாயக்க எதற்காக ஜேர்மனி சென்றுள்ளார் என்பதை யாவரும் காவனத்தில் கொள்கிறார்கள். எதிர்வரும் செப்டம்பர் மாதம், ஐ.நா.மனித உரிமை சபையில், சிறிலங்கா மீது கொண்டுவரவிருக்கும் தீர்மானத்திற்கு, ஐரோப்பிய ஒன்றியத்தின் அங்கத்துவ நாடான ஜேர்மனியின் உதவியை கோரவே சென்றுள்ளார்.

இவருடைய சந்திப்புக்களை ஜேர்மனியில் உள்ள தூதுவரலாயம் மூலமாக ஒருங்கிணைத்த பொழுதிலும், 1970ம் ஆண்டு ஜேவிபியின் எழுச்சியின் பொழுது, யாழ்ப்பாண கோட்டையில் சிறை வைக்கப்பட்டிருந்த ஜேவிபியின் தலைவர் ரோகண வீஜயவீரவை, சிறை மீட்டபதற்காக, யாழ்பாணம் வந்த ஜேவிபியின் குழுவிற்கு தலைமை தாங்கியவர், ஒருவர் ஜேர்மன் பெண் அரசியல்வாதியை திருமணம் செய்து, நீண்ட காலமாக ஜேர்மனியில் வாழ்ந்த கொண்டிருக்கிறார். இவரது மனைவியார் முன்பு, ஐரோப்பிய பாரளுமன்ற உறுப்பினராகவும் கடமையாற்றியுள்ளர் என்பதும் இங்கு குறிப்பிடதக்கது.

சிங்கள பௌத்தர்கள், இலங்கைதீவை சிங்கள பௌத்தமாக மாற்றுவதற்கான முற்று முழுதான முயற்சியில் ஈடுபட்டிருக்கும் இவ்வேளையில், எமது செல்லப் பிள்ளை அரசியல்வாதிகள், தமது சுய நலத்தின் அடிப்படையில், அற்ப விடயங்களிற்காக, மல்யுத்தத்தில் ஈடுபடுவது முழு தமிழீழ மக்களையும் பாதிக்கிறது.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பற்றி எரியும் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரம்: குடிபுகுந்தோரை விரட்டும் ட்ரம்ப் அரசு!

ஐங்கரன் விக்கினேஸ்வரா


இவ்வருட ஆரம்பத்தில் கலிபோர்னியா மாநிலத்தில் வெப்பக் காற்றாலும், வறட்சி நிலைமைகளால் ஏற்பட்ட காட்டுத்தீ லொஸ் ஏஞ்சல்ஸ் நகரையே தீயால் கருக்கியது. கடும் வெப்பநிலையால் தூண்டப்பட்ட மிகப்பெரிய, வேகமாக நகரும் தீயால் முழு நகரமே பாதிக்கப்பட்டது. இவ்ருடம் ஜனவரி மாதம் கலிபோர்னியாவின் வரலாற்றில் மூன்றாவது மிகவும் அழிவுகரமான காட்டுத்தீ ஏற்பட்டது.

இக்காட்டுத் தீ அடங்கி ஐந்து மாதத்துக்குள் மற்றுமொரு தீ லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் தற்போது பரவியுள்ளது. இம்முறை இயற்கையாக தீ பரவவில்லை. பாரிய கலவரங்களால் பல இடங்களில் தீயை அணைக்க முடியவில்லை என்றும் கூறப்படுகிறது.

அமெரிக்காவில் சுமார் 1.20 கோடி பேர் சட்டவிரோதமாக குடியேறியுள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது. இதில் அதிக பட்சமாக மெக்சிகோவை சேர்ந்த 40 லட்சம் பேர் அங்கு சட்டவிரோதமாக தங்கி உள்ளனர். இந்தியாவை சேர்ந்த 7.25 லட்சம் பேர் அமெரிக்காவில் சட்டவிரோதமாக தங்கியிருப்பதாகவும் ஓர் அறிக்கையில் கூறப்படுகிறது.

அமெரிக்காவில் சட்டவிரோதமாக குடியேறிவர்களுக்கு எதிராக அண்மையில் அதிபர் டொனால்ட் ட்ரம்ப் நிர்வாகம் கடும் நடவடிக்கை எடுத்து வருகிறது. இதன்படி, கலிபோர்னியா மாகாணத்தின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரின் பல்வேறு இடங்களில் குடியேற்றம் மற்றும் சுங்கத் துறை அதிகாரிகள் கடந்த 6-ம் தேதி சோதனை நடத்தினர். இதில் சட்டவிரோதமாக தங்கியிருந்த 44 பேர் கைது செய்யப்பட்டனர்.

இந்த நடவடிக்கையைக் கண்டித்து முகக் கவசம் அணிந்த பலர் தொழில் பூங்காவுக்கு எதிரில் பல நாட்களாக போராட்டத்தில் ஈடுபட்டனர். இதில் போராட்டக்காரர்களுக்கும் எல்லை ரோந்து அதிகாரிகளுக்கும் இடையே மோதல் ஏற்பட்டு வன்முறையில் முடிந்தது. இதையடுத்து, போராட்டத்தை மாகாண அரசு ஒடுக்கவில்லை என குற்றம் சாட்டிய அதிபர் டொனால்ட் ட்ரம்ப், சுமார் 2,000 இராணுவ வீரர்களை போராட்டத்தை ஒடுக்கும் பணியில் ஈடுபடுத்த உத்தரவிட்டார்.



இது குறித்து அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தனது சமூக வலைதளத்தில் வெளியிட்ட பதிவில், "கலிபோர்னியா மாகாண ஆளுநர் கவின் நியூஸ்கம் மற்றும் லாஸ் ஏஞ்சல்ஸ் நகர மேயர் கரென் பாஸ் ஆகியோருக்கு போராட்டத்தை ஒடுக்கும் திறன் இல்லை.

பிறரின் தூண்டுதலின் பேரிலும் பணம் வாங்கிக் கொண்டும் நடைபெறும் போராட்டங்களை பொறுத்துக் கொள்ள முடியாது. போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் முகக் கவசம் அணிய தடை விதிக்கப்படுகிறது" என கூறியுள்ளார்.

போராட்டத்தை ஒடுக்க ராணுவத்தை ஈடுபடுத்தியதற்கு கலிபோர்னியா ஆளுநர் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளார். ட்ரம்பின் இந்த நடவடிக்கை பதற்றத்தை மேலும் அதிகரிக்கும் என குற்றம் சாட்டினார். மேலும் அவருடைய நடவடிக்கை மக்களின் நம்பிக்கையை சீர்குலைத்துவிடும் என்றும் தெரிவித்துள்ளது கவனிக்கத் தக்கது.

ஆளுநர் அரசுக்கு எதிராக செயல்படுவதாக அதிபர் ட்ரம்ப் குற்றஞ்சாட்டி வருகிறார். இதற்குப் பதிலடி கொடுத்துள்ள கலிபோர்னியா ஆளுநர் கவின் நியூஸம், "மாகாண போலீஸாரே கலவரத்தைக் கட்டுப்படுத்த போதும். ஆனால், மாநில நிர்வாகத்தை மதிக்காமல் ட்ரம்ப் மத்திய படைகளை அனுப்பியுள்ளது தவறான செயல்." எனக் கண்டித்துள்ளார்.

தொடரும் கலவரத்தை ஒடுக்கும் பணியில் காவல் துறை, தேசிய காவல் படை வீரர்களுடன் தற்போது யுஎஸ் மரைன்ஸ் என்ற பாதுகாப்புப் படைப் பிரிவினைச் சேர்ந்த 700 வீரர்கள் லொஸ் எஞ்சல்ஸ் வரவழைக்கபட்டு உள்ளனர். இவர்கள் தெற்கு கரோலினா முகாமில் இருந்து வந்துள்ளனர்.

ஆனாலும் தொடர்ந்து அமெரிக்காவில் சட்டவிரோதமாக குடியேறியவர்கள் நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்டு வருகின்றனர். ட்ரம்ப் அரசின் இந்த நடவடிக்கையை கண்டித்து லொஸ் ஏஞ்சலஸ் மற்றும் சான்பிரான்சிஸ்கோவில் பெரும் கலவரம் வெடித்துள்ளது.

பல நாளாக லொஸ் ஏஞ்சல்ஸ் பற்றி எரிகிறது. சக்தி வாய்ந்த யுஎஸ் மரைன்ஸ், அமெரிக்க கடற்படையின் ஒரு பிரிவாக இருந்தாலும் கூட நிலத்தில் ஏற்படும் அதிதீவிரமான கலவரங்களைக் கட்டுப்படுத்தவே பெரும்பாலும் பயன்படுத்தப்படுகிறது. இதிலிருக்கும் வீரர்கள் மிகவும் திறமையானவர்களாக அறியப்படுகின்றனர். மூர்க்கத்தனமான கலவரங்களைக் கையாள்வதில் கைதேர்ந்தவர்கள் என்று அறியப்படுகிறார்கள்.

லொஸ் ஏஞ்சல்ஸில் கலவரம் தொடர்ந்து நடந்து வரும் நிலையில், அந்தக் கலவரத்தை ஒடுக்க ட்ரம்ப் எடுத்த முக்கிய நகர்வாக இது பார்க்கப்படுகிறது.

அமெரிக்கா முழுவதும் தென் அமெரிக்க நாடுகளை சேர்ந்த ஸ்பானிஷ் மொழி பேசும் மக்கள் தொடர்ச்சியாக கைது செய்யப்பட்டு வருகின்றனர். முறையான ஆவணங்கள் இருந்தும் சமூக விரோதிகளை போல கைது செய்து நாடு கடத்தப் படுகின்றனர். அமெரிக்கா எந்தவொரு இனத்துக்கும் சொந்தமானது கிடையாது. பல்வேறு நாடுகளை சேர்ந்த மக்கள் அமெரிக்காவில் குடியேறி வாழ்கின்றனர். உண்மையில் டிரம்பின் மூதாதையர்கள் கூட ஜெர்மனியில் இருந்து அமெரிக்காவில் குடியேறியவர்கள்தான்.

இதுபோல அமெரிக்க மக்கள் தொகையில் சுமார் 97 சதவீதம் பேர் பல்வேறு நாடுகளில் இருந்து குடியேறியவர்கள். 3 சதவீதம் பேர் மட்டுமே அமெரிக்க மண்ணின் மைந்தர்கள். அமெரிக்காவில் வாழும் வெளிநாட்டினரை வெளியேற்ற வேண்டும் என்றால் 97 சதவீதம் பேரையும் வெளியேற்ற வேண்டும். அதிபர் ட்ரம்ப் இனவெறியுடன் செயல்பட்டு வருகிறார். இவ்வாறு தென் அமெரிக்க நாடுகளை சேர்ந்த மக்கள் குற்றஞ்சாட்டி உள்ளனர். ●


# இயல்புமீறிய அச்சவுணர்வும் சுயசந்தேகமும் கொண்ட குடியரசாக அமெரிக்காவை மாற்றும் ட்ரம்ப்!

தேசிய பாதுகாப்பு அக்கறைகளை காரணம் காட்டி, 12 நாடுகளைச் சேர்ந்த குடிமக்கள் அமெரிக்காவுக்குள் பிரவேசிப்பதை தடைசெய்வதற்கு ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எடுத்திருக்கும் தீர்மானம் சட்டபூர்வமான குடிவரவை தகர்த்து விடுவதற்கு அவரது ஐந்து மாதகால நிருவாகத்தின் இன்னொரு முயற்சியாகும்.

முஸ்லிம்களை பெரும்பான்மையாகக் கொண்ட ஏழு நாடுகளின் குடிமக்கள் அமெரிக்காவுக்கு வருவதை தடை செய்து தனது முதலாவது பதவிக்காலத்தில் 2017 ஆம் ஆண்டில் ட்ரம்ப் எடுத்த தீர்மானம் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியது. அமெரிக்க விமான நிலையங்களில் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றதுடன் பிரகடனப்படுத்தாத இனவெறி மற்றும் வெளிநாட்டவர்கள் மீது வெறுப்பைக் காண்பிக்கும் கொள்கையை அமெரிக்கா கடைப்பிடிக்கிறது என்ற கண்டனங்கள் கிளம்புவதற்கும் அந்த தீர்மானம் வழிவகுத்தது. சட்டரீதியான சவாலுக்கும் அது உள்ளானது.

இந்த தடவை ட்ரம்ப் பெரும்பாலும் மேற்காசியா மற்றும் ஆபிரிக்கா மீதே கவனத்தைச் செலுத்தியிருக்கிறார். ஆப்கானிஸ்தான், மியன்மார், சாட், கொங்கே குடியரசு, ஈக்குவடோரியல் கினியா, எரித்திரியா, ஹெய்டி, ஈரான், லிபியா, சோமாலியா, சூடான் மற்றும் யேமன் ஆகிய நாடுகளின் குடிமக்கள் அமெரிக்காவுக்குள் பிரவேசிப்பதற்கு தடைவிதிக்கப்படும் அதேவேளை, புருண்டி, கியூபா, லாவாஸ், சியராலியோன், டோகோ, துருக்மேனிஸ்தான் மற்றும் வெனிசூலா ஆகிய நாடுகளின் குடிமக்கள் அமெரிக்கா வருவதில் கட்டுப்பாடுகளுக்கு முகங்கொடுக்கப் போகிறார்கள்.

காசா பணயக் கைதிகளை கௌரவித்து ஒரு குழுவினர் மீது தாக்குதல் நடத்தியமைக்காக எகிப்தியர் ஒருவர் கைதுசெய்யப்பட்ட சில நாட்களில் வந்திருக்கும் இந்த தடைவிதிப்பு பயங்கரவாத தாக்குதல்களையும் விசா காலாவதியான பின்னரும் அமெரிக்காவில் வெளிநாட்டவர்கள் தங்கியிருப்பதையும் தடுக்க உதவும் என்று கூறி ட்ரம்ப் தனது தீர்மானத்தை நியாயப்படுத்த வாதாடுகிறார்.



எகிப்து அமெரிக்காவின் ஒரு நெருங்கிய நேசநாடு. ஸ்பெயின் நாட்டின் 20 ஆயிரம் குடிமக்கள் 2023 ஆம் ஆண்டில் விசா காலாவதியான பின்னரும் அமெரிக்காவில் தங்கியிருந்தார்கள். ஆனால், அந்த இரு நாடுகளும் தடை விதிக்கப்பட்ட நாடுகளின் பட்டியலில் இல்லை. ஆனால், சாட் நாடு பட்டியலில் இருக்கிறது. சாட் குடிமக்களில் ஒரு 400 பேர் மாத்திரமே விசா காலிவதியான பின்னர் அமெரிக்காவில் தங்கியிருந்ததாக கண்டு பிடிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

ட்ரம்ப் இரண்டாவது தடவை ஜனாதிபதியாக கடந்த ஜனவரியில் பதவியேற்ற நாளில் இருப்து குடிவரவுக்கு எதிராக தொடர்ச்சியான பல நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார். அமெரிக்காவின் தெற்கு எல்லையில் தஞ்ச முறைமையை இடைநிறுத்திய அவர் ஹெய்டி, வெனிசூலா மற்றூம் கியூபா ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் தற்காலிகமாக சட்டபூர்வமாக தங்கியிருப்பதற்கு அனுமதி வழங்கிய ஏற்பாட்டை முடிவுக்கு கொண்டுவந்தார்.

ஆயிரக்கணக்கான வெளிநாட்டு மாணவர்களின் சட்டரீதியான அந்தஸ்தையும் அகற்றிய ட்ரம்ப் மாணவர்களும் கல்விமான்களும் சமூக ஊடக கணக்குகளை தணிக்கை செய்வதற்கு தனது நிருவாகம் தயாராகுவதால், புதிய விசா நேர்காணல்களை நிறுத்துமாறு அமெரிக்க தூதரகங்களுக்கு அறிவுறுத்தினார். சர்வதேச மாணவர்களைக் குறிவைக்கும் அவரின் கொள்கைகள் ஏற்கெனவே அமெரிக்க பல்கலைக்கழகங்களில் குழப்ப நிலையையும் நிச்சயமற்ற தன்மையும் ஏற்படுத்தியிருக்கின்றன.

இப்போது ஒரு குறிப்பிட்ட நாடுகளைச் சேர்ந்த குடிமக்கள் மீது நேரடியாகவே விதிக்கப்பட்டிருக்கும் தடை (றொனால்ட் றீகன் ஒரு தடவை வர்ணித்ததைப் போன்று) 'ஒரு மலை உச்சியில் பிரகாசிக்கும் நகரம்' என்ற அமெரிக்காவின் சுயபடிமம் அருகிப்போவதை தீவிரப்படுத்துவதாக அமைகிறது. அமெரிக்கா பன்முகத்தன்மை கொண்ட ஒரு திறந்த சமுதாயம் என்பதால் றேகன் அவ்வாறு அழைத்தார்.

குடியேற்றவாசிகள் அமெரிக்காவிற்குள் குற்றச்செயல்களை கொண்டு வருகிறார்கள் என்ற ட்ரம்பின் குற்றச்சாட்டு ஆதாரமற்றது. ஹெய்டி மற்றும் ஆப்கானிஸ்தான் போன்று அமெரிக்காவின் இராணுவ ஆக்கிரமிப்புக்கு உள்ளான நாடுகளில் இருந்து அமெரிக்காவிற்குள் வருவதற்கு முயற்சிக்கும் மக்களில் பலர் போருக்கு பயந்தும் திட்டமிட்ட வன்முறைகள் மற்றும் கொடுமைகளில் இருந்து உயர் பிழைப்பதற்கும் சொந்த மண்ணை விட்டு ஓடிவருகிறார்கள். அவர்கள் தஞ்சம் தேடுபவர்களே தவிர, அமெரிக்காவின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தக் கூடியவர்கள் அல்ல.

அவர்களுக்கு, பொதுவில் குடியேற்றவாசிகளுக்கு அமெரிக்காவின் கதவை மூடுவதன் மூலமாக ட்ரம்ப் அமெரிக்காவை பாதுகாப்பானதாக ஆக்கவில்லை. மாறாக, அவர் வரலாற்று ரீதியாக குடியேற்றவாசிகளை வரவேற்று அவர்களிடமிருந்து பயன்களைப் பெற்ற அமெரிக்காவை குறுகிய மனப்பான்மையும் பிறர் குறித்து இயல்பு மீறிய அச்சவுணர்வும் கொண்ட ஒரு சுயசந்தேகக் குடியரசாக மாற்றுகிறார்.

(தி இந்து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாவசிய மருந்துக்கு தட்டுப்பாடு அரசு விரைந்து தீர்வு காண வேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் வலியுறுத்தல்

கொழும்பு, ஜூன் 15

நாட்டில் தற்போது பல அத்தியாவசிய மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றன. எனவே, அரசாங்கம் விரைந்து தீர்வு காண வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இலவச சுகாதாரம் என்பது மக்களினது மனித உரிமையாகும். இலவச சுகாதார கட்டமைப்பினுள் வினைத்திறனான சேவைகளைப் பெறுவது நாட்டு மக்களுக்கு அடிப்படை உரிமையாக அமைந்து காணப்பட்டாலும், இத்தருணத்தில் நமது நாட்டின் சுகாதார கட்டமைப்பில் கடுமையான வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. அறுவை சிகிச்சை உபகரணங்கள் உள்ளிட்ட மருந்துகளுக்கு கடுமையான பற்றாக்குறை நிலவுவதே இதற்குக் காரணமாகும். புற்று நோய் நோயாளிகள், இதய நோயாளிகள், உயர் இரத்த அழுத்த நோயாளிகள், சிறுநீரக நோயாளிகள், நீரிழிவு நோயாளிகள் பயன்படுத்தும் மருந்துகளுக்கும், வலி நிவாரணிகள் மற்றும் புற்றுநோய் எதிர்ப்பு மருந்துகளுக்கும் கடுமையான தட்டுப்பாடு நிலவுகின்றன. கிடைக்கும் தகவல்களின் பிரகாரம் 180இற்கும் மேற்பட்ட மருந்துகளுக்கு இவ்வாறு தட்டுப்பாடு காணப்படுகின்றன.

மருத்துவமனை கட்டமைப்பில் நிலவும் மருந்துத் தட்டுப்பாட்டுப் பிரச்னையை பாராளுமன்றத்தில் நான் முன்வைத்தேன். இலவச சுகாதாரப் பராமரிப்பின் கீழ் அரச மருத்துவமனைகளுக்குச் சென்றாலும் நோயாளர்களுக்கு மருந்துகள் இன்று கிடைப்பதில்லை. தனியார் மருத்துவ நிறுவனங்கள் மூலம் அதிக விலைக்கு மருந்துகளைப் பெற வேண்டிய நிலைக்கு மக்கள் இன்று தள்ளப்பட்டுள்ளனர். இதனை இலவச சுகாதார சேவையாக கருத முடியாது. மாறாக கட்டணம் செலுத்தும் சுகாதார சேவையாகவே காணப்படுகின்றன. நமது நாட்டின் நலன்புரி பொருளாதாரம் மற்றும் நலன்புரி அரசில் இலவச சுகாதார சேவைகளை திறம்பட செயல்படுத்த அமைச்சர், அமைச்சின் அதிகாரிகள் மற்றும் ஒட்டுமொத்த அரசாங்கமும் முழு மூச்சோடு பாடுபட வேண்டும் எனவும் சஜித் தெரிவித்தார்.

நாட்டில் நிலவும் கடுமையான மருந்து தட்டுப்பாட்டு விவகாரம் குறித்து நேற்று விசேட கருத்தை வெளியிடும் போதே சஜித் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இதே வேளை,

மருந்துத் தட்டுப்பாட்டுக்கு ஒரு தீர்வை வழங்காமல், மக்களின் இந்த அடிப்படை உரிமையையும் மனித உரிமையையும் அரசாங்கம் மீறி வருகின்றது. அரசாங்கம் எந்தத் தீர்வையும் வழங்காத ஒரு கொள்கையையே பின்பற்றி வருகிறது. இது குறித்து பாராளுமன்றத்தில் வினவப்பட்டாலும், அரசாங்கத் தரப்பிலிருந்து இதற்கு எந்தத் தீர்வுகளும் வழங்கப்படவில்லை. மக்களின் உயிருக்கு பெரும் ஆபத்து ஏற்பட்டுள்ள இந்த நேரத்தில், நாட்டு மக்களை உயிருடன் வைத்திருக்கத் தேவையான மருத்துவ உபகரணங்களின் பற்றாக்குறை உடனடியாக தீர்க்கப்பட வேண்டும். பல ஆண்டுகளாக நடைமுறையில் காணப்படும் விலைமனு செயல்முறையை மட்டும் சுட்டிக்காட்டாமல், இந்த மருந்துப் பிரச்னைக்கு அவசரத் தீர்வை அரசாங்கம் முன்வைக்க வேண்டும். மக்களின் உயிர்வாழ்வை உறுதி செய்வது அரசாங்கத்தின் பொறுப்பாக அமைந்து காணப்படுவதனால், மனித உயிர்களைக் கருத்தில் கொண்டு இந்தக் கடுமையான பிரச்னைக்கு உடனடித் தீர்வு வழங்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித், அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார். (எ)

# இந்திய விமான விபத்தில் இதுவரை 274 உயிரிழப்பு!

புதுடில்லி, ஜூன் 15

இந்தியாவில் இடம்பெற்ற விமான விபத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 274 ஆக அதிகரித்துள்ளதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தியாவின், அகமதாபாத் சர்தார் வல்லபாய் பட்டேல் சர்வதேச விமான நிலையத்திலிருந்து லண்டனுக்கு ஏர் இந்தியாவுக்கு சொந்தமான விமானம் கடந்த 12 ஆம் திகதி நண்பகல் புறப்பட்டது.

இந்த விமானத்தில் இந்தியா, இங்கிலாந்து, கனடா மற்றும் போர்த்துக்கல் நாடுகளை சேர்ந்த 230 பயணிகள் மற்றும் 2 விமானிகள், 10 பணியாளர்கள் என 242 பேர் இருந்தனர்.

ஓடு பாதையில் இருந்து புறப்பட்ட சில நிமிடங்களில் கட்டுப்பாட்டை இழந்த விமானம் மருத்துவக்கல்லூரி விடுதி கட்டடத்தின் மீது விழுந்து, வெடித்து சிதறியது.

இந்தக் கோர விபத்தில் விமானத்தில் இருந்த 241 பேரும் மருத்துவக் கல்லூரி விடுதிக்கட்டடத்தில் இருந்த மருத்துவ மாணவர்கள் மற்றும் அந்த மருத்துவக்கல்லூரி வளாகத்தில் இருந்த 19 பேர் என 265 பேர் உடல் கருகி உயிரிழந்ததாக தகவல் வெளியாகியிருந்தது. அவர்களில் குஜராத் மாநில முன்னாள் முதலமைச்சர் விஜய் ரூபானியும் ஒருவர்.

பலியான பலரது உடல்கள் அடையாளம் காணமுடியாத நிலையில் உள்ளதால், உடல்களை அடையாளம் காண்பதற்கு மரபணு பரிசோதனை செய்யப்பட்டு வருகிறது. பரிசோதனை முடிந்து 6 பேரின் உடல்கள் அவர்களது உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

இந்த நிலையில் அகமதாபாத் விமான விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை தற்போது 274 ஆக அதிகரித்தது. ஏற்கனவே விமானத்தில் பயணித்த 241 பேர் உயிரிழந்த நிலையில், மருத்துவக் கல்லூரி மீது மோதியதில் மாணவர்கள் 10 பேர் உட்பட மொத்தம் 33 பேர் உயிரிழந்ததாக அதிகாரபூர்வ தகவல் வெளியாகியுள்ளது.

இந்த விபத்தில், லண்டன் குடியுரிமை பெற்ற இந்தியரான விஸ்வாஸ் குமார் ரமேஷ் என்பவர், அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார். காயமடைந்த அவர் அகமதாபாத் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இதேபோன்று மருத்துவக்கல்லூரி விடுதியில் இருந்த மருத்துவர்கள், மாணவர்கள் மற்றும் ஜே.பி. மருத்துவமனை வளாகத்தில் இருந்தவர்கள் எனப் பலர் படுகாயம் அடைந்துள்ளனர். அவர்களும் மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர். (எ)

# விட்டுக்கொடுப்பு அரசியல்...

(07ம் பக்கத் தொடர்ச்சி)

கட்சிகளின் ஆதரவாளர்கள் சமூக ஊடகங்களில் ஏட்டிக்குப் போட்டியாக செய்யும் பதிவுகள் தமிழ்த் தேசியவாதம் இணைய வெளியில் எந்தளவுக்கு கொச்சைப்படுத்தப்படுகிறது என்பதை பிரகாசமாக வெளிக்காட்டுகின்றன.

இன்று தமிழ்க் கட்சிகள் உள்ளூராட்சி நிருவாகங்களை அமைப்பதற்காக செய்துவரும் விட்டுக் கொடுப்புக்கள் நாளடைவில் தேசிய இனப்பிரச்சினைக்கான குறுகிய கால, நீண்டகால தீர்வுகளை நோக்கிய பயணத்தில் ஒன்றிணைந்த நிலைப்பாடுகளை எடுப்பதற்கு வழிவகுக்குமாக இருந்தால் பயனுறுதியுடையதாக அமையும்.

அரசியலில் விட்டுக்கொடுப்பு என்பது எதிரெதிரான கட்சிகள் பரஸ்பரம் சலுகைகளைச் செய்வதன் மூலம் இணக்கப்பாடு ஒன்றை அடைவதற்கு தேவையான மிகவும் முக்கியமான செயன்முறையாகும். அது முழுநிறைவான கருத்தொருமிப்பை சாதிப்பதாக அமையாது. அத்தகைய கருத்தொருமிப்பு மிகவும் அரிதாகவே சாத்தியமாகும். ஆனால், சம்பந்தப்பட்ட கட்சிகளின் நலன்களை ஓரளவுக்கேனும் நிறைவு செய்வதற்கு உதவக்கூடிய சூழ்நிலைக்கு வழிவகுக்கும். மாறுபட்ட நோக்குகளையும் முன்னுரிமைகளையும் அங்கீகரித்துக்கொண்டு ஒரு பொதுவான நிலைப்பாட்டுக்கு வருவதே உண்மையான விட்டுக்கொடுப்பாகும்.

உள்ளூராட்சி நிருவாகங்களை அமைக்கும் விடயத்தில் தமிழ்க்கட்சிகள் அவற்றின் தனித்தனியான நலன்களை மனதிற்கொண்டுதான் விட்டுக்கொடுப்பு அணுகுமுறைகளைக் கடைப்பிடிக்கத் தொடங்கியிருக்கின்றன. இந்த விட்டுக்கொடுப்பு தற்போது தெரிவாகியிருக்கும் புதிய உள்ளூாராட்சி சபைகளின் நான்கு வருட ஆயுட்காலம் நிறைவுபெறும் வரை நீடித்து தமிழ் மக்களின் அடிப்படைத் தேவைகளை பயனுறுதியுடைய முறையில் நிறைவேற்றுவதற்கு உதவினால் அதுவே பெரிய விடயமாக இருக்கும். பொறுத்திருந்து பார்ப்போம். எமது தமிழ் அரசியல்வாதிகள் இப்போதுதானே விட்டுக்கொடுப்பு அரசியலை பழகத் தொடங்கியிருக்கிறார்கள்.

# மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற உணவுப்பொருட்கள் கைப்பற்றல்

ஒட்டுசுட்டான், ஜூன் 15

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பலசரக்கு கடைகள் மீது நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை திடீர் சுகாதார பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இந்தச் சோதனை ஒட்டுசுட்டான் மற்றும் முத்தையன்கட்டு பகுதிகளில் உள்ள கடைகளில் சுகாதார பரிசோதகர்களால் முன்னெடுக்கப்பட்டது.

சோதனை நடவடிக்கையின் போது, சில கடைகளில் மனித நுகர்வுக்கு முற்றிலும் பொருத்தமற்ற மற்றும் புழுப்பிடித்த நிலையில் 46 கிலோ கிராம் கோதுமை மாவும் வண்டுகள் காணப்பட்ட 20 கிலோ கிராம் பருப்பும் கண்டுபிடிக்கப்பட்டு, உடனடியாக கைப்பற்றப்பட்டன.

இதனையடுத்து, சம்பந்தப்பட்ட கடை உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இது குறித்து சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்ததாவது,

உணவுப் பொருட்கள் சுத்தமும் தரமும் உத்திரவாத மிக்கவையாக இருக்க வேண்டும். விநியோகஸ்தர்கள், சில்லறை விற்பனையாளர்கள் ஆகியோர் பொருளின் தரத்தை உறுதி செய்த பின்னரே விற்பனை செய்ய வேண்டும்.

தரமற்ற மற்றும் மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற உணவுப் பொருட்கள் விற்பனைக்காக வைத்திருப்பது கண்டறியப்பட்டால், கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரித்தனர். (எ)

# கொழும்பு வந்த துருக்கி கப்பல்



கொழும்பு, ஜூன் 15

துருக்கி கடற்படைக் கப்ப லான 'டி.சி.சி. புயுகடா' உத்தி யோகபூர்வ பயணத்தை மேற் கொண்டு கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது. நேற்றுச் சனிக்கிழமை நாட்டை வந்தடைந்த இந்தக் கப்பல் இலங்கை கடற்படை மரபு களுக்கமைய வரவேற்கப்பட்டது.

இந்தக் கப்பல் நாட்டில் தங்கியிருக்கும் காலத்தில் அதன் பணிக்குழுவினர் நாட்டின் பல பகுதிகளுக்குச் சென்று முக்கியமான இடங்களைப் பார்வையிடவும், இரு நாடுகளின் கடற்படைகளுக்கு இடையேயான நட்பை மேம்படுத்துவதற்காக இலங்கை கடற்படை ஏற்பாடு செய்யும் நிகழ்ச்சிகளில் பங்கேற்கவும் திட்டமிட்டுள்ளது.

மேலும் இக்கப்பல் தனது உத்தியோகபூர்வ பயணத்தை முடித்துக்கொண்டு நாளை திங்கட்கிழமை நாட்டிலிருந்து புறப்பட உள்ளதுடன், மேலும் இலங்கை கடற்ப டைக் கப்பலுடன் மேற்கு கடற்படை கட்டளைப்பகுதி யில் கடற்படைப் பயிற்சியில் ஈடுபடவும் திட்டமிடப்பட்டுள்ளது. (எ)

# மரணத்தின்...

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

தவறானவை என்றும், மீளவும் நிரூபிக்க முடியாதவை என்றும் கருதப்படுகிறது.

அதே நேரத்தில், சிலர் குவாண்டம் அறிவியல் மற்றும் மைக்ரோட்யூபியூல்கள் போன்ற நரம்பியல் அமைப்புகள் மூலம் அறிவுத் தன்மை (Consciousness) அண்டத்தில் ஒரு அடிப்படை சக்தியாக இருக்கலாம் என்றும், மரணத்திற்கு பின் அதன் சில வடிவங்கள் தொடர்ந்து இருக்கக்கூடும் என்றும் கூறுகிறார்கள். Dr. Stuart Hameroff மற்றும் Dr. Roger Penrose ஆகியோர் "Orch-OR" என்ற கொள்கையை முன்வைத்து, இந்த தியரியை சமர்ப்பித்துள்ளனர். ஆனால் இவை அனைத் தும் நிரூபிக்கப்படாத கருதுகோள்கள் மட்டுமே.

இறுதியாக, அறிவியல் மரணம் பற்றிய அளவிலான அறியப்பட்ட எல்லைகளை நாம் அடைந்திருக்கின்றோம். ஆனால், மரணம் தொடர்பான உண்மை அதன் நேரம், அறிவுத்தன்மையின் முடிவடைதல், ஆன்மா போன்ற உயிரின் உள் பொது உணர்வுகள் பற்றிய கேள்விகள் அனைத்தும் இன்னும் முழுமையாக பதில் பெறப்படாதவை.

அறிவியல் உலகில், மரணம் என்பது உயிரின் ஒழுங்கமைந்த அமைப்புகள் குலைவதையே குறிக்கிறது. அதாவது, உயிரணுக்களின் உட்சுழற்சி முடிவடைந்து, ஆன்ட்ரோபி எனப்படும் முறுக்கல் (disorder) நிலையை நோக்கி செல்லும் செயலாகும். ஆனால், இது மனிதன் மரணத்திற்கு பின் ஓர் எதார்த்த உணர்வு இல்லையென்று நிரூபிக்கவோ நிராகரிக்கவோ முடியாத நிலையை உருவாக்குகிறது.

இன்னும், நாம் உணர்வின் இயல்பு, சுயத்தின் தன்மை, நினைவு மற்றும் உறவுகளின் ஆழங்கள் பற்றி அறிவியலில் முழுமையாக புரிந்து கொள்ளவில்லை. எனவே, ஆன்மா பற்றி நிச்சயமாக மறுக்கும் குரலையும், அதை முழுமையாக ஏற்கும் ஆன்மீக குரலையும் ஒரே சமயம் விமர்சனம் செய்யும் திறன் அறிவியலுக்கு உள்ளது. ஆனால், அதன் விளக்கங்கள் எப்போதும் ஆதாரங்கள் மற்றும் சோதிக்கக் கூடிய தரவுகள் அடிப்படையிலேயே இருக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழத்தின்...

வெளியிட்டுள்ளார். கிளிநொச்சி கவின் கலை கல்லூரியையும் இவர் நிறுவியிருந்தார்.

யாழ்ப்பாணம் - வடமராட்சி - புலோலியை பிறப்பிடமாகக் கொண்ட பண்டிதர் பரந்தாமன் ஆசிரியராக பணியாற்றியிருந்தார். தமிழரின் விடுதலை போருக்கு பெரும் பங்காற்றிய அவர் நீண்டகாலம் கிளிநொச்சியில் வாழ்ந்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## என்னை...

தலைவருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் கொழும்பில் அவர் நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதன்போது, "ஜே. வி. பி.யின் செயல்பாட்டாளர்களே என்னை கைது செய்யுமாறு கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அரசாங்கத்தின் பல்வேறு தவறுகளை நான் ஆதாரத்துடன் நாட்டுக்கு வெளிப்படுத்துவதால்தான் என்னை கைது செய்வதற்கு தீவிர முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

நான் இனவாதத்தைத் தூண்ட முயற்சித்தேன் என்று குறிப்பிட்டு சிவில் மற்றும் அரசியல் உரிமைகள்மீதான சர்வதேச சட்டத்தின் கீழ் என்னை கைது செய்ய அரசாங்கம் திட்டமிட்டுவருகிறது.

இந்த சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டால் நீண்ட காலம் பிணை இன்றி என்னை விளக்கமறியலில் வைக்கமுடியும் என்பதே அரசாங்கத்தின் திட்டமாகும். அந்தத் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்காகவே எனக்கெதிராக இரு ஆர்ப்பாட்டங்களும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. சோதனையின்றி விடுவிக்கப்பட்ட கொள்கலன்கள் தொடர்பில் என்னிடம் வாக்குமூலம் பெற்று அதன் பின்னர் கைது செய்வதே இதன் நோக்கமாகும்.

ஆனால், அரசாங்கத்தின் திட்டத்துக்கமைய என்னை கைதுசெய்ய முடியாது. காரணம் என்மீது அவ்வாறு எந்தக் குற்றச்சாட்டுக்களும் முன்வைக்கப்படவில்லை. நான் எந்தவகையில் இனவாதத்தைத் தூண்டியிருக்கிறேன் என்பதை இவர்கள் முதலில் தெளிவுபடுத்த வேண்டும். கொள்கலன்களில் ஆயுதங்கள் இருந்தன என்று நான் கூறினேன் என்று தெரிவித்தனர். ஆனால், இது தொடர்பில் சுங்க அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் அமில சஞ்சீவ வால்தான் முதன் முதலில் சந்தேகம் வெளியிடப்பட்டது.

ஜனாதிபதி தனது ஜேர்மன் பயணத்தில் விடுதலைப் புலிகள் அமைப்பின் நெடியவன் என்பவரை சந்திக்கவிருக்கிறார் என்று சமூக வலைத்தளங்களில் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன என்று நான் தெரிவித்திருந்தேன். இதனை அடிப்படையாகக் கொண்டும் என்னை கைதுசெய்ய முடியுமா என்று கலந்தாலோசித்து வருகின்றனர். என்னை எவ்வாறு கைது செய்வது என்பது குறித்து சிந்திப்பதை விடுத்து, வெளியாகியுள்ள இந்த செய்திகள் குறித்து உண்மையை வெளிப்படுத்துமாறு ஜனாதிபதியிடம் கேட்டுக் கொள்கிறோம்.

எவ்வாறிருப்பினும், அரசாங்கம் திட்டமிடுவதைப் போன்று என்னை ஒருபோதும் கைதுசெய்ய முடியாது. நான் ஒரு சட்டத்தரணி என்பதால் மிகுந்த அவதானத்துடன் சொற்களை அல்லது வசனங்களைப் பிரயோகிப்பேன். பிள்ளையானை போன்று என்னையும் சட்டத்துக்கு விரோதமாகக் கைது செய்து மக்களுக்கு உண்மைகளை வெளிப்படுத்துவதை தடுத்து வைப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டிருக்கக் கூடும்.

உதய கம்மன்பிலவை சிறையிலடைப்பதாகவோ அல்லது சுட்டுக் கொல்வதாகவோ கூறி மிரட்ட முடியாது என்பதை ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவிடம் தெளிவாகக் கூறிக் கொள்கிறேன் - என்றார். (ஐ)

## கடற்படைக்கு...

மன்னாரில் நேற்று தனது கட்சி பணிமனையில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார்.

ஜனாதிபதி அநுர குமார ஆட்சிக்கு வந்ததன் பின் முப்படையினர் வசமுள்ள காணிகளை விடுவிப்பதாக தெரிவித்து இருந்தார். இருந்தபோதிலும் பல இடங்களில் அது நடைபெறவில்லை.

இந்த நிலையில், மன்னார் பள்ளிமுனை கடற்கரை வீதியில் அமைந்துள்ள கடற்படை முகாம் அமைக்கப்பட்டுள்ள மக்களின் காணிகள் குறித்து நாங்கள் பாராளுமன்றத்தில் பேசியிருந்தோம். ஜனாதிபதிக்கும் இது தொடர்பாக கடிதங்கள் அனுப்பி இருந்தோம்.

ஆனால், தற்போது இந்த கடற்படை முகாம் அமைந்திருக்கும் காணிகளை வருகின்ற 20ஆம் திகதி அளவீடு செய்யப் போவதாக துண்டுப்பிரசுரம் ஒட்டப்பட்டு இருக்கிறது. இதனை ஒரு போதும் நாங்கள் அனுமதிக்கப்போவதில்லை. மக்கள் இதற்கு எதிராக நிச்சயம் போராடுவார்கள்.

இது சம்பந்தமாக நாங்கள் ஜனாதிபதிக்கும் தெரிவிக்க இருக்கிறோம். அதே போன்று அபிவிருத்தி குழுத் தலைவருக்கும் நாங்கள் இது சம்பந்த மாக முறைப்பாடு செய்ய இருக்கிறோம். இது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

அத்துடன், பள்ளிமுனை மக்களின் காணிகளை உரிமையாளர்களிடமே மீண்டும் வழங்கவேண்டும். கடற்படை அதை அபகரிக்கும் செயல்பாட்டை நாங்கள் வன்மையாக கண்டிப்பதுடன், மக்கள் போராட்டம் வெடிக்கும் வாய்ப்பை உருவாக்க வேண்டாம் என்றும் கோருகிறோம் - என்றார். (ஐ)

## நாங்கள்...

பரப்பில் இருந்து ஓரங்கப்பட்ட - துரோகியென முத்திரை குத்தப்பட்ட தரப்புடன் அதிகாரத்துக்காக கூட்டுச் சேர்வது சாக்கடை அரசியலாகும். அப் படியான அரசியலை முன்னெடுக்கும் தரப்பின் முகத்திரை தற்போது கிழிந்து விட்டது என்றும் அவர் கூறியுள்ளார்.

சாவகச்சேரியில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "நாடு தழுவிய ரீதியில் உள்ளூராட்சி சபைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. வடக்கிலும் இதற்குரிய நடவடிக்கை நடைபெறுகிறது. தெற்கில் கடைப்பிடித்த அணுகுமுறையை இது விடயத்தில் நாம் வட, கிழக்கில் கடைப்பிடிக்கவில்லை. இங்கு நடுநிலை வகித்தோம். நாம் வாக்கெடுப்பில் பங்கேற்றிருந்தால் இங்குள்ள தமிழ் கட்சிகளின் கனவு சிதைக்கப்படும். மனக்கோட்டை மண்கோட்டையாக மாறிவிடும் என்பதை சொல்லி வைக்க விரும்புகிறோம்.

மக்களுக்கு சேவை செய்வதே எமது முதன்மை நோக்கமாகும். உள்ளூராட்சி சபைகள் ஊடாக மக்களுக்கு கிடைக்கப் பெறும் சேவைகள் சரியாக சென்றடைய வேண்டும். அதற்காக எமது உறுப்பினர்கள் தீவிரமாக செயற்படுவார்கள்.

இதேபோல ஊழல், மோசடிகள் இடம் பெறும் பட்சத்தில் அவற்றை தடுத்து நிறுத்துவதற்கும் எமது உறுப்பினர்கள் செயல்படுவார்கள். மக்களை ஏமாற்றும் அரசியலை நாம் முன்னெடுக்கவில்லை. சாக்கடை அரசியல் செய்யவும் தயாரில்லை. அவ்வாறு செய்ய நினைத்திருந்தால் யாழ். மாநகரில் இன்று வேறொரு நபரே மேயராக வந்திருப்பார்.

கடந்த காலங்கள் முழுவதும் தமிழ்த் தேசியப் பரப்பில் இருந்து ஓரங்கட்டப்பட்ட - துரோகிகள் என முத்திரை குத்தப்பட்ட - மக்களுக்கு எதிராக அராஜகங்களை கட்டவிழ்த்து விட்டவர் - ஊடகவியலாளர்களை கொன்றவர் எனக் குற்றஞ்சாட்டப்பட்டவர்களுடன் கூட்டு சேரும் நிலைமை காணப்படுகிறது. இதனை மக்களும் இன்று புரிந்து கொண்டுள்ளனர். மக்கள் தேவைகளைப் பூர்த்திசெய்துகொள்வதற்காக அல்ல, தமது அரசியலை தக்கவைத்துக்கொள்வதற்காகவே இவர்கள் இவ்வாறு ஆட்சி அமைக்கின்றனர் - என்றும் கூறினார்.

# உள்ளூராட்சி மன்ற ஆணையாளர்கள் சர்வாதிகாரமாக செயல்படுகின்றனர்!

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 15

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தலைவர்கள், பிரதி தலைவர்களை தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பின்போது குறித்த உள்ளூராட்சி மன்றங்களுக்கான ஆணையாளர்கள் சர்வாதிகாரத்துடன் செயல்படுகின்றனர். இவர்களுக்கு எதிராக நீதிமன்றத்தின் ஊடாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார கூறியுள்ளார்.

நேற்றைய தினம் அவர் குருநாகலில் செய்தியாளர்களை சந்தித்தபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடமேல் மற்றும் வடமத்திய மாகாணங்களிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கான தலைவர்கள், பிரதி தலைவர்களை தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பின்போது குறித்த உள்ளூராட்சி மன்றங்களுக்கான ஆணையாளர்கள் சர்வாதிகாரத்துடன் செயல்படுகின்றனர். இந்தத் தெரிவுகள் தொடர்பில் பொது நிர்வாக அமைச்சால் ஆலோசனை வழிகாட்டல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அதற்கமைய இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமா இல்லையா என்பது குறித்து கருத்து கோரல் பகிரங்கமாகவே முன்னெடுக்கப்படவேண்டும். இதற்கு இரகசிய கருத்து கோரலை கோரமுடியாது. உறுப்பினர்கள் பகிரங்கமாக தமது கைகளை உயர்த்தி வாக்களிக்க வேண்டும்.

ஆனால், குருநாகல், புத்தளம், அநுராதபுரம் மற்றும் பொலநறுவை மாவட்டங்களில் உள்ளூராட்சி ஆணையாளர்கள் அரசாங்கத்துக்கு சார்பாக அரசாங்கத்தின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக தவறான முறைமையை நடைமுறைப்படுத்துகின்றனர்.

இது தொடர்பில் எதிர்க்கட்சி என்ற ரீதியில் கடும் நடவடிக்கைகளை முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளோம். இது தொடர்பில் பொது நிர்வாக செயலாளருக்கு தெளிவுபடுத்தியிருக்கிறோம். உள்ளூராட்சி மன்ற சட்டங்களுக்கமைய செயல்படுமாறு வலியுறுத்துகின்றோம்.

நீதிமன்றத்தை நாடி இந்த அநீதிக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்போம். அத்துடன், கொழும்பு மாநகர சபை முதல்வர், பிரதி முதல்வர் தெரிவுக்கான வாக்கெடுப்பின்போது ஆணையாளர்கள் முறையாக செயல்படுவார்கள் என்று நம்புகிறோம் - என்றார். (ஐ)

# பொல்லால் தாக்கி வயோதிபர் கொலை!

களுத்துறை, ஜூன் 15

களுத்துறையில் ஹொரணை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தம்பர பிரதேசத்தில் பொல்லால் தாக்கி வயோதிபர் ஒருவர் கொலை செய்யப்பட்டதாக ஹொரணை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கொலைச் சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றது.

கொலை செய்யப்பட்டவர் தம்பர, மீவனபலான பிரதேசத்தைச் சேர்ந்த 63 வயதுடையவர் ஆவார்.

சம்பவதினத்தன்று, கொலை செய்யப்பட்ட வயோதிபர் தனது நெருங்கிய உறவினருடன் இணைந்து மதுபானம் அருந்திக்கொண்டிருந்தார். இதன்போது, வயோதிபருக்கும் உற வினருக்கும் இடையில் தகராறு ஏற்பட்டுள்ளது.

தகராறின் போது சந்தேக நபரான உறவினர், வயோதிபரை பொல்லால் தாக்கி கொலை செய்துள்ளார். (எ)

## 223 உறுப்பினர்...

கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் குறிப்பிட்டார்.

நாட்டில் 339 உள்ளூராட்சி மன்றங்களுக்கு கடந்த மே 6ஆம் திகதி தேர்தல் நடைபெற்றது. இதைத் தொடர்ந்து, தற்போது உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# திருட்டுடன் தொடர்புடையவர் போதைப்பொருளுடன் கைது!

கொழும்பு, ஜூன் 15

திருட்டு சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் போதைப் பொருளுடன் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

கம்பஹா - கிரிபத்கொடை பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரிலேயே சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

கைதுசெய்யப்பட்டவர் கொழும்பு - பன்னிப்பிட்டிய பிரதேசத்தை சேர்ந்தவராவார். அவரிடமிருந்து, ஐஸ் போதைப் பொருளும் கைப்பற்றப்பட்டது.

சந்தேக நபர் களுத்துறை பாணந்துறை தெற்கு பொலிஸ் பிரிவில் கடந்த 12 ஆம் திகதி 4 இலட்சத்து 91 ஆயிரத்து 967 ரூபாய் பெறுமதியான பொருட்களை திருடியிருந்தார் என்று பொலிஸார் கூறினர். (ஐ)

## யாழ்...

சேவையை மீண்டும் தினசரி முன்னெடுக்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்த மாதத்துக்குள் இந்த அதிவேக ரயில் சேவை தினசரி இயக்கப்படும் என்றும் புகையிரத திணைக்களம் அறிவித்துள்ளது. (ஐ)

## பொன்னாலை...



கிடைத்த இரகசிய தகவலை அடுத்தே இந்த கஞ்சா கடத்தல் முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது. கைப்பற்றப்பட்ட கஞ்சா, வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

# ஜனாதிபதி நிதிய சேவை இனி இணைய வழியில்!

கொழும்பு, ஜூன் 15

**ஜனாதிபதி நிதியத்தால் பொதுமக்களுக்கு வழங்கப்படும் அனைத்து சேவைகளும் எதிர்வரும் 21ஆம் திகதி முதல் இணைய வழியில் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.**

ஜனாதிபதி நிதியிலிருந்து பொது மக்களுக்கு மருத்துவ உதவி வழங்கும் சேவைக்கான விண்ணப் பங்கள் பெப்ரவரி 07 ஆம் திகதி முதல் நாட்டின் அனைத்து பிரதேச செயலகங்கள் ஊடாகவும் பெறப்படவுள்ளன.

இந்த வேலைத்திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருவதால், ஜனாதிபதி நிதியத்தின் ஏனைய சேவைகளையும் இவ்வாறு விரிவுபடுத்த அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன்படி, வறுமை ஒழிப்பு நிவாரணங்கள், கல்வி புலமைப் பரிசில் வழங்குதல், கல்வியில் சிறந்து விளங்கும் பிள்ளைகளை பாராட்டுதல், விசேட தேவைகள் உள்ளவர்களுக்கு வழங்கப்படும் நிவாரணங்கள், காட்டு யானைகளால் பாதிக்கப்படும் பிள்ளைகளுக்கு வழங்கப்படும் நிவாரண உதவித்தொகை, தேசிய அளவில் அல்லது நாட்டுக்காக சேவை செய்தவர்களை பாராட்டுதல், விபத்துகள் - அனர்த்தங்களின் போது வழங்கப்படும் நிவாரணங்கள் உள்ளிட்ட ஜனாதிபதி நிதியத்தால் செயல்படுத்தப்படும் அனைத்து சேவைகளுக்கும், பொது மக்களுக்கு நாட்டின் அனைத்து பிரதேச செயலகங்களின் ஊடாக இணைய வழியில் விண்ணப்பிக்க முடியும்.

இந்த வேலைத்திட்டத்துடன் 47 வருட காலமாக கொழும்புக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்த ஜனாதிபதி நிதியத்தின் அனைத்து சேவைகளையும், நாட்டின் அனைத்து பிரதேச செயலகங்கள் ஊடாகவும் பெற்றுக்கொள்ள முடியும்.

ஜனாதிபதி தலைமையிலான ஜனாதிபதி நிதியத்தின் நிர்வாகக் குழு மேற்கொண்ட தீர்மானத்தின் படி, பொதுமக்களுக்கு இந்த வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருப்பதுடன், இதன் ஊடாக அதிகமான மக்களுக்கு நிவாரணங்களை வழங்கவும் எதிர்பார்க்கப்படுகிறது. இதன் ஊடாக ஜனாதிபதி நிதியத்தை தவறாக பயன்படுத்துவதற்கான சந்தர்ப்பங்கள் கட்டுப்படுத்தப்படுகின்றன என்று ஜனாதிபதி நிதியம் தெரிவித்துள்ளது. (ஐ)

## இருபாலையில் ஒருவர் வெட்டிப் படுகொலை!

யாழ்ப்பாணம், ஜூன் 15

இருபாலை - மடத்தடியில் இடம்பெற்ற வாள் வெட்டில் ஒருவர் உயிரிழந்தார். 43 வயது நபரே இவ் வாறு உயிரிழந்தார்.

நேற்றுமுன்தினம் இரவு கொல்லப்பட்டவரின் வீட்டுக்குள் நுழைந்த சிலர் அவரை வாளால் வெட்டினர். இதில் காயமடைந்தவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோதிலும் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இந்த சம்பவம் தொடர்பில் இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். அவர்களிடம் தொடர்ந்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ஐ)

## வரணி விபத்தில் இருவர் காயம்!

தென்மராட்சி, ஜூன் 15

கழிவகற்றும் பவுஸர் வாகனமும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் மோதிய விபத்தில் இருவர் காயமடைந்துள்ளனர்.

வரணி - வேம்பிராய் - இயற்றாலை பகுதியில் நேற்று காலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

சாவகச்சேரி பிரதேச சபைக்கு சொந்தமான கழிவகற்றும் பவுசர் வாகனம் வேம்பிராய் வீதியிலிருந்து தும்புருவில் வீதியால் திரும்ப முற்பட்ட வேளை பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் பவுஸர் வாகனத்துடன் மோதி விபத்துக்கு உள்ளானது.

இதில், மோட்டார் சைக்கிளில் சென்ற இரு இளைஞர்கள் காயமடைந்து சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ)

## நாளை மறுதினம் முதல் கூடுகிறது பாராளுமன்றம்

கொழும்பு, ஜூன் 15

நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முதல் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை கூடவுள்ளதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்துள்ளார்.

சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் கூடிய பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, பாராளுமன்ற அமர்வு இடம்பெறும் இந்த ஒவ்வொரு தினத்திலும் காலை 9.30 முதல் மு.ப. 10.00 மணி வரை நிலையியற் கட்டளை 22 இல் குறிப்பிடப்பட்டுள்ள (1) முதல் (6) வரையான பாராளுமன்ற அலுவல்களுக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மு.ப. 10.00 மணி முதல் 11.00 மணி வரை வாய்மூல விடைக்கான வினாக்களுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், மு.ப. 11.00 மணி முதல் மு.ப. 11.30 மணி வரை நிலையியற் கட்டளை 27(2) இன் கீழ் வினாக்களுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## ஓட்டோவில் எரிந்த நிலையில் பொலிஸ் அதிகாரியின் சடலம்

நீர்கொழும்பு, ஜூன் 15

நீர்கொழும்பு - கொச்சிக்கடை, கம்மல்துறை கடற்கரைப் பகுதியில் நேற்றுச் சனிக்கிழமை காலை ஓட்டோவுடன் எரிந்த நிலையில் பொலிஸ் அதிகாரி ஒருவரின் சடலம் மீட்கப்பட்டதாக கொச்சிக்கடை பொலிஸார் தெரிவித்தனர்.

நீர்கொழும்பு பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவில் கடமையாற்றிய நீர்கொழும்பு தலுபத பிரதேசத்தைச் சேர்ந்த ஜயந்த புஷ்பகுமார (வயது -56) என்ற பொலிஸ் அதிகாரியே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

சடலமானது பிரேத பரிசோதனைக்காக நீர்கொழும்பு பொது மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பில் இதுவரை எந்தவித தகவல்களும் கிடைக்க வில்லை என பொலிஸார் கூறினர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நீர்கொழும்பு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயம் மற்றும் கொச்சிக்கடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)


## ‘நீதிக்கான நீண்ட காத்திருப்பு’ ஆவணப்படம் திரையிடப்பட்டது!

வவுனியா, ஜூன் 15

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் பிரச்னைகளை மையமாகக் கொண்ட ‘நீதிக்கான நீண்ட காத்திருப்பு’ ஆவணப்படம் வவுனியாவில் நேற்று சனிக்கிழமை திரையிடப்பட்டது.

‘எழுநா’ வின் தயாரிப்பில் வட, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் ஒழுங்கமைப்பில் இந்நிகழ்வு நடைபெற்றது.

இந்த ஆவணப்படம் இசைப்பிரியனால் தொகுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அவர் மரணித்து விட்ட நிலையில் அவருக்கான அஞ்சலி நிகழ்வும் நேற்று நடைபெற்றது.



நிகழ்வில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் பெற்றோர்கள், உறவினர்கள், குரல் அற்றவர்களின் குரல் அமைப்பின் தலைவர் கோமகன், பாராளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம், மற்றும் சமூக ஆர்வலர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ)

## கடலுக்கு செல்ல வேண்டாம்; மீனவர்களுக்கு எச்சரிக்கை!

கொழும்பு, ஜூன் 15

பலத்த காற்று மற்றும் கடல் கொந்தளிப்பு தொடர்பில் வளி மண்டலவியல் திணைக்களம் சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இன்று பிற்பகல் 2.30 மணி வரை இந்த எச்சரிக்கை நடைமுறையில் இருக்கும் என்றும் அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சிலாபம் முதல் புத்தளம் வரையிலும், மன்னார் முதல் காங்கேசன்துறை வரையிலும் மாத்தறை முதல் அம்பாந்தோட்டை வழியாக பொத்துவில் வரையிலுமான கடல் பரப்புகளுக்கே இந்த எச்ச ரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த கடல் பகுதிகளில் காற்றின் வேகம் சில நேரங்களில் மணிக்கு 60-70 கி.மீ வரை அதிகரிக்கும் என்பதுடன், சில நேரங்களில் கடல் மிகவும் கொந்தளிப்பாக இருக்கக் கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அந்தப் பகுதிகளில் உள்ளவர்கள் மிகவும் அவதானமாக செயல்படுமாறு திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

மேலும் மீனவர்கள் மற்றும் கடற்றொழிலாளர்கள் மறு அறிவித்தல் வரை கடலுக்கு செல்ல வேண்டாம் என்றும் அறிவுறுத்தியுள்ளது. (ஐ)

## காணாமல் போன வங்கி அதிகாரி சடலமாக மீட்பு

கொழும்பு, ஜூன் 15

காணாமல்போன வங்கி அதிகாரி தனது தாயாரின் வீட்டிலிருந்து மர்மமாக உயிரிழந்த நிலையில் அவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் மொனராகலை - பிபில, யல்கும்புர பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயதுடைய வங்கி அதிகாரி ஒருவராவார்.

வேலை நிமித்தம் கொழும்பு செல்வதாகக் கூறிய அவர் பதுளையிலுள்ள தனது தாயாரின் வீட்டுக்கு சென்றுள்ளார். இவ்வாறு சென்றவர் குறித்து தகவல்கள் இல்லாமையால் குடும்பத்தினர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர்.

பொலிஸாரின் விசாரணையில் வங்கி அதிகாரி பதுளையில் அவரின் தாயாரின் வீட்டிலிருந்து சடலமாக மீட்கப்பட்டார். சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## போதைப்பொருள் விற்ற தம்பதியர் கைதாகினர்!

மட்டக்களப்பு, ஜூன் 15

போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்த கணவன், மனைவியை மட்டக்களப்பு - வாழைச்சேனை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வாழைச்சேனை - பிறைந்துறைச்சேனையை சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

சூட்சுமமான முறையில் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்த இவர்களை, அந்தப் பகுதியினர் அவதானித்தனர். இதைத் தொடர்ந்து, அவர்களை வீட்டுக்குள்ளேயே தடுத்து வைத்துள்ளனர்.

இது தொடர்பில் வாழைச்சேனை பொலிஸாருக்கு தகவல் அளிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து, அங்கு சென்ற பொலிஸார் சந்தேகநபர்களை கைது செய்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 15.06.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.